இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2023

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 84 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – ஐப்பசி 16 – வியாழக்கிழமை 02 நவம்பர் 2023 – சென்னை 16 பக்கங்கள் Established:10.8.1942 - Volume:82 - Issue 84: Thiruvalluvar Year - 2054 - Ayppasi 16 - Thursday 02 November 2023 - Chennai 16 Pages ₹ 5.00

### எதிர்க்கட்சித் தலைவர்களின் கைபேசி ஒட்டுக்கேட்பு - ஒன்றிய பா.ஜ.க. அரசுக்கு தோல்வி பயம் வந்துவிட்டது! வருகிற தேர்தலில் -

# “இந்தியா” கூட்டணி வெற்றிதான் இந்தியாவுக்கு பாதுகாப்பு!

## ஆ.கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ. இல்ல மணவிழாவில் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை!

**சென்னை, நவ. 2 -**

**“எதிர்க்கட்சித் தலைவர்களின் கைபேசி ஒட்டுக் கேட்கப்படுகிறது என்றும், ஒன்றிய பா.ஜ.க. அரசுக்கு தோல்வி பயம் வந்துவிட்டது” என்றும் “வருகிற தேர்தலில் “இந்தியா” கூட்டணி வெற்றி பெற்றால்தான் இந்தியாவுக்கு பாதுகாப்பு” என்றும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சட்டமன்ற உறுப்பினர் கிருஷ்ணசாமி இல்ல திரு மண விழாவை நடத்தி வைத்து, மணமக்களை வாழ்த்தி உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (1.11.2023) சென்னை, திருவான்மியூர் ஸ்ரீ இராமச்சந்திரா கன்வென்ஷன் சென்டரில் நடைபெற்ற சட்டமன்ற உறுப்பினர் கிருஷ் ணசாமி அவர்களின் இல்ல திருமண விழா வில் ஆற்றிய உரை வருமாறு:-

நம்முடைய கிருஷ்ணசாமி அவர்களு டைய அருமை மகள் தாரணி அவர்களுக் கும், முருகன் – மஞ்சுளா தம்பதியின் மகன் மருத்துவர் எம்.பரத் கௌசிக் அவர்களுக்கும் நம்முடைய அன்பான வாழ்த்து களோடு மணவிழா நிகழ்ச்சி நிறை வேறியிருக்கிறது.

**சுயமரியாதை உணர்வோடு நடந்துள்ள சீர்திருத்தத் திருமணம்!**

இந்த மணவிழா நிகழ்ச்சிக்கு தலைமை பொறுப்பேற்று மண விழாவை நடத்தி வைத்து, அதேநேரத்தில் மணமக்களை வாழ்த்தக்கூ டிய ஒரு சிறப்பான வாய்ப்பை பெற்றமைக்கு நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (1.11.2023) சென்னையில், சட்டமன்ற உறுப்பினரும், ஆதிதிராவிடர் நலக்குழுச் செயலாளருமான ஆ.கிருஷ்ணசாமி அவர்களின் மகள் டாக்டர் ஏ.கே.எஸ். தாரணி – டாக்டர் எம். பரத் கௌசிக் ஆகியோரது திருமணத்தை தலைமையேற்று நடத்தி வைத்து, மணமக்களை வாழ்த்தினார். உடன் நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன், கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு, கழக முதன்மைச் செயலாளர் – அமைச்சர் கே.என்.நேரு, கழக துணைப் பொதுச் செயலாளர் க.பொன்முடி, அமைச்சர் எ.வ.வேலு, கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் உள்ளிட்ட அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற இந்நாள், முன்னாள் உறுப்பினர்கள், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியின் தேசியத் தலைவர் கே.எம்.காதர் மொகிதீன், விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான தொல். திருமாவளவன் உள்ளிட்ட கட்சி தலைவர்கள் மற்றும் மணமக்களின் குடும்பத்தினர் உள்ளனர்.

நடைபெற்றிருக்கக்கூடிய திருமணம் என்பது ஒரு சீர்திருத்த திருமணம். சுயமரியாதை உணர்வோடு நடைபெற்றிருக்கக்கூடிய திரு மணம். இதுபோன்ற திருமணங்களில் நாம் பங்கேற்கின்ற நேரத்தில் வாழ்த்தக்கூடிய வாய்ப்பு கிடைத்தால் நிச்சயமாக ஒரு செய் தியை பதிவு செய்யாமல் நான் இருந்தது இல்லை. அந்த வரலாற்றுச் செய்தி என்ன வென்று கேட்டால், இன்றைக்கு நடைபெற்றி ருக்கக்கூடிய இந்த சீர்திருத்த திருமணம் அங்கீகாரத்தை பெறமுடியாத நிலையில் இருந்தது.

**ஜனநாயகத்துக்கு முக்கியத்துவம் அளித்தவர் கலைஞர்!**

1967-க்கு முன்னால் நடைபெற்றிருக்கும் என்று சொன்னால், அந்த திருமணங்கள் சட்டப்படி, முறைப்படி செல்லுபடியாகும் என்ற அங்கீகாரத்தை ...

ஆனால் 1967-ல் தமிழ்நாட்டில் திராவிட முன்னேற்றக் கழகம் அமோக வெற்றி பெற்று ஆட்சிப் பொறுப்பை ஏற்று ஆட்சியின் தலைவராக தமிழக முதல்வராக அறிஞர் அண்ணா அவர்கள் அந்தப் பொறுப்பை ஏற் றுக்கொண்டு முதலமைச்சராக முதன் முதலில் சட்டமன்றத்தில் நுழைந்து சீர்திருத்த திருமணங்கள் அனைத்தும் சட்டப்படி செல் லுபடியாகும் என்கின்ற அந்த தீர்மானத்தை கொண்டு வந்து அவர் நிறைவேற்றி தந்தார். ஆகவே, இன்றைக்கு நடைபெற்றிருக்கக்கூ டிய இந்த சீர்திருத்த திருமணம் முறைப்படி, சட்டப்படி செல்லுபடியாகும் என்ற அங்கீகா ரத்தோடு நடந்தேறியிருக்கிறது. இது சீர்திருத்த திருமணம் மட்டுமல்ல, சுயமரியாதை உணர்வோடு நடைபெற்றிருக்கக்கூடிய திரு மணம். இன்னும் பெருமையோடு சொல்ல வேண்டுமென்றால், தமிழ் திருமணம், இந்த தமிழுக்கு பெருமைச் சேர்க்கின்ற வகை யில், செம்மொழி என்ற அங்கீகாரத்தை பெற் றுத் தந்தவர் நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள் என்பதை நாடு மறந்துவிட முடி யாது. அப்படிப்பட்ட தமிழ் திருமணமாக, சீர் திருத்த திருமணமாக, சுயமரியாதை உணர் வோடு நடைபெறக்கூடிய திருமணமாக நம்முடைய அருமை சகோதரர் கிருஷ்ண சாமி அவர்கள் தன்னுடைய அன்பு மகளுக்கு இன்றைக்கு சிறப்போடு நடத்தியிருக்கிறார்.

‘பூந்தண்மல்லி’ என்பதுதான் அதன் உண்மை பெயராக இருந்தது. இன்றைக்கு பூந்தமல்லி, பூந்தமல்லி என்று

தொடர்ச்சி 3 ஆம் பக்கம்

---

### மூத்த தலைவர் சங்கரய்யாவுக்கு ‘கௌரவ டாக்டர்’ பட்டம் வழங்க ஆளுநர் மறுப்பதா? மதுரை காமராசர்

# பல்கலைக்கழக பட்டமளிப்பு விழா புறக்கணிப்பு!

## உயர் கல்வித் துறை அமைச்சர் க.பொன்முடி அறிவிப்பு

**சென்னை, நவ. 2 -**

**மூத்த தலைவர் என். சங்கரய்யா வுக்கு கௌரவ டாக்டர் பட்டம் வழங்க ஆளுநர் மறுப்பதைக் கண்டித்து மதுரை காமராசர் பல்கலைக் கழக பட்டமளிப்பு விழாவை புறக்கணிக்கப் போவதாக உயர் கல்வித் துறை அமைச்சர் க.பொன்முடி அறிவித்துள் ளார்.**

உயர்கல்வித் துறை அமைச்சர், முனைவர் க.பொன்முடி நேற்று (01.11.2023) தலைமைச் செயலகத்தில் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டி வருமாறு :-

நாளை நடைபெறவிருக்கின்ற மதுரை காமராசர் பல்கலைக்கழக பட்ட மளிப்பு விழாவை இணைவேந்தர் என்ற முறையில் புறக்கணிப்பதாக முடி வெடுத்திருக்கிறேன். ஏனென்றால் உங் களுக்குத் தெரியாதது அல்ல, நாளை நடைபெறவிருக்கிற பட்டமளிப்பு விழா வில் மரியாதைக்குரிய அய்யா சங்க ரய்யா அவர்களுக்கு கௌரவ முனை வர் பட்டம் வழங்க வேண்டும் என்று அந்த பல்கலைக்கழகத்தினுடைய ஆளவை மன்றம் (Syndicate), ஆட்சிமன்றம் (Senate) இரண்டுமே தீர்மானங்களை நிறைவேற்றி ஆளுநருக்கு அனுப்பி இருந்தோம். அதற்கு பிறகும் அவர் அதை நிராகரித்தார். அதுவும் குறிப்பாக, இந்த தீர்மானங்களை 18.08.2023 நடைபெற்ற காமராசர் பல்கலைக்கழக ஆட்சிக்குழு, அதேபோல 20.09.2023 நடைபெற்ற அந்த பல்கலைக்கழகத்தின் ஆட்சிப் பேரவைக்குழு கூட்டத்தில் நிறை வேற்றப்பட்டு ஆளுநருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

**சுதந்திர போராட்டத்தில் ஈடுபட்டவர்!**

சங்கரய்யா அவர்களை பற்றி ஆளு நருக்கு தெரியாவிட்டால், கேட்டிருக்க வேண்டும். சங்கரய்யா 1922ல் பிறந்த வர். அமெரிக்கன் கல்லூரியில் பட்டப் படிப்பில் இறுதியாண்டு படித்துக் கொண் டிருந்தபோது, அந்த படிப்பை நிறுத்திவிட்டு



சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டு ஐந்து ஆண்டுகள் சிறையில் இருந்தவர். அது மட்டுமல்ல, அதற்கு பிறகும் கூட சமூக நீதிக்காக, பொருளாதார சமத்துவத்திற் காக, பலமுறை போராட்டங்களை சந் தித்து, அவர் நான்கு ஆண்டு காலம் சிறையில் இருந்தவர். ஆகவே, 9 ஆண்டு காலம் சிறையில் இருந்தவ ருக்கு, சுதந்திர போராட்ட வீரராக இருந்த ஒருவருக்கு இன்றளவும் 102 வயதிலும், மக்களுக்காக குரல் கொடுத்துக் கொண் டிருக்கிற அவருக்கு ஒரு கௌரவ முனைவர் பட்டம் கொடுக்க வேண்டும் என்று ஆளவை மன்றமும் ஆட்சி மன் றமும் தீர்மானம் நிறைவேற்றி அனுப் பிய பிறகும், மறுத்திருக்கிறார். அவர் மறுத்ததற்கு பிறகு மீண்டும் ஒருமுறை அந்த ஆளவை மன்றம் மற்றும் ஆட்சி மன்றம் அந்த தீர்மானத்தை நிறை வேற்றி அனுப்பியிருக்கிறார்கள்.

**சமூக நீதி பேசுபவர்களை ஆளுநருக்குப் பிடிப்பதில்லை!**

அந்த பல்கலைக்கழகத்தின் விதி என்னவென்றால், மேற்படி கௌரவ பட் டம் வழங்கும் அதிகாரம் மதுரை காம ராசர் பல்கலைக்கழக சட்டம் 1965 அத் தியாயம் 20 தொகுதி 1ல் ஆட்சி பேர வைக்கு வழங்கப்பட்டுள்ளது. ஆளவை மன்றம் & ஆட்சி மன்றத்திற்குதான் அந்த அதிகாரம் இருக்கிறது. எந்த ஒரு சட்டமும் அவர் மதிப்பதில்லை. திராவிட மாடல், பொருளாதார சமத்துவம், சமூக நீதி ஆகியவற்றை எல்லாம் பேசுபவர் களை கண்டாலே அவருக்கு பிடிப்பதில்லை. அதனால்தான் கௌரவ முனைவர் பட் டம் கொடுக்க கூடாது என்ற எண்ணத் தில் அவர் இருக்கிறார். சுதந்திர போராட்ட வீரர்கள் எத்தனை பேர் இருக்கிறார்கள் என்று கேட்கிறார். தமிழ்நாடு மக்களுக் காக போராடிய சங்கரய்யா அவர்க ளுக்கு கௌரவ முனைவர் பட்டம் வழங்க மறுப்பதற்கான காரணம் என்ன? விளக் கம் கொடுக்கத் தயாரா? ஏன் கொடுக்க வில்லை என்று சொல்ல முடியுமா?

**பட்டம் கொடுக்க மறுக்கும் ஆளுநர்!**

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நீண்ட காலம், இந்த சமுதாயத்திற்காக போராடியவருக்கு முதன்முதலாக “தகைசால் தமிழர் விருது” வழங்கப்ப டும் என அறிவித்தார்கள். முதன்முதலாக சங்கரய்யா அவர்களுக்கு தகைசால் தமிழர் விருதை தமிழ்நாடு முதலமைச் சர் அவர்கள் வழங்கினார். அந்த விருதை வழங்குகிறபோது அவருக்கு கொடுக்கப்பட்ட 10 இலட்சம் ரூபாய் தொகையை கூட அவர் பெற்றுக் கொள் ளாமல், எனக்கு இவை வேண்டாம், நீங்கள் தங்களுடைய அரசு பணத்தி லேயே சேர்த்து ஏழை மக்களுக்கு உத வுங்கள் என்று சொன்ன சங்கரய்யா அவர்களுக்கு இன்று ஆளுநர் கௌரவ முனைவர் பட்டம் கொடுப்பதற்கு மறுக் கிறார்.

இந்த திராவிட மாடல் அரசு தமிழ் நாடு முதலமைச்சர் அவர்கள் சுதந்திர போராட்ட வீரர்களுக்கு மரியாதை கொடுப்பதில்லை என்று ஆளுநர் சொல் கிறார். அதற்கெல்லாம் விளக்கம் உங்க ளுக்கு தெரியும், நாங்கள் பலமுறை சொல்லிவிட்டோம். மருது சகோதர ருக்கு என்னென்ன செய்திருக்கிறார் என்பதும் உங்களுக்குத் தெரியும். சென் னையிலேயே மருது சகோதரருக்கு சிலை அமைத்துக் கொடுத்தவர் தமிழ் நாடு முதலமைச்சர் அவர்கள். அந்த அள வுக்கு சுதந்திர போராட்ட வீரர்கள் யாராக இருந்தாலும் அவர்களுக்கெல்லாம் உத வியது தான் நம்முடைய திராவிட மாடல் ஆட்சி. அண்ணாவாக இருந்தாலும், கலைஞராக இருந்தாலும், தளபதியாக இருந்தாலும், அனைவருக்கும் நல்லது செய்யவேண்டும் என்று நினைப்பவர்கள்.


**நடிப்புச் சுதேசிகள்!**

அந்த காலத்தில் பாரதியார் நடிப்புச் சுதேசிகள், நிறைய பேர் இருக்கிறார்கள் என்று பாடியிருக்கிறார். இப்போது நடிப் புச் சுதேசியர்களாக இந்த ஆளுநர் போன்றவர்கள் இருப்பது உண்மையி லேயே வருந்தத்தக்கது. ஒரு சுதந்திர போராட்ட வீரருக்கு, ஒரு பொதுவுடை மைவாதிக்கு, 102 வயதில் வாழ்ந்து கொண்டிருக்கிற ஒருவருக்கு கௌரவ முனைவர் பட்டம் கொடுக்காததற்கு கார ணம் என்ன? சொல்லச் சொல்லுங்கள். அதைச் சொல்வதற்கு அவருக்கு தைரி யம் இல்லை.

நான் உங்கள் மூலமாகவே அவ ருக்கு வேண்டுகோள் விடுத்தேன். இரண்டாவது முறையாகவும் வேண்டு கோள் விடுத்தேன். ஆனால் எதையும் அவருடைய செவிகளில் ஏற்கவில்லை. அவருக்கு எதுவும் தெரியாத காரணத்தி னால், அவர் தமிழக வரலாற்றைப் புரிந்து கொள்ளாமல்,

சங்கரய்யா அவர்களுக்கு கொடுக்க விருந்த இந்த கௌரவ முனைவர் பட் டம் கொடுப்பதற்கு அவர் மறுக்கிறார். இவரைப்போல உண்மையிலேயே சுதந்திரப் போராட்டத்திற்கு எதிரிகள் இருக்க முடியாது. காரணம் என்ன வென்றால், அவர் அந்த காலத்திலிருந்து ஆர்.எஸ்.எஸ்.ஸில் இருந்தவர். அவர் களுக்கு சுதந்திரப் போராட்ட வீரர்கள்

தொடர்ச்சி 4 ஆம் பக்கம்



இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

வியாழக்கிழமை 02-11-2023

# பிரதமருக்கு நினைவூட்டிய முதல்வர்

**மத்தியில் கூட்டாட்சி - மாநில சுயாட்சி என்பது திராவிட முன்னேற்றக் கழகத்தின் அடிப்படை முழக்கங்களில் ஒன்றாகும். ஆனால் மாநிலங்களில் சுயாட்சியையும், ஒன்றியத்தில் கூட்டாட்சித் தன்மையையும் பா.ஜ.க. சிதைத்து வருகிறது. நடக்க இருக்கும் நாடாளுமன்றத் தேர்தலில் இந்தியா கூட்டணி வெற்றி பெற்றால்தான், மாநிலங்கள் சுயமாக இயங்க முடியும் என்ற கருத்தை ஓங்கி ஒலித்திருக்கிறார் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள்.**

SPEAKING FOR INDIA - என்ற தனது தொடரின் மூன்றாவது பதிவில் 'மாநில சுயாட்சி' முழக்கத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒலித்திருக்கிறார். குஜராத் முதலமைச்சராக இருந்த போது நரேந்திரமோடி அவர்கள் சொன்னதை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நினைவூட்டி இருக்கிறார். பிரதமர் ஆவதற்கு முன்னால் தான் சொன்னதை மோடி அவர்கள் மறந்துவிட்டார் என்பதுதான் உண்மை.

பிரதமராக நரேந்திரமோடி இந்த பொறுப்புக்கு வருவதற்கு முன்னால் குஜராத் மாநிலத்தின் முதலமைச்சராக இருந்தார். 12 ஆண்டுகள் அந்த மாநிலத்தின் முதலமைச்சராக இருந்தார். அப்படி இருந்தவர், பிரதமராக வந்ததும் மாநிலங்களை வலிமைப்படுத்தும் செயல்களைத் தான் செய்திருக்க வேண்டும். 2014 ஆம் ஆண்டு தேர்தலுக்கு முன்பும் - வெற்றி பெற்ற பின்பும் மாநிலங்களை வலிமைப்படுத்துவேன் என்றுதான் சொன்னார். ஆனால் செய்யவில்லை.

"மாநிலங்களிடையே பல்வேறு பிரச்சினைகள் உள்ளன. மாநிலங்களுக்கு இடையே சில குழுக்களை அமைத்து அவற்றில் பேசி தீர்வு காணலாம்" என்று சென்னையில் 2014 ஏப்ரல் 14 அன்று மோடி பேசினார். அதற்கான எந்த முயற்சியாவது எங்காவது எடுக்கப்பட்டுள்ளதா?

2014 ஏப்ரல் 19 அன்று கொல்கத்தா பொதுக்கூட்டத்தில் பேசிய நரேந்திர மோடி, "பா.ஜ.க. ஆட்சிக்கு வந்த பிறகு மாற்றுக்கட்சி ஆட்சிப் பொறுப்பில் உள்ள மாநில அரசுகளை பழிவாங்க மாட்டேன். எந்த வகையிலும் மாநில அரசு பழிவாங்கப்படாது. என்னதான் அரசியல் வேறுபாடு இருந்தாலும், மத்திய மாநில உறவு சீர்குலைய இடம் தர மாட்டேன்" என்று பேசினார். அப்படித்தான் நான் இதுவரை நடந்து வருகிறேன் என்று அவரால் சொல்ல முடியுமா?

2014 ஏப்ரல் 23 அன்று 'தினமணி' நாளிதழுக்கு அளித்த பேட்டியில், "டெல்லியில் இருந்து இந்தியா முழுமைக்குமான திட்டமிடல் என்பது அகற்றப்பட்டு அந்தந்தப் பகுதிக்கு அது பற்றிய புரிந்துணர்வுள்ளவர் துணையோடு திட்டமிடுவதுதான் என் அணுகுமுறை" என்று குறிப்பிட்டார். இந்த நல்ல பிள்ளை வேஷம், பதவிக்கு வந்ததற்குப் பின்னால் எப்போதாவது நினைவுக்கு வந்ததா?

**"கூட்டாட்சித் தத்துவத்தை ஆதரிப்பவன் நான். மாநில உரிமைகளை மதிப்பதும் - மாநிலங்களை ஒருங்கிணைத்துத் திட்டங்கள் தீட்டுவதும் - எல்லாப் பிரச்சினைகளுக்கும் மாநில அரசுகள் டெல்லிக்குக் காவடி தூக்கும் நிலைமையை மாற்றி அதிகாரப் பகிர்வுக்கு வழிகோலுவதும்தான் எனது அணுகுமுறையாக இருக்கும். மாநில முதலமைச்சராக நான் அடைந்திருக்கும் 12 ஆண்டு கால அனுபவத்துடன் தேசியத் தலைமையை ஏற்பதால் மாநிலங்களின் பிரச்சினையும் எனக்குத் தெரியும். மத்திய அரசின் முக்கியத்துவமும் எனக்குப் புரியும்" - என்று பேட்டி அளித்தார் மோடி. பிரதமர் ஆனதும் அப்படி நடந்து கொண்டாரா?**

பிரதமராகப் பதவி ஏற்றதும் என்ன சொன்னார்? மாநில பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முன்னுரிமை தருவேன் என்று சொன்னார். அப்படி ஏதாவது செய்யப்பட்டதா இல்லை.

பிரதமர் அலுவலகம் வெளியிட்ட அறிக்கையில் என்ன சொல்லப்பட்டது என்றால்... "நாட்டின் கூட்டாட்சி அமைப்பை வலுப்படுத்தப் போகிறேன். நாட்டின் வளர்ச்சி என்பது மாநிலங்களின் வளர்ச்சியைச் சார்ந்துள்ளது. எனவே மாநிலங்களின் பிரச்சினைகளுக்கு அக்கறையுடன் முன்னுரிமை அடிப்படையில் தீர்வு காண்பேன்" என்று பிரதமர் சொன்னதாக அறிவிக்கப்பட்டது. அப்படி நடந்து கொண்டாரா?

2014 ஆம் ஆண்டு பா.ஜ.க.வின் தேர்தல் அறிக்கையில் என்ன சொன்னார்கள்?

★ மறைமுக வரிவிதிப்பில் சீர்திருத்தம் செய்ய அனைத்து மாநில அரசுகளுடனும் ஆலோசனை செய்வோம்.

★ மாநில முதல்வர்களையும் சமமாகக் கருதி - தேச நிர்மாணப் பணிகளில் ஈடுபடுத்துவோம்

★ மாநில அரசுகளுக்கு அதிக அளவில் நிதி அதிகாரங்களை வழங்குவோம்

★ மாநிலப் பிரச்சினைகளுக்கு தொடர்புடைய மாநிலகளுக்கு இடையே கவுன்சில் அமைத்து தீர்வு காண்போம்.

இவை அனைத்தும் 2014 ஆம் ஆண்டு ஏப்ரல் 8 ஆம் தேதி வெளியிடப்பட்ட பா.ஜ.க.வின் தேர்தல் அறிக்கையில் இருப்பதுதான்.

இதனை வெளியிட்டு அன்றைய தினம் பேசிய நரேந்திரமோடி அவர்கள், "பிரதமர் ஆனால் விருப்பு வெறுப்பின்றி செயல்படுவேன்" என்றார். அப்படித்தான் செயல்பட்டாரா? செயல்படுகிறாரா? விருப்பு வெறுப்பின்றி செயல்படுவதாக அவரால் சொல்ல முடியுமா?

மாநிலங்கள் என்ற அடையாளங்களைச் சிதைக்க நினைக்கிறது பா.ஜ.க. இதன் மூலமாக மாநில மொழிகளை - பல்வேறு இனங்களை - பண்பாட்டு விழுமியங்களைச் சிதைக்கப் பார்க்கிறார்கள். இதைத் தடுத்தாக வேண்டும். மாநில சுயாட்சி என்ற கொள்கையைக் காப்பதற்குள்ளாக தமிழ் மொழிக் காப்பு - இன உரிமை - தமிழ்நாட்டு நலன் - தமிழர் பண்பாட்டுப் பெருமிதங்கள் ஆகிய அனைத்தும் அடங்கி இருக்கிறது. அதனால்தான் மாநில சுயாட்சிக் குரலை ஓங்கி ஒலிக்கிறார் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**"மாநில உரிமைகளைப் பாதுகாத்திடும் முறையிலும் குறிப்பிடப்படாத மிச்ச அதிகாரங்கள் மத்திய அரசிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள முறையை மாற்றி அவை மாநிலங்களுக்குத் தரப்பட வேண்டும் என்பதற்காகவும் கழகம் பாடுபடுவதுடன் அந்த நோக்கத்துடன் இந்திய அரசியல் சட்டத்தைத் திருத்த வேண்டிய அவசியத்தை வலியுறுத்த விரும்புகிறது" என்று 1967 ஆம் ஆண்டு தி.மு.க. வெளியிட்ட தேர்தல் அறிக்கை கூறியது. அதனைச் செயல்படுத்த 'இந்தியா' கூட்டணியை பயன்படுத்த வேண்டும்.**

**1974 ஆம் ஆண்டு தலைவர் கலைஞர் அவர்கள் தமிழ்நாடு சட்ட மன்றத்தில் நிறைவேற்றிய மாநில சுயாட்சித் தீர்மானத்தை நாடாளுமன்றத்தின் சட்டமாக மாற்றியாக வேண்டும். அதற்கான அறைகூவலைத்தான் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்கள் எழுப்பி இருக்கிறார்கள்.**

## புதுச்சேரியில் செந்நிறமாக மாறிய கடல்நீர்!

புதுச்சேரி, நவ.2-

புதுச்சேரியில் அதிக அளவில் சுற்றுலா பயணிகளை ஈர்க்கும் இடமாக கடற்கரைசாலை உள்ளது. கடந்த வாரம் புதுவை கடற்பகுதியில் புருசு குப்பத்தில் இருந்து தலைமை செயலகம் வரை கடல் நீர் செந்நிறமாக மாறி காணப்பட்டது. இது புதுச்சேரி மக்களிடையே ஆச்சாரியத்தை ஏற்படுத்தியது. கடலில் கலக்கும் கழிவு நீரால் நிறம் மாற்றம் ஏற்பட்டிருக்களாமா என சந்தேகமும் ஏற்பட்டது.

இதனை அடுத்து தேசிய கடல் ஆராய்சி நிறுவனமும், புதுச்சேரி மாசு கட்டுபாட்டு வாரியமும் கடல்நீரை எடுத்து அதனுடைய மாதிரியை ஆய்வு செய்தனர். கடல்நீர் மாதிரியை ஆய்வு செய்த போது, ஆராய்ச்சியாளர்கள் நச்சுத்தன்மை வாய்ந்த நுண்ணுயிரிகளின் பெறுக்கம் காரணமாக கடல் நீர் நிற மாற்றம் ஏற்பட்டதாக தெரிவித்தனர். இது கடல் வாழ் உயிரினங்களுக்கு ஆபத்தை ஏற்படுத்தும் எனவும் தெரிவிக்கபட்டது. இந்த நிலையில், மீண்டும் நேற்று அதே பகுதியில் கடல் நீரின் நிறம் மாறிக்காணப்பட்டது.

புதுச்சேரியில் விடுமுறை நாளான நேற்று பல்வேறு பகுதியில் இருந்து பொதுமக்கள் கடற்கரைக்கு வந்தனர். அவர்கள் நிறம் மாறிய கடல் பகுதியில் புகைபடம் எடுத்துகொண்டனர். புதுச்சேரியில் கடந்த 2 நாட்களாக மழை பெய்து வருகிறது. மழை காரணமாக வெள்ள நீர் சாலைகளில் பெருக்கெடுத்து ஓடியது. இந்த வெள்ள நீர் கடலில் கலந்து இருக்கலாம் என்ற சந்தேகமும் எழுந்துள்ளது. புதுச்சேரியில் கடந்த 2 வாரத்தில் 3வது முறையாக புதுச்சேரி கடல் செந்நிறமாக மாறியுள்ளது புதுச்சேரி மக்களுடையேவும், சுற்றுலா பயணிகளிடையேவும் ஆச்சிரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

# தமிழ்நாட்டின் எல்லை கடந்து இன்று மாநில சுயாட்சிக்கான கழகத் தலைவரின் குரல் இந்தியா முழுதும் ஒலிக்கத் தொடங்கியுள்ளது!




**சென்னை, நவ. 2 -**

**மாநில சுயாட்சிக்கான கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் குரல் இன்றைக்கு தமிழ்நாட்டின் எல்லை கடந்து இந்திய ஒன்றியம் முழுதும் ஒலிக்கத் தொடங்கியுள்ளது.**

கழகத் தலைவரும் தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் "SPEAKING FOR INDIA" என்ற தலைப்பில் வெளியிட்டு வரும் வலையொலிப் பதிவு நாடு முழுவதும் அதிர்வலைகளை எழுப்பி வருகிறது.

**நேற்று (31.10.2023) தமிழிலும், பல்வேறு மாநில மொழிகளிலும் கழகத் தலைவர் வெளியிட்ட "SPEAKING FOR INDIA" 3 ஆவது வலையொலிப் பதிவு இந்திய ஒன்றியம் முழுமைக்கும் அரசியல் தளம் தொடங்கி, அனைத்துத் தரப்பிலும் பரவலான கவனத்தைப் பெற்றுள்ளது.**

மாநில சுயாட்சி உள்ளிட்ட கழகத்தின் அடிநாதக் கொள்கைகளையும், மாநில உரிமைகளுக்கு எதிரான ஒன்றிய அரசின் தற்போதைய போக்குகளையும் முதலமைச்சர் அவர்கள் இந்தப் பகுதியில் விரிவாக விளக்கி உள்ளார். மேலும், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில அரசுகளை, ஆளுநர்கள் மூலம் செயல்பட விடாமல் முடக்கப்பார்க்கும் ஒன்றிய அரசின் எதேச்சாதிகாரப் போக்கையும் அவர் சுட்டிக்காட்டி இருக்கிறார்.

**மாநில சுயாட்சிக்கான கழகத் தலைவர் அவர்களின் குரல் இப்போது தமிழ்நாட்டின் எல்லையைக் கடந்து இந்திய ஒன்றியம் முழுவதும் ஒலிக்கத் தொடங்கியுள்ளது. இந்தக் குரல் "இந்தியா" கூட்டணியின் வெற்றிக்கு வழிவகுக்கட்டும்!**

அமைச்சர் எ.வ.வேலு தலைமையில் - கிண்டி, நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையத்தில்,

# நெடுஞ்சாலைத்துறை சார்பில் கைபேசி செயலி!

## அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தொடங்கி வைத்தார்!

சென்னை, நவ.2-

பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு தலைமையில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (1.11.2023), சென்னை, கிண்டி, நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையத்தில், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை சார்பில், பள்ளங்களற்ற சாலை என்ற இலக்கை அடைய சாலையில் ஏற்படும் பள்ளங்களை பொதுமக்களின் துணையோடு கண்டறிந்து, குறித்த காலத்தில் செப்பனிடும் திட்டத்திற்காக உருவாக்கப்பட்ட இணையத்தின் அடிப்படையிலான "நம்ம சாலை" என்ற புதிய மென்பொருள் மற்றும் கைபேசி செயலியை தொடங்கி வைத்தார்.

தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு உறுதியான சாலை உள்கட்டமைப்பு அவசியம். கிராமப்புற பொருளாதாரத்தினை மேம்படுத்திடவும், புதிய வாழ்வாதார வாய்ப்புகளைத் உருவாக்கவும், சந்தைகள், மருத்துவமனைகள் மற்றும் பள்ளிகளை அணுகுவதை எளிதாக்குவதில் சாலை உட்கட்டமைப்பு முக்கிய பங்கு வகிக்கிறது.

எனவே, முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க தரமான மற்றும் பாதுகாப்பான சாலை கட்டமைப்பினை, உருவாக்கி, பராமரித்து வருகிறது.

தமிழ்நாடு "விபத்தில்லா மாநிலம்" என்ற முதலமைச்சரின் தொலைநோக்குத் திட்டத்தினை செயல்படுத்த, "பள்ளங்களற்ற சாலை" என்ற இலக்கினை அடைவற்கு ஏதுவாக, பொதுமக்களின் துணையோடு கண்டறியப்படும் சாலையில் ஏற்படும் பள்ளங்கள் குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் சரிசெய்யப்பட வேண்டும் என்பதால், 2023-24 ஆம் ஆண்டு மானியக் கோரிக்கையின் போது, பிரத்யேக கைபேசி செயலி உருவாக்கப்படும் என்ற அறிவிப்பின் அடிப்படையில், இணையத்தின் அடிப்படையிலான "நம்ம சாலை" என்ற மென்பொருள் மற்றும் கைபேசி செயலி உருவாக்கப்பட்டு, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

இச்செயலியின் மூலம், நெடுஞ்சாலைத்துறையினால் பராமரிக்கப்படும் சாலைகளில் ஏற்படும் பள்ளங்கள் குறித்து பொதுமக்கள் கைபேசி செயலி வாயிலாக, புவி குறியீட்டுடன் கூடிய புகைப்படங்களுடன் பதிவேற்றம் செய்யலாம். பதிவேற்றம் செய்யப்பட்ட விவரம் அச்சாலைக்குரிய பொறியாளருக்கு செயலி வாயிலாக தெரிவிக்கப்பட்டு, குறித்த காலக்கெடுவுக்குள் பள்ளங்களை செப்பனிட நடவடிக்கை எடுக்கப்படும்.

அதன் பிறகு, சரி செய்யப்பட்ட விவரம், சாலையின் புகைப்படங்களுடன், "நம்ம சாலை" செயலி மூலம் பதிவேற்றம் செய்யப்பட்டு, புகார் அளிக்கும் பொதுமக்களின் அலைபேசிக்கு அனுப்பப்படும். அதன்படி சாலையில் ஏற்படும் பள்ளங்கள் உடனுக்குடன் சீர் செய்யப்படுவது மட்டுமல்லாமல், தடையற்ற போக்குவரத்து உறுதி செய்யப்படும்.

இச்செயலி மூலம் பள்ளங்கள் குறித்து தெரிவிப்பதுடன் மட்டுமில்லாமல், பேரிடர் காலங்களில் மரம் விழுதல், வெள்ளப்பெருக்கு போன்றவற்றைக் குறித்தும் புகார்கள் அளிக்க ஏதுவாக இச்செயலி உருவாக்கப்பட்டுள்ளது.

2023-24 ஆம் ஆண்டு மானிய கோரிக்கையின் போது அறிவிக்கப்பட்ட, அறிவிப்பினை செயல்படுத்தும் வகையில், நெடுஞ்சாலைத்துறை பொறியாளர்களுக்கு நெருக்கமான பயனர் குழு (CUG) முறையில் நிரந்தர அலைபேசி எண், நெடுஞ்சாலைத்துறை கட்டுமானம் மற்றும் பராமரிப்பு அலகில் உள்ள 45 கோட்ட பொறியாளர்கள், 192 உதவி கோட்ட பொறியாளர்கள் மற்றும் 274 உதவி பொறியாளர்களுக்கும் எளிதில் தொடர்பு கொள்ளக்கூடிய வகையில் "நிரந்தர தொலைபேசி எண்" வழங்கப்பட்டது.

மேலும், இவ்விழாவில் தமிழ்நாட்டில் பல்வேறு மாவட்டங்களில் ஆசிய வளர்ச்சி வங்கி நிதியுதவியுடன் இரு வழித்தடமாக அகலப்படுத்தி மேம்படுத்தப்பட்ட சாலைகளான, ரூ.204.70 கோடி மதிப்பீட்டில் மேலூர் - திருப்பத்தூர் சாலை, ரூ.198.65 கோடி மதிப்பீட்டில் தஞ்சாவூர் மன்னார்குடி சாலை, ரூ.219.47 கோடி மதிப்பீட்டில் விருத்தாசலம் - உளுந்தூர்பேட்டை சாலை ஆகிய சாலைகளை இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு தொடங்கி வைத்தார்.

மேலூர் திருப்பத்தூர் சாலையில், திருப்பத்தூர் நகர் புறவழிச்சாலையில் 63 குறு மற்றும் 4 சிறு பாலங்களும், தஞ்சாவூர் மன்னார்குடி சாலையில் 44 குறு மற்றும் 4 சிறு பாலங்களும், விருத்தாசலம் உளுந்தூர்பேட்டை சாலை, மங்களம்பேட்டை நகர் புறவழிச் சாலையில் 46 குறு மற்றும் 8 சிறு பாலங்களும் அமைக்கப்பட்டுள்ளது. மேலும், மேற்படி சாலைகளில், சாலைப் பாதுகாப்பினை உறுதிசெய்ய தெருவிளக்குகள் மற்றும் சூரிய மின்விளக்குகள், கண்காணிப்பு கேமராக்கள் மற்றும் பொதுமக்களின் வசதிக்காக பேருந்து நிறுத்தங்களில் குடிநீர் மற்றும் கழிப்பறை வசதிகள் அமைக்கப்பட்டுள்ளன.

சாலைகளை அகலப்படுத்தி மேம்படுத்தப்பட்டதாலும் மங்கலம்பேட்டை புறவழிச்சாலை அமைக்கப்பட்டுள்ளதாலும் கனரக வாகனங்களின் போக்குவரத்து நெரிசல் மற்றும் பயண நேரம் குறைந்து, விருத்தாசலத்தில் இருந்து சென்னை செல்லும் வாகனங்கள் எளிதாகச் செல்ல முடியும். நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்திற்கு கனரக வாகனங்கள் வந்து செல்வதற்கு பயனுள்ளதாக இருக்கும். விருத்தாசலம் நகரில் அமைந்துள்ள பீங்கான் தொழிற்சாலையிலிருந்து உற்பத்தி செய்யப்படும் பொருட்களை நகர்வு செய்ய போக்குவரத்து மேம்படுத்தப்பட்டுள்ளது.

இந்த நிகழ்ச்சியில் நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அரசு கூடுதல் தலைமை செயலாளர் பிரதீப் யாதவ், தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்ட இயக்குநர் எஸ். பிரபாகர், நெடுஞ்சாலைத் துறை முதன்மை இயக்குநர், தலைமை பொறியாளர்கள், நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலைய இயக்குநர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# ஐ.டி. - இ.டி.யை வைத்து மிரட்டல் அரசியல் நடத்தும் பா.ஜ.க. அரசு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை ... முதல்பக்கத் தொடர்ச்சி

நாம் அழைக்கிறோம். ஆனால் உண்மையில் வரலாற்றை எடுத்துப் பார்த்தால் அது பூந்தண்மல்லி என்றுதான் அழைத்துக் கொண்டிருந்த காலம். அது நாளடைவில் மாறிப்போய் இன்றைக்கு பூந்தமல்லி என்று அழைத்துக் கொண்டிருக்கிறோம். பூந்தண் என்றால் அந்த ‘தண்’ என்பதற்கு என்ன அர்த்தம் என்று கேட்டால் குளிர்ச்சி! அந்த குளிர்ச்சிமயமான மலர்களுடைய பெயர்கள் மட்டுமல்ல, கொள்கை பிடிப்புள்ள உடன்பிறப்புகளும், பிறந்திருக்கக்கூடிய பகுதியாகதான் பூந்தமல்லி இருந்திருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்கிறபோது நான் உள்ளபடியே மகிழ்ச்சி அடைகிறேன். அதில் ஒருவராக இன்றைக்கு நம்முடைய கிருஷ்ணசாமி அவர்கள் திகழ்ந்து கொண்டிருக்கிறார். கிருஷ்ணசாமி அவர்கள் இன்றைக்கு சட்டமன்ற உறுப்பினராக இருக்கிறார். அவர் பழகுவதற்கு இனிமையானவர். இனிமையானவர் மட்டுமல்ல, உறுதியானவர் அதுதான் முக்கியம்.

தம்பி, உதயநிதி அவர்கள் இங்கே குறிப்பிட்டுச் சொன்னார். இந்த திருமணத்தை அவர்கள் வீட்டு திருமணமாக நாங்கள் கருதவில்லை, இது எங்கள் வீட்டு திருமணமாக, இன்னும் சொல்ல வேண்டுமென்றால், இது நம்முடைய வீட்டு திருமணமாக கருதிதான் இந்த விழாவில் பங்கேற்று மணமக்களை நாமெல்லாம் வாழ்த்திக் கொண்டிருக்கிறோம்.

**நெருக்கடி நிலையை சந்தித்த கிருஷ்ணசாமியின் தந்தை ஆதிசதாசிவம்!**

கிருஷ்ணசாமி அவர்கள் நன்றியுரையாற்றுகின்ற போது குறிப்பிட்டுச் சொன்னார். அவருடைய தந்தையை அடையாளம் காட்டினார். தந்தைக்கு உரிய வணக்கத்தை எடுத்துச் சொன்னார். அப்படி சொல்கின்ற நேரத்தில் அவருடைய வரலாற்றையும் அவர் நினைவுபடுத்தி எடுத்துச் சொன்னார், அவருடைய தந்தை ஆதிசதாசிவம் அவர்கள்.

1976-ஆம் ஆண்டில் நாம் ஒரு நெருக்கடி நிலையை சந்தித்தோம். நாட்டிற்கே நெருக்கடி வந்தது. அந்த நேரத்தில் எமர்ஜென்ஸியை நாம் எதிர்த்தோம். தலைவர் கலைஞர் அவர்களுக்கு தூதுவர்கள் டில்லியிலிருந்து வருகிறார்கள். அம்மையார் இந்திராகாந்தி கொண்டு வந்திருக்கக்கூடிய அவசர நிலையை, எமர்ஜென்ஸியை நீங்கள் எதிர்க்கக்கூடாது. ஆதரிக்க வேண்டும் என்ற அவசியமில்லை. ஆனால் எதிர்க்கக்கூடாது. அப்படி மீறி எதிர்த்தால், உங்கள் ஆட்சி உடனடியாக கவிழ்க்கப்படும், நீங்கள் எதிர்க்காமல் இருந்தால், இன்னும் உங்கள் ஆட்சி சில ஆண்டு காலம் தொடரும் என்று வந்த தூதுவர்கள், கோபாலபுரத்தில் உள்ள கலைஞர் அவர்களிடத்தில் சொன்னார்கள். அப்போது நான், அண்ணன் துரைமுருகன் அவர்கள், டி.ஆர்.பாலு அவர்கள் எல்லாம் அருகில் இருக்கிறோம்.

அப்போது கலைஞர் ஒரு வார்த்தையை சொன்னார். எந்த காலத்திலும், எந்த சூழ்நிலையிலும், நாட்டிற்கு ஏற்பட்டிருக்கக்கூடிய நெருக்கடி சூழ்நிலையை நாங்கள் ஆதரிக்கமாட்டோம். நாங்கள் ஜனநாயகத்தைதான் நம்பியிருக்கிறோம். ஆட்சி அல்ல, எங்கள் உயிரே போனாலும், நாங்கள் இதற்கு சம்மதிக்கமாட்டோம் என்று தலைவர் கலைஞர் அவர்கள் வந்த தூதுவரிடத்தில் சொல்லி அனுப்பினார்கள். இது வரலாறு. சொல்லி அனுப்பிவிட்டு, அடுத்த நாள் சென்னை கடற்கரையில் ஒரு மாபெரும் மக்கள் கூட்டத்தை திரட்டி, திரண்டிருந்த அந்த மக்கள் கூட்டத்தில் தலைவர் கலைஞர் அவர்கள் முன்மொழிந்தார்கள். அம்மையார் இந்திராகாந்தி அவர்களே, நீங்கள் கொண்டு வந்திருக்கக்கூடிய அவசர கால நிலையை உடனடியாக திரும்பப் பெறவேண்டும். எமர்ஜென்ஸியை இரத்து செய்ய வேண்டும். மிசா சட்டத்தின் கீழ் கைது செய்து சிறையில் வைத்திருக்கக்கூடிய தலைவர்களை எல்லாம் உடனடியாக விடுதலை செய்யவேண்டும், பல்வேறு இந்திய நாட்டின் தலைவர்கள் எல்லாம் வாடிக் கொண்டிருக்கிறார்கள், அவர்களை எல்லாம் உடனடியாக விடுதலை செய்யவேண்டும் என்று சொல்லி ஒரு தீர்மானத்தை கொண்டு வந்தார்.

**எமர்ஜென்சிக்கு எதிராக கலைஞர் கொண்டுவந்த தீர்மானம்!**

அந்த தீர்மானத்தை தலைவர் கலைஞர் முன்மொழிய குழுமியிருந்த மக்கள் அனைவரையும் எழுந்திருக்க வைத்து வழிமொழிய வைத்தார். தீர்மானம் நிறைவேற்றிய அடுத்த வினாடி தமிழ்நாட்டில் நடந்து கொண்டிருந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி கலைக்கப்படுகிறது.

கலைக்கப்பட்டதற்கு பிறகு பலபேர் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்கள் எல்லாம் கைது செய்யப்படுகிறார்கள். அந்த வரலாறெல்லாம் உங்களுக்குத் தெரியும். மிசா சட்டத்தில் கைது செய்யப்பட்டு அதுவும் சென்னை சிறையில் நடந்த கொடுமைகள் எல்லாம் உங்களுக்கு நன்றாக தெரியும். அதைப்பற்றி நான் அதிகம் பேச விரும்பவில்லை. எதற்காக சொல்கிறேன் என்று சொன்னால், அந்த சூழ்நிலையில், நம்முடைய கிருஷ்ணசாமி அவர்களுடைய தந்தை ஆதிசதாசிவம் அவர்கள் துணிச்சலானவர். பல பேர் வேட்டிக் கட்டுவதற்கே பயப்பட்டார்கள். அப்படியே வேட்டிக் கட்டினாலும், கருப்பு, சிவப்பு பார்டர் வைத்த வேட்டியை சிலபேர் கட்டமாட்டார்கள். அவ்வளவு பயம் சில பேருக்கு இருந்தது. உடனே கருப்பு, சிவப்பு உள்ள வேட்டியை பார்த்தால் கைது செய்து விடுவார்கள். அவ்வளவு கொடுமைப்படுத்தக்கூடிய நிகழ்ச்சியெல்லாம் நடந்தது. அந்த நேரத்தில் துணிச்சலோடு நம்முடைய கிருஷ்ணசாமி அவர்களுடைய தந்தை ஆதிசதாசிவம் அவர்கள் கழுத்தில் கருப்பு, சிவப்பு துண்டை அணிந்துகொண்டு காவல்நிலையத்திற்கு முன்பு நின்றுகொண்டு எமர்ஜென்ஸியை எதிர்க்கக்கூடிய அந்த வாதங்களை எல்லாம் எடுத்துச் சொல்லக்கூடிய அந்த நிலையை பார்த்து அவரை உடனடியாக கைது செய்து சிறையில் அடைத்தார்கள். இதுதான் வரலாறு.

**தந்தையை சிறையில் பார்த்தபிறகு கழகத்தின் மீது பற்றாளரானார்!**

அப்போது சிறையில் இருந்த நேரத்தில் நம்முடைய கிருஷ்ணசாமி அவர்களே சொன்னார், அப்போது அவருக்கு வயது 10. அந்த 10 வயது சிறுவனாக இருந்து கிருஷ்ணசாமி தன்னுடைய தந்தையை பார்க்க சிறைக்குச் சென்றபோது அவருக்கு ஏற்பட்ட கொடுமைகள் எல்லாம் தன்னுடைய தந்தை சொல்கின்றபோது, அவருக்கு கோபம் வரவில்லை, அதற்கு நேர்மாறாக என்ன வந்தது என்றால், உணர்ச்சி வந்தது. அந்த உணர்ச்சி எல்லாம் கடந்து திராவிட முன்னேற்றக் கழகத்தின் மீது பற்று வந்தது. திராவிட முன்னேற்றக் கழகத்தின் மீது அவருக்கு ஈடுபாடு வந்ததற்கு காரணம் என்ன என்று கேட்டால், அவர் தந்தை கைது செய்யப்பட்டு, சிறையில் இருந்த காட்சிதான் அவர் தி.மு.க. மீது இன்றைக்கு ஈடுபாடு கொண்டு, சட்டமன்ற உறுப்பினராக, நாடாளுமன்ற உறுப்பினராக, கட்சியில் பல பொறுப்புகளை ஏற்று, செயல்படுத்தக்கூடிய நிலையில் இன்றைக்கு வளர்ந்து வந்திருக்கிறார்.

பேரறிஞர் அண்ணா சொல்வார், “சிறையைக் காண அழைக்கிறேன், அவர் உருவாக்கிய தம்பி தலைவர் கலைஞர் அவர்கள் சொல்வார், புரட்சிக் கவிஞர் பாவேந்தர் வரியை அடிக்கடிச் சொல்வார், “மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை, என்னை மாட்ட நினைக்கும் சிறைச்சாலை” அப்படிப்பட்ட சிறைச்சாலையில்தான் நம்முடைய கிருஷ்ணசாமி அவர்கள் அந்த உணர்ச்சியை பெற்றிருக்கிறார் என்பது நமக்கெல்லாம் நெகிழ்ச்சியைத் தந்து கொண்டிருக்கிறது.

**முரசொலி மாறனால் பாராட்டப்பட்ட கிருஷ்ணசாமி!**

தந்தையின் வழியில் இன்றைக்கு கிருஷ்ணசாமி அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு, இன்றைக்கு இளைஞர் அணியின் செயலாளராக தம்பி உதயநிதி இருக்கிறார். ஆனால் இளைஞர் அணி தொடங்கப்பட்டபோது நான்தான் அந்த பொறுப்பில் இருந்தேன் உங்கள் எல்லாருக்கும் தெரியும். அப்போது இளைஞர் அணியில் தன்னை இணைத்துக் கொண்டு நம்முடைய கிருஷ்ணசாமி அவர்கள் அந்த பகுதியில் கிளைக் கழகத்தின் செயலாளராக பொறுப்பேற்று பணியாற்றிய அந்த நிகழ்ச்சி. அவரே பேசுகின்றபோது சொன்னார், என்னை அழைத்துக் கொண்டு கொடியேற்று விழா நடத்திய நேரத்தில், கொடியை ஏற்றிவிட்டு, ஏன் கல்வெட்டு இல்லை என்று கேட்டேன். கல்வெட்டு மட்டும் கேட்கவில்லை, நிதியும் கேட்டேன். அப்போது நிதியும் கொடுக்கவில்லை. இன்றைக்கும் அவர் கடனாளியாகத்தான் இருந்து கொண்டிருக்கிறார். ஆனால், எப்படி வசூலிப்பது என்று எனக்கு தெரியும், அது அல்ல முக்கியம். எதற்காக இதை சொல்கிறேன் என்று சொன்னால், அந்த 10 வயதில், நம்முடைய கிருஷ்ணசாமி அவர்கள் இயக்கத்தில் பற்று கொண்டு அந்த வட்டாரத்தில் சிறப்பாக பணியாற்றி, படிப்படியாக வளர்ந்து, அவர் சட்டக் கல்லூரியில் மாணவரணி பொறுப்பேற்று பணியாற்றி, அதைத் தொடர்ந்து கழக வழக்கறிஞர் அணியில் தன்னை இணைத்துக் கொண்டு. ஆதிதிராவிடர் நலக்குழுவில் அவர் பொறுப்பேற்று பணியாற்றி, அதற்கிடையில் நாடாளுமன்ற உறுப்பினராக இரண்டு முறை, அதாவது நாடாளுமன்றத்தில் சிறப்பாக பணியாற்றக்கூடியவர்கள் என்று குறிப்பிட்டுச் சொல்வதுண்டு. அந்த குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய ஒருவராக இருந்தவர்தான் நம்முடைய கிருஷ்ணசாமி அவர்கள்.

இதை தலைவர் கலைஞர் அவர்கள் சொன்னதுகூட நான் பெரிதுபடுத்தியிருக்க மாட்டேன். ஆனால், நம்முடைய மறைந்த மத்திய அமைச்சராக இருந்த முரசொலி மாறன் அவர்கள் பலமுறை சொல்லியிருக்கிறார். அவர் வாயில் இருந்து வருவது என்பது சாதாரண விஷயமல்ல. அவரே சொல்லியிருக்கிறார். பலமுறை என்னிடத்தில் சொல்லியிருக்கிறார். தலைவரிடத்திலும் சொல்வார், மாமா, கிருஷ்ணசாமி, நாடாளுமன்றத்தில் உட்கார்ந்தால், உட்கார்ந்ததுதான், எழுந்து போக மாட்டார், அவ்வளவு உன்னிப்பாக கவனித்து அனைத்து பிரச்சினைகளையும் கூர்ந்து கவனிக்கக்கூடிய ஆற்றலை பெற்றிருக்கக் கூடியவராக இருக்கிறார் என்று பலமுறை சொல்லியிருக்கிறார். நானும் அதை கேட்டிருக்கிறேன்.

நாடாளுமன்றத்தில் நூல்நிலையம் இருக்கிறது. அந்த நூல்நிலையத்தை பலபேர் பயன்படுத்த மாட்டார்கள். சிலபேர் தான் பயன்படுத்துவார்கள். அதையும் முறையாக பயன்படுத்தியவர்தான் நம்முடைய கிருஷ்ணசாமி அவர்கள். அவர்தான் இன்றைக்கு பூவிருந்தவல்லி தொகுதியில் இடைத் தேர்தல் வந்தபோது அவரை வேட்பாளராக நிறுத்தி வெற்றி பெற வைத்தோம். தேர்ந்தெடுக்கப்பட்டு பணியாற்றினார். அதற்குப் பின்னால் இப்போதும் சட்டமன்ற உறுப்பினராக இருந்து பணியாற்றிக் கொண்டிருக்கிறார். ஆகவே, இரண்டு முறை நாடாளுமன்ற உறுப்பினராகவும், இரண்டு முறை சட்டமன்ற உறுப்பினராகவும் அவர் பணியாற்றக்கூடிய வாய்ப்பை பெற்றிருக்கிறார்.

நான் உங்களை எல்லாம் கேட்டுக்கொள்ள விரும்புவது இன்றைக்கு நாட்டில் உள்ள நிலைமை எல்லாம் உங்களுக்கு நன்றாக தெரியும். ஜனநாயகம் பாதுகாக்கப்படுமா? மக்களாட்சி நீடிக்குமா? என்ற நிலையில்தான் இன்றைய சூழ்நிலை அமைந்திருக்கிறது. எதிர்க்கட்சிகளை மிரட்டுவது, மத்தியில் இருக்கக்கூடிய ஒன்றிய பி.ஜே.பி. ஆட்சி, தனக்கெதிராக யார் எந்த கருத்தைச் சொன்னாலும், அவர்களை மிரட்டுவது, அச்சுறுத்துவது, அதற்காக ITஐ, EDஐ அதாவது அமலாக்கத்துறையை, இன்னும் சொல்ல வேண்டும் என்று சொன்னால், தொலைபேசியை டேப் செய்கின்ற முயற்சியை கையாண்டிருக்கிறார்கள்.

ஆப்பிள் என்ற ஒரு பெரிய நிறுவனம், அந்த நிறுவனத்தைச் சார்ந்தவர்களே எச்சரித்திருக்கிறார்கள். எதிர்க்கட்சித் தலைவர்களுக்கெல்லாம் இதுபோல ஒரு சூழ்நிலை இருக்கிறது என்று அவர்களே சுட்டிக்காட்டியிருக்கிறார்கள், கடிதம் எழுதியிருக்கிறார்கள். இப்படி செய்தி வந்தவுடனே, ஒன்றியத்தில் இருக்கக்கூடிய அமைச்சர் என்ன பதில் சொல்லியிருக்கிறார், இதுகுறித்து விசாரித்து நடவடிக்கை எடுக்கப்படும், விசாரணைக்கமிஷன் அமைக்கப்படும் என்று ஒரு அறிவிப்பு வெளியிடுகிறார். இது என்ன கேலிகூத்து! செய்வது எல்லாம் செய்துவிட்டு இன்றைக்கு விசாரணைக்கமிஷன் அமைக்கப்படும் என்று செய்தியை வெளியிடுகிறார் என்று சொன்னால், அந்த அளவுக்கு நாட்டில் இன்றைக்கு ஒரு கொடுமையை சந்திக்கக்கூடிய நிலையில் நாம் தவித்துக் கொண்டிருக்கிறோம். இன்றைக்கு அவர்களை பொறுத்தவரை இந்தியா கூட்டணியைப் பார்த்து தோல்வி பயம் வந்துவிட்டது.

**நடைபெற உள்ள ஐந்து மாநில தேர்தலிலும் பா.ஜ.க. தோல்வி உறுதி!**

இங்கே இந்தியா கூட்டணியைச் சேர்ந்தவர்கள் உட்கார்ந்திருக்கிறோம். இந்தியா கூட்டணி இன்றைக்கு எதிர்பாராத வகையில் அவர்கள் எதிர்பாராத வகையில் அமைந்திருக்கிறது. இன்றைக்கு மக்களிடம் சென்று, மோடி ஆட்சியின் கொடுமைகளை, அக்கிரமங்களை, அநியாயங்களை, அவலநிலைகளை எல்லாம் சொல்லிக் கொண்டிருக்கிறோம். விரைவில் ஐந்து மாநில தேர்தல்கள் வர இருக்கிறது. நமக்கு கிடைக்கக்கூடிய செய்திகள் எல்லாம் ஐந்து மாநிலத்திலும் பிஜேபி தோல்வியை தழுவப் போகிறது என்ற செய்திதான் வந்து கொண்டிருக்கிறது. அதனால் அவர்களுக்கு அச்சம் வந்துவிட்டது. பயம் வந்துவிட்டது, அந்த பயத்தின் காரணமாகத்தான், இன்றைக்கு இதுபோன்ற செயல்களில் எல்லாம் அவர்கள் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். இவையெல்லாம் முறியடித்து, நாட்டிற்கு ஒரு நல்ல விமோசனத்தை உருவாக்கித் தருவதற்கு, இந்தியாவை காப்பாற்றுவதற்கு, இந்தியா கூட்டணிக்கு நீங்கள் அத்தனை பேரும் வரக்கூடிய நாடாளுமன்ற தேர்தலில் மிகச் சிறப்பான வெற்றியை தேடித்தர வேண்டுமென்று உங்களை அன்போடு கேட்டுக்கொண்டு, அந்த வெற்றியை தேடி தரக்கூடிய வரிசையில் கிருஷ்ணசாமி அவர்கள் இன்றைக்கு செயலாற்றிக் கொண்டிருக்கிறார். அவருடைய செயல்பாடு வெற்றி பெறவேண்டும்.

அவருடைய அன்புச் செல்வங்கள் இன்றைக்கு மணக்கோலம் பூண்டிருக்கிறார்கள். மணக்கோலம் பூண்டிருக்கக்கூடிய மணமக்களுக்கு என்னுடைய வாழ்த்துகளை தெரிவித்து, புரட்சிக் கவிஞர் பாவேந்தர் பாரதிதாசன் எடுத்துச் சொல்லியிருக்கக்கூடிய “வீட்டிற்கு விளக்காய், நாட்டிற்கு தொண்டர்களாய்” வாழுங்கள், வாழுங்கள், வாழுங்கள் என்று வாழ்த்துகிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

> **நா**ன் உங்களை எல்லாம் கேட்டுக்கொள்ள விரும்புவது இன்றைக்கு நாட்டில் உள்ள நிலைமை எல்லாம் உங்களுக்கு நன்றாக தெரியும். ஜனநாயகம் பாதுகாக்கப்படுமா? மக்களாட்சி நீடிக்குமா? என்ற நிலையில்தான் இன்றைய சூழ்நிலை அமைந்திருக்கிறது. எதிர்க்கட்சிகளை மிரட்டுவது, மத்தியில் இருக்கக்கூடிய ஒன்றிய பிஜேபி ஆட்சி, தனக்கெதிராக யார் எந்த கருத்தைச் சொன்னாலும், அவர்களை மிரட்டுவது, அச்சுறுத்துவது, அதற்காக ITஐ, EDஐ அதாவது அமலாக்கத்துறையை, இன்னும் சொல்ல வேண்டும் என்று சொன்னால், தொலைபேசியை டேப் செய்கின்ற முயற்சியை கையாண்டிருக்கிறார்கள்.

**ஒன்றிய பா.ஜ.க.வுக்கு எதிராகப் பேசினால் அச்சுறுத்தல் -**
**ஜனநாயகம் பாதுகாக்கப்படுமா? என்ற கேள்வி எழுகிறது!**

---

### மூத்த தலைவர் என்.சங்கரய்யாவுக்கு டாக்டர் பட்டம் வழங்க மறுப்பதா?

## ஆளுநரைக் கண்டித்து மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கருப்புக் கொடி ஆர்ப்பாட்டம்!

### மாநிலச் செயலாளர் கே.பாலகிருஷ்ணன் அறிவிப்பு!

*சென்னை, நவ. 2-*

*“மூத்த தலைவர் என்.சங்கரய்யாவுக்கு டாக்டர் பட்டம் வழங்க மறுக்கும ஆளுநரை கண்டித்து மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் கருப்புக் கொடி ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது” என்று மாநில செயலாளர் கே.பாலகிருஷ்ணன் அறிவித்துள்ளார்.*

*இது குறித்து மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் மாநில செயலாளர் கே.பாலகிருஷ்ணன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:*

*விடுதலைப் போராட்ட வீரர் என்.சங்கரய்யாவிற்கு கௌரவ டாக்டர் பட்டம் வழங்கும் கோப்புகளில் கையெழுத்திட ஆளுநர் ஆர்.என்.ரவி அடாவடியாக மறுத்துள்ளார். இந்தப் போக்கினை கண்டித்து, பட்டமளிப்பு விழாவில் பங்கேற்பதில்லை என உயர் கல்வித் துறை அமைச்சர் எடுத்துள்ள முடிவினை இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) மாநில செயற்குழு வரவேற்கிறது.*

*முதுபெரும் விடுதலைப் போராட்ட வீரரும், நூற்றாண்டினைக் கடந்த மக்கள் தலைவருமான தோழர் என்.சங்கரய்யா, நாட்டுக்காக பட்டப்படிப்பை துறந்தவர். அவருக்கு கௌரவ டாக்டர் பட்டம் வழங்க வேண்டும் என பல்வேறு தரப்பினரும் கோரிக்கை விடுத்தனர். இப்பரிந்துரையை ஏற்று மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தின் செனட் மற்றும் சிண்டிகேட் தீர்மானம் நிறைவேற்றி கௌரவ டாக்டர் பட்டம் வழங்க முடிவு செய்தது. இந்த முடிவினை ஏற்க மறுத்து ஆளுநர் ஆர்.என். ரவி அந்த கோப்பில் கையெழுத்திட மறுத்தார்.*



**ஆளுநரின் அடாவடித்தனம்!**

*கௌரவ டாக்டர் பட்டம் வழங்குவது பல்கலைக் கழகத்தின் முடிவு என்பதை பலமுறை வலியுறுத்தியும் அதனை ஏற்காத ஆளுநருக்கு தமிழ்நாடு முழுவதும் கண்டனக் குரல்கள் எழுந்தன. இதனைத் தொடர்ந்து மதுரை காமராசர் பல்கலை கழகத்தின் தீர்மானம் மீண்டும் ஒருமுறை ஆளுநரின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டது. ஆனால், அதில் கையெழுத்திடுவதை மீண்டும் அடாவடியாக மறுத்துள்ளார் ஆளுநர் ஆர்.என்.ரவி.*

*அரசமைப்புச் சட்டத்தின் படி செயல்பட வேண்டிய ஆளுநர், ஆர்.எஸ்.எஸ் திட்டத்தை மட்டுமே தனது முழு மூச்சாக முன்னெடுத்து வருவதுதான் இந்த மோசமான நிலைக்கு காரணமாகும். என்.சங்கரய்யாவின் தியாகத்தை ஆளுநர் அறிந்திருக்கவில்லை என ஆர்.எஸ்.எஸ் சார்பு ஊடகங்கள் சமாளிப்பாக எழுதிவந்தன. ஆனால், வேண்டுமென்றே இந்த அராஜகத்தில் அவர் ஈடுபட்டு வருவது வெளிப்படையாக தெரிகிறது.*

**அமைச்சர் பொன்முடி அறிவிப்பு வரவேற்கதக்கது!**

*இந்திய கூட்டாட்சியில் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கத்தை மீறிய அதிகாரம் எந்தவொரு தனி நபருக்கும் கிடையாது. எனவே பட்டமளிப்பு விழாவினை புறக்கணிப்பதாக உயர்கல்வித்துறை அமைச்சர் அறிவித்துள்ளது, அரசின் கடுமையான கண்டனச் செய்தியை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது. இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) மாநில செயற்குழு இந்த முடிவினை வரவேற்கிறது.*

**கருப்புக்கொடி ஆர்ப்பாட்டம்:**

*தமிழ்நாடு அரசின் முடிவுகளுக்கு முட்டுக்கட்டை போட்டுவரும் ஆளுநர், மதுரை காமராசர் பல்கலைக் கழக பட்டமளிப்பு விழாவில் பங்கேற்கச் செல்வது அவமானகரமான ஒன்றாகும். எனவே அவருக்கு கண்டனம் தெரிவிக்கும் விதத்தில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) தோழர்கள் கருப்புக் கொடியேந்தி கண்டனம் முழங்குவார்கள். தமிழ்நாட்டு மக்கள் இந்த போராட்டத்திற்கு பேராதரவு வழங்கிட வேண்டுமென்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) வலியுறுத்தி கேட்டுக் கொள்கிறது.*

*இவ்வாறு கே.பாலகிருஷ்ணன் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.*

---

### தமிழினத் தலைவர்

## கலைஞர் நூற்றாண்டு சிறப்பிதழ் (6)

### நவம்பர் 3 வெள்ளிக்கிழமை அன்று வெளிவருகிறது!



**தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டினை யொட்டி, ஒவ்வொரு மாதமும் 3 ஆம் தேதியன்று “முரசொலி சிறப்பிதழ்” வெளிவரும் என்று அறிவிக்கப் பட்டுள்ளது.**

**அந்த அறிவிப்பிற்கு ஏற்ப, நவம்பர் 3 வெள்ளிக்கிழமை அன்று முரசொலி சிறப்பிதழ், “கவிஞர்களின் உரை நடையில் கலைஞர்” என்ற தலைப்பில், முரசொலியின் இணைப்பாக வெளிவருகிறது.**

**- ஆசிரியர்.**

# ஆளுநர் பொய் சொல்வதையே தொழிலாகக் கொண்டவர்!

## அமைச்சர் க.பொன்முடி பேட்டி... முதல் பக்கத் தொடர்ச்சி

மீதெல்லாம் மதிப்பு கொடுப்பது கிடையாது. அவர் ஆர்.எஸ்.எஸ். பி.ஜே.பி. அரசாங்கத்தினுடைய ஏஜெண்ட், அதுவும் அவர்கள் சொல்லி இவர் செய்கிறாரா? இவரா செய்கிறாரா என்பது தெரிய வில்லை, இருந்தாலும் அவர் செய்வ தெல்லாம் பி.ஜே.பி. க்கும், அதேபோல, ஆர்.எஸ்.எஸ். க்கும் ஆதரவாகத்தான் இதையெல்லாம் செய்கிறார் என்பது மிகத் தெள்ளத் தெளிவாகத் தெரிகிறது.

அந்த அடிப்படையில்தான் அவர் தின மும் பொய் சொல்வதையே தன்னுடைய தொழிலாகக் கொண் டிருக்கிறார். ஆளுநர் வீட்டிற்கு எதிரே நடந்தது என்ன மாதிரி என்று உங்களுக்கே தெரியும், காவல்துறையினர் மிகச் சிறப்பாக எல்லா மக்களுக்கும் தெரியும் வகையில், புரிகின்ற வகையில் வெளியிட்டதை நீங்கள் பார்த்திருப் பீர்கள். அதுபோல நடந்து கொண் டிருக்கிற பொழுது, அவர் உடனே என்ன சொல்கிறார், கவர்னர் மாளி கைக்குள் வந்தார்கள், வீசினா ர் கள், போனார்கள், இதற்கு ஒரு அளவு இல்லையா? ஒரு ஆளுநர் என்றால் யார்? நான் அடிக்கடி சொல்வதுண்டு, He is only a nominal Executive பெயரளவுக்கு தான் நிர்வாகி.

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு அமைச்சரவையில் இருப்பவர்கள் தான் real executive அதுதான் உண்மை. அந்த Real executive இருக்கின்றவர்கள் சொல்வதை கையெழுத்து போடுவதுதான் அவ ருடைய வேலை. அதற்குதான் உச்ச நீதிமன்றத்துக்கு நாங்கள் சென்றிருக்கிறோம். உச்ச நீதிமன் றத்திற்குச் சென்றதற்கு காரணம், பல்வேறு கோப்புகளில் கையெழுத் துப் போடாமல் வைத்திருக்கிறார். அடித்தட்டு மக்களுக்கு உதவ வேண்டிய அவசியம் இருக்கின்ற இந்த காலகட்டத்தில், இவ்வளவு நிதி நெருக்கடி இருக்கின்ற நேரத் தில், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அடித்தட்டு மக்களுக்கு எவ்வளவு செய்து கொண்டிருக்கி றார் என்பது உங்களுக்குத் தெரி யும். ஆகவே நீங்கள் குறிப்பாக அவருக்கு சொல்ல வேண்டியது இதுதான். ஆளுநர் அவர்களே, முதலில் நான் சொன்ன மாதிரி, You are not a real executive. நீங்கள் உண்மையிலேயே நம்முடைய தமிழகத்தினுடைய அமைச்ச ரவை என்ன சொல்லுகிறதோ அதை செய்ய வேண்டியவர்.

### ஆளுநருக்கு தைரியம் உண்டா?

நீங்கள் நியமிக்கப்பட்டு இருக்க லாம், ஆனால், நீங்கள் அவர்கள் சொல்லுவதைக் கேட்டு, இந்த ஆட்சி நடத்த வேண்டும் என்பது இல்லை, அது தெளிவாக அரசியல மைப்புச் சட்டத்திலேயே இருக்கி றது. அமெரிக்காவில் கவர்னர் இருக்கிறார் என்றால், He is elected, அது உண்மையான federation. இந்தியாவிலேயே இருப்பது Quasi federation. இந்திய நாட்டில் மாநில உரிமைகளைப் பறிக்கும் வகையில் ஒரு மாநில ஆளுநர் செயல்படுகிறார் என்று சொன்னால் அது மிகவும் கண்டிக் கத்தக்கது. ஆளுநர் அவர்களே, நீங்கள் வேண்டுமென்றால், தேர் தலில் நின்று, ஜெயித்து வாருங் கள். வந்த பிறகு, உங்கள் ஆர். எஸ்.எஸ்., பி.ஜே.பி. கருத்துக் களை எல்லாம் பேசுங்கள். அதற்கு அவருக்கு தைரியம் கிடையாது.

அப்படி இருக்கின்ற ஒருவர், நிய மிக்கப்பட்ட ஒரு ஆளுநராக இருந்து கொண்டு தேர்ந்தெடுக்கப் பட்ட மக்களுடைய பிரதிநிதியாக இருக்கின்ற இந்த அமைச்சரவை கூடுகின்ற சட்டங்களில் கையெழுத் திட மறுக்கிறார் என்று சொன்னால், இதை விட மோசமான ஆளுநர் இதுவரை இருந்ததில்லை. நானும் ரொம்ப நாளாக மாணவ பருவத்தி லிருந்து ஆளுநர்களை எல்லாம் பார்த்துக் கொண்டிருக்கிறேன். ஆனால் இவரைப்போல தவறு செய்பவர்கள் யாரும் இருக்க முடி யாது. இவரை போல பொய் பேசுப வர்கள் யாரும் இருக்கமுடியாது. உண்மைக்கு புறம்பான பல்வேறு செய்திகளை எடுத்து வைத்து இந்த ஆட்சியின் மீது எப்படியாவது ஒரு களங்கத்தை கற்பிக்க வேண்டும் என்ற எண்ணத்தில்தான் ஆளுநர் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார் என்பதை நாட்டு மக்கள் மிகத் தெளிவாக புரிந்து கொண்டிருக்கி றார்கள்.

### பட்டமளிப்பு விழாவை புறக்கணிக்க முடிவு!

ஆகவேதான் சங்கரய்யா அவர் களுக்கு, பல்கலைக் கழகம் கௌரவ முனைவர் பட்டம் கொடுப் பதை நாங்கள் வரவேற்றோம். அதை செய்யவேண்டும் என்று சொன்னோம். ஆளவை மன்றம், ஆட்சிமன்றம் கொண்டு வந்த தீர் மானம் எல்லாம் நிறைவேறியது. ஆனால் ஆளுநர் அவர்கள் அதற்கு மறுத்திருக்கிறார். அதனால்தான் நாளை மதுரையில் நடைபெறவி ருக்கின்ற பட்டமளிப்பு விழாவில் நான் கலந்து கொள்வதாக இல்லை. இன்றைக்கும் ஆசிரியர் சங்கத்திலிருந்தும் ஒரு அறிக் கையை கொடுத்திருக்கிறார்கள். இவ்வளவு பேர் சொல்லியும், இவர் கேட்கமாட்டேன் என்று சொல்கி றார் என்றால், இவர் எந்த எண் ணத்தில் செயல்படுகிறார் என்பதை பத்திரிகையாளர்களாக இருக்கின்ற நீங்கள்தான் தெளிவாக புரிந்து கொள்ளவேண்டும். ஆகவே, ஆளுநர் அவர்களை பொறுத்தவ ரையில், நாளைக்கு அவர் நடத்த விருக்கின்ற பட்டமளிப்பு விழாவில் நாங்கள் கலந்து கொள்ளாமல் புறக் கணிக்கிறோம் என்பதை உங்கள் மூலமாக தெரிவித்துக் கொள்கி றேன்.

**கேள்வி :** *நீங்கள் அமைச்சர், ஒரு நியமன ஆளுநர் சொல்வதற் காக நீங்கள் ஏன் போகாமல் இருக் கிறீர்கள்?*

**அமைச்சர் க.பொன்முடி:** அவர்தான் அதை நடத்துகிறார். முன்பு பட்டமளிப்பு விழா நடத்தும் போது இணைவேந்தர், வேந்தர், Chief guestம் பேசுவார்கள். இப் போது, என்னையும் பேசவிடுவ தில்லை, அவரும் பேசுவதில்லை, Chief guest மட்டும் பேசினால் போதும் என்று பட்டமளிப்பு விழா நடத்துவதை எங்கேயாவது பார்த் திருக்கிறீர்களா? இவர்தான் அதை செய்கிறார். அவருக்கு வேந்தர் என்ற பதவியை பயன்படுத்திக் கொண்டு, எது வேண்டுமானாலும் செய்யலாம் என்றுதான் நினைக்கி றார். அதனால்தான் வேந்தருக்கு எதிர்ப்பு தெரிவிக்கவேண்டும் என்ற கட்டாயம் எனக்கு இருக்கி றது. அந்த அடிப்படையில்தான், நாங்கள் இந்த பட்டமளிப்பு விழாவை புறக்கணிக்கிறோம்.

**கேள்வி :** *கடிதம் ஏதாவது அவர்களிடமிருந்து வந்திருக் கிறதா?*

**அமைச்சர் க.பொன்முடி:** இங்கே எந்த கடிதமும் வந்தது போல தெரியவில்லை. இன்னும் சொல்லவேண்டும் என்று சொன் னால், இங்கிருந்து அங்கே உள்ள செயலாளரிடம் பேசியிருக்கிறார் கள். துணை வேந்தர் மற்றும் பதி வாளர் நேரடியாக பேசியிருக்கிறார் கள். அவர்கள் பேசியதையும் அவர் ஏற்றுக் கொள்ளவில்லை.

**கேள்வி :** *காரணம் சொல்லவில் லையா?*

**அமைச்சர் க.பொன்முடி:** அவர்கள் நேரடியாகவே சென்று ஆளுநரிடம் இதை கொடுக்க வேண்டும் என்ற வேண்டுகோள் வைத்திருக்கிறார்கள். அப்படி வைத்தும் அவர் கேட்கவில்லை. மேலும், அவர் RSS, பிஜேபியை சேர்ந்தவர். பொருளாதார சமத்து வம், சமூகநீதி பேசுகின்ற திராவிட இயக்கத்தை சேர்ந்தவர்கள் மற் றும் அதற்கு பாடுபட்டவர்கள், சுதந் திர போராட்ட வீரர்களை அவர் புறக்கணிக்க வேண்டும் என்று நினைக்கிறார். அதுதான் இதற்கு காரணமாக இருக்கமுடியும்.

### துணைவேந்தர் நியமனம்!

**கேள்வி :** *ஏற்கனவே, 12 மசோ தாக்கள் தொடர்பாக வழக்கு போட்டிருக்கிறீர்கள். அது எந்த நிலைமையில் உள்ளது? மாநில அரசு பல்கலைக்கழக துணை வேந் தர்களை நியமிக்கும் அதிகாரம் பற்றி...*

**அமைச்சர் க.பொன்முடி:** மாநில அரசு நியமிக்கும் அதிகாரம் ஒன்று. சென்னைப் பல்கலைக்கழ கத்தில் துணை வேந்தர் பணியிடம் காலியாக இருக்கிறது. அதேபோல திறந்தவெளி பல்கலைக் கழகத்தில் பணியிடம் காலியாக இருக்கிறது. அங்கெல்லாம், துணை வேந்தர் களை நியமிப்பதற்கு ஒரு குழு அமைக்கப்பட்டிருக்கும். அந்த குழுவை யாரால் நியமிக்கப்பட வேண்டும் என்பதற்கு அந்த பல்க லைக் கழக விதியில் சொல்லப்பட் டிருக்கிறது. அந்த விதியில் அவர் கள் சொல்லப்பட்டிருப்பதைத் தவிர, ஆளுநர் அவர்கள் என்ன செய்கி றார் என்றால், இரண்டு பேரை அதில் சேர்க்கவேண்டும் என்று நினைக்கிறார். எனவே சட்டமன் றத்தில் ஒருமனதாக நிறைவேறி இருப்பது துணை வேந்தரை நிய மிக்கின்ற அதிகாரம் தமிழ்நாடு அர சுக்கு கொடுக்கவேண்டும் என்று நாங்கள் கேட்டிருக்கிறோம்.

**கேள்வி :** *அரசு ஆணை இருக்கிறதே...*

**அமைச்சர் க.பொன்முடி:** பதில் : அரசு ஆணை இருக்கிறது. அதில் இன்னொருவரை சேர்த்து அவர் நியமிக்கிறார்.

### வட இந்திய ஆட்களைத் திணிக்கிறார்கள்!

**கேள்வி :-** *UGC தன்னுடைய விதியில் nominee இருக்கவேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். அது பற்றி....*

**அமைச்சர் க.பொன்முடி :** இது தவறான செய்தி. UGC நீதிமன் றத்தில் சொல்லும்போது it will depends upon the will of the states மாநிலங்களின் விருப்பத்தை பொறுத்து அவர்கள் சொன்னால், நியமிக்கலாமே தவிர, நியமித்தே ஆகவேண்டும் என்று எங்கேயும் சொல்லவில்லை. UGCக்கு அந்த அதிகாரம் கிடையாது. எதற்கு ஆளவை மன்றம், ஆட்சிமன்றம் எல்லாம் பல்கலைக் கழகத்தில் இருக்கிறது. அவர்களுக்கு அதிகா ரம் இருக்க வேண்டாமா? அவர் கள் ஒரு முறைக்கு இரண்டு முறை யாக நிறைவேற்றி அனுப்பிய தீர்மானத்திற்கு ஒரு கௌரவ முனைவர் பட்டம் கொடுக்க மாட் டேன் என்று சொல்கிறார். மூன்று பேர் கொண்ட குழுவால் ஆளவை மன்றம், ஆட்சிமன்றம் கொண்டு வந்த தீர்மானம் நிறைவேற்றியது. அந்த குழுவையும் ஏற்றுக்கொள்ள மாட்டேன் என்று சொல்கிறார்கள். இன்னொருவரை நியமியுங்கள் என்று அவர்களுடைய ஆட்களை கொண்டு வந்து திணிக்கிறார்கள்.

வட இந்தியாவில் உள்ள ஆட் களை கொண்டு திணிக்கிறார்கள். இதையெல்லாம் நாம் பார்க்கின்ற போது, நிச்சயமாக இந்த திராவிட மாடல் என்றாலே அவருக்கு கசப் பாக இருக்கிறது. ஆகவே தான் இந்த வேலைகள் எல்லாம் செய்து கொண்டிருக்கிறார் என்பது நடை முறையில் மக்கள் தெளிவாக புரிந்து கொண்டிருக்கிறார்கள். தமிழ்நாட்டை பொறுத்தவரையில் திராவிடத்தை யாராலும் அசைக்க முடியாது, அது உண்மை.

இவ்வாறு அமைச்சர் க.பொன் முடி பேட்டியளித்தார்.




தாம்பரம் மாநகர தி.மு.கழக ஆலோசனைக் கூட்டம் தாம்பரம் கோன்கிருஷ்ணா திருமண மண்டபத்தில் E.மனோகரன் தலைமையில் நடைபெற்றது இக்கூட்டத்தில் மாநகர கழக செயலாளர் எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ. சிறப்புரையாற்றினார். இதில் டி.காமராஜ், எஸ்.இந்திரன் டி.ஆர்.கோபி, ரமணி ஆதிமுலம், டைகர்சிவா, இரா.விஜயகுமார், தி.ச.நடராஜன், மலர் மு.கருணாநிதி, பி.ஜோதிகுமார், வி.கார்த்திக் சா.இராஜேஷ், எஸ்..கார்த்திக் கிரிஜா, சந்திரன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

## வாக்காளர் பட்டியல் சரிபார்த்தல் குறித்து

# ஈரோடு தெற்கு மாவட்டக் கழகத்தினர் தீவிரமாக ஈடுபடுவீர்!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் சு.முத்துசாமி அறிக்கை!

ஈரோடு, நவ. 2 -

ஈரோடு தெற்கு மாவட்ட கழக செயலாளரும், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, மதுவிலக்கு ஆயத்தீர்வை துறை அமைச்ச ருமான சு.முத்துசாமி விடுத் துள்ள அறிக்கை வருமாறு :-

ஈரோடு தெற்கு மாவட் டத்தில் வாக்காளர்கள் மற் றும் இளைய வாக்காளர் களை பட்டியலில் சேர்த்தல் பணி நடைபெறுகிறது. ஒவ் வொரு ஆண்டும் இந்திய தேர்தல் ஆணையம் வாக்கா ளர்கள் பட்டியலில் திருத்தம் செய்வது வழக்கமான ஒரு பணியாகும்.



இதன் தொடர்ச்சியாக இந்த ஆண்டிற்கான திருத்தம் செய்யும் பணிக்கு ஏதுவாக 27.10.2023 அன்று வரைவு வாக்காளர் பட்டியலை வெளியிட்டுள்ளது. இதன் அடிப்படையில் 18 வயது நிரம்பிய வாக்காளர்கள் அனைவரும் தங்களது வாக் குச்சாவடி சென்று படிவம் 6 பூர்த்தி செய்து தங்களை இணைத்துக் கொள்ளவும். பெயர் நீக்கத்திற்கு படிவம் 7 திருத்தத்திற்கு படிவம் 8, முகவரி மாற்றத்திற்கு படிவம் 9 பூர்த்தி செய்து கொடுக்க வும். ஏற்கனவே பட்டியலில் உள்ளவர்கள் தங்களது பெயர் உள்ளதா என்று சரி பார்த்து கொள்ளவும்.

இந்த வாக்காளர் பட்டிய லில் புதிதாக பெயர் சேர்த் தல், நீக்கல், முகவரி மாற்றம் ஆகிய திருத்தங்கள் மேற் கொள்ள சிறப்பு முகாம்கள் 4.11.2023, 5.11.2023 மற்றும் 18.11.2023, 19.11.2023 ஆகிய தேதிகளான சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமை நாட்களில் அந்தந்த பகுதிக ளில் உள்ள வாக்குச்சாவடிக ளில் நடைபெறுகிறது. அப் படி வரும் போது பாஸ்போர்ட், ஓட்டுநர் உரி மம், ஆதார் அட்டை, குடும்ப அட்டை உள்ளிட்ட ஏதாவது ஒரு ஒரிஜினல் ஆவணங் களை அவர்களிடம் காட்ட வேண்டும். வாக்காளர் அடையாள அட்டையில் ஏதாவது ஒரு குறைபாடு இருப்பின் அதனை நிவர்த்தி செய்ய விரும்பும் வாக்காளர் கள் தங்கள் பகுதி அருகாமை யில் அமைந்துள்ள இசேவை மையங்களை அணுகவும் என இந்திய தேர்தல் ஆணையம் அறிவுறுத்தியுள்ளது.

ஆகவே தேர்தல் ஆணை யம் வழங்கியுள்ள இந்த வாய்ப்பினை பயன் உள்ள தாக பொதுமக்கள் பயன்பெ றும் வகையில் மாநகர, ஒன் றிய, பகுதி, வார்டு கழக நிர்வாகிகள், கிளை கழக செயலாளர்கள், பேரூர் கழக செயலாளர்கள், வாக்குச்சா வடி முகவர்கள் (BLA2) பூத் கமிட்டி நிர்வாகிகள், சார்பு அணிகளின் நிர்வாகிகள் மற் றும் கழக நிர்வாகிகள் மேற் கொள்ள வேண்டும். இந்த பணியை மேற்கொள்ள இதற் கான ஏற்பாட்டினை மாநகர ஒன்றிய, பகுதி கழக செயலா ளர்கள் சிறப்பாக செய்திட வேண்டும் என ஈரோடு தெற்கு மாவட்ட கழகம் சார் பாக கேட்டு கொள்கிறேன்.

இவ்வாறு ஈரோடு தெற்கு மாவட்ட கழக செயலாள ரும், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, மதுவிலக்கு ஆயத்தீர்வை துறை அமைச்சருமான சு.முத் துசாமி தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

## வாக்காளர் பட்டியல் சரிபார்ப்பு!

# தென்காசி வடக்கு மாவட்டக் கழகத்தினர் தீவிரமாக ஈடுபடுவீர்!

## மாவட்டச் செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ. வேண்டுகோள்!

தென்காசி, நவ. 2 -

முதலமைச்சர் - கழகத் தலைவர் அவர்களின் அறி வுறுத்தலின்படி தென்காசி வடக்கு மாவட்டத்தில் வாக்காளர் சரிபார்ப்பு பணியில் முழு கவனத்து டன் ஈடுபடுவீர்.என தென் காசி வடக்கு மாவட்டச் செயலாளர் ஈ.ராஜா எம். எல்.ஏ.கழக நிர்வாகிக ளுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிவிப் பில் தெரிவித்திருப்பதாவது.

01.01.2024 தேதியை தகுதி ஏற்படுத்தும் நாளாக கொண்டு தமிழகத்தில் உள்ள வாக்காளர் பட்டி யல்கள் திருத்தம் செய்திட வரைவு வாக்காளர் பட்டி யலை கடந்த 27.10.2023 அன்று தமிழக தேர்தல் ஆணையம் வெளியிட்டுள் ளது.அதனைத் தொடர்ந்து 27.10.2023 முதல் 09.12. 2023 வரை புதிய வாக்கா ளர்களை சேர்க்கவும், மற் றும் பெயர்கள் நீக்கம் செய்யவும், மனு செய்ய தேர்தல் ஆணையத்தால் கால அவகாசம் கொடுக்கப் பட்டுள்ளது.

இது தவிர 04.11.2023 சனி 05.11.2023 ஞாயிறு,18. 11.2023 சனி மற்றும் 19.11 .2023 ஞாயிறு ஆகிய 4 நாட்களில் நிர்ணயிக்க ப் பட்ட வாக்குச்சாவடி மையங்களில் சிறப்பு முகாம்கள் நடத்தப்பட உள்ளது.இந்த நாட்களில் விடுபட்ட வாக்காளர்க ளும் இடம் மாறிய வாக்கா ளர்களும் 01.01.2024 அன்று 18 வயது நிரம்பக் கூடிய புதிய வாக்காளர்க ளும் தங்களது பெயர்களை சேர்க்க,நீக்க,திருத்தங்கள் மேற்கொள் வதற்கான படி வங்களை பூர்த்தி செய்து, பூர்த்தி செய்த படிவங் களை அந்தந்த முகாம்களில் கொடுக்க வேண்டும்.

இதன் அடிப்படையில் 01.01.2024 அன்று 18 வயது நிறைந்தவர்களின் பெயர்க ளையும்,வாக்காளர் பட்டி யலில் இதுவரை இடம்பெ றாத பெயர்களையும், புதிதாக குடிபெயர்ந்துள்ள வாக்காளர்களின் பெயர்க ளையும் வாக்காளர் பட்டி யலில் சேர்க்கவும்,

தொகுதியிலிருந்து இடம் பெயர்ந்தவர்கள் மற்றும் இறந்தவர்கள் பெயர்களை தற்போதுள்ள பட்டியலில் இருந்து நீக்க வும் தீவிர நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

தென்காசி வடக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட ஒன்றிய, நகர, பேரூர், கழக செயலாளர்கள், வார்டு,

கிளை, கழக செயலாளர் கள், சார்பு அணிகளின் நிர் வாகிகள்,வாக்குச்சாவடி நிலை முகவர்கள் (BLA 2) ஆகியோர் தங்களை இப்ப ணியில் முழுமையாக ஈடுப டுத்தி தாங்கள் ஆற்றிய பணியின் விவரத்தை மாவட் டக் கழகத்திற்கு அவ்வப்போது தெரியப்ப டுத்திட கேட்டுக் கொள்கி றேன்.

இவ்வாறு அவர் தெரி வித்துள்ளார்.




சென்னை மண்டல அமைப்புசாரா ஓட்டுநர் அணி ஆலோசனைக் கூட்டம் 28.10.2023 தேதி, சனிக்கிழமையன்று, சென்னை மேற்கு மாவட்ட கழக செயலாளர் நே.சிற்றரசு தலைமையில், மாவட்ட கழக அலுவலகத்தில் நடைபெற்றது. இந்த ஆலோசனைக் கூட்டத்தில் சிறப்பு விருந்தினராக அமைப்புசாரா ஓட்டுனர் அணி மாநில செயலாளர் டி.செங்குட்டுவன் மாநில துணைச் செயலாளர் திரு.உதயசூரியன், திரு.ராம்குமார் மாவட்ட அமைப்பாளர் சி.கே.ரெங்கராஜ், மாவட்ட நிர்வாகிகள் குப்பசாமி, முருகன், தட்சிணாமூர்த்தி, முத்துகிருஷ்ணன், ஆனந்தன், ஆனந்தகுமார் மற்றும் கழக நிர்வாகிகள் உடன் கலந்து கொண்டனர்.

## தோவாளை கிழக்கு ஒன்றியத்தில்

# ஊராட்சிகளில் பாகமுகவர்கள் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் ரெ.மகேஷ் சிறப்புரை!

குமரி, நவ. 2 -

கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம், தோவாளை கிழக்கு ஒன்றியத்திற்கு உட்பட்ட ஈசாந் திமங்கலம், இறச்சகுளம், திருப்ப தி சாரம், பீமநகரி ஆகிய ஊராட் சிகளில் உள்ள 13 வாக்குச்சாவடிகளில் 100 வாக்கா ளர்களுக்கு 1 முகவர் என்று நிய மிக்கப்பட்ட வாக்குச்சாவடி பாகமுகவர் குழு உறுப்பினர்க ளுக்கான (BLC) ஆலோசனைக் கூட்டம் 31.10.2023, செவ்வாய்க் கிழமை அன்று மாலை 5.00 மணிக்கு இறச்சகுளம், ஆர்.கே. மஹாலில் வைத்து தோவாளை கிழக்கு ஒன்றிய செயலாளர் செல்வன் தலைமையில் நடை பெற்றது. அதனை தொடர்ந்து தோவாளை, செண்பகராமன்பு தூர், சகாய நகர், மாதவலாயம் ஆகிய ஊராட்சிகளில் உள்ள 19 வாக்குச்சாவடிகளில் நியமிக்கப்பட்ட வாக்குச்சாவடி பாகமுகவர் குழு உறுப்பினர்க ளுக்கான (BLC) ஆலோசனைக் கூட்டம் சண்முகபுரம், கிராண்ட் திருமண மண்டபத்தில் வைத்து நடைபெற்றது. கூட்டத்தில் சிறப்பு விருந்தினராக கன்னியா குமரி கிழக்கு மாவட்டச் செய லாளர் - நாகர்கோவில் மாநக ராட்சி மேயர் ரெ. மகேஷ் கலந்து கொண்டு கழக நிர்வாகிகளுக்கு ஆலோசனைகள் வழங்கி சிறப்புரை யாற்றினார். மேலும் வாக்குச்சாவடி பாகமுக வர் குழு உறுப்பினர்களின் (BLC) வருகை பதிவேடு தனித்தனியே ஆய்வு செய்யப்பட்டது. கூட்டத் தில் பொதுக்குழு உறுப்பினர் செ.காதர்ரஹ்மான் ஊராட்சி தலைவர்கள், மாவட்ட விவசாய விவசாய தொழிலாளர் அணி அமைப்பாளர் சங்கர், அணிக ளின் நிர்வாகிகள், வாக்குச்சா வடி முகவர்கள் (BLA 2), வாக்குச் சாவடி பாகமுகவர் குழு உறுப்பினர்கள் (BLC) உட்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

பல இன்னல்களை நமக்கு தந்து கொண்டிருக்கிற ஒன்றிய பா.ஜ.க. அரசை வீழ்த்தும் வித மாக வருகின்ற நாடாளுமன்றத் தேர்தலில் கழகத் தலைவர் - தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி யார் அவர்கள் சுட்டிக்காட்டு கின்ற வேட்பாளரை அதிகப்படி யான வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற செய்ய வாக்குச்சா வடி பொறுப்பாளர்கள் இன்றே அயராது பாடுபட வேண்டும் எனவும் மேலும் களப்பணியை தீவிரப்ப டுத்த வேண்டும் என வும் இக்கூட்டம் கேட்டுக் கொள்கிறது என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.




தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கினங்க, இராயபுரம் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட ஆர்.எஸ்.ஆர்.எம் மகப்பேறு மருத்துவமனையில் முதுநிலைப் பயிலும் மருத்துவ மாணவயிர்களுக்கு உடற்பயிற்சிக் கூடம், கேரம், செஸ் அடங்கிய மனமகிழ்மன்றத்தினை இராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் ஐட்ரீம் இரா.மூர்த்தி திறந்து வைத்தும், கர்ப்பிணி தாய்மார்கள் மற்றும் பொதுமக்களிடம் குறைகளை கேட்டறிந்தும் ஆய்வுமேற்கொண்டார். மேலும் 30 ஆண்டுகளாக ஆர்.எஸ்.ஆர்.எம் மகப்பேறு மருத்துவ மனையில் செயலியராக தொடங்கி செவிலியர் கண்காணிப்பாளராக இருந்துவந்த வி.பத்மசாந்தி பணி நிறைவு விழாவில் பங்கேற்று அவர்களை பாராட்டி வாழ்த்தினார். இந்நிகழ்வில் இராயபுரம் மேற்கு பகுதி செயலாளர் வ.பெ.சுரேஷ், மருத்துவமனை கண்காணிப்பாளர் டாக்டர்.சாந்தி, மருத்துவர்கள் மற்றும் கழக நிர்வாகிகள் இருந்தனர்.

## சித்தாந்த ரீதியாக

# மாநில உரிமைகளுக்காகப் பேசக்கூடிய ஒரே முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்!

## “நியூஸ் ஃபோக்கஸ் தமிழ்” இணையதளத் தொலைக்காட்சியில் மூத்த பத்திரிகையாளர் மணி ஆணித்தரமான வாதம்!

**சென்னை,நவ.2–**

**“சித்தாந்த ரீதியாக மாநில உரிமைகளுக்காகப் பேசக் கூடிய ஒரே முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தான்” என்று மூத்த பத்திரிகையாளர் மணி ‘நியூஸ் ஃபோக்கஸ் தமிழ்’ இணையதளத் தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியில் ஆணித்தரமாகக் கூறியுள்ளார்.**

‘நியூஸ் ஃபோக்கஸ் தமிழ்’(news focus tamil) இணைய தள தொலைக்காட்சியில் மூத்த பத்திரிகையாளர் மணி அளித்த பேட்டி வருமாறு

**நெறியாளர் அன்பழகன்:** Spaking for India டைட்டிலில் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடர்ச்சியாக பேசிக் கொண்டு இருக்கிறார். இரண்டாவது எபிசோட்டில் சி.ஏ.ஜி. அறிக்கை பற்றி பேசிஇருந்தார். இன்றைக்கு மூன்றாவது எபிசோட் ரிலீஸ் ஆகி இருக்கிறது. இதில் மாநில சுயாட்சி விஷயத்தை பிரதானமாக போக்கஸ் செய்து பேசி இருக்கிறார். அந்த வீடியோவை நீங்கள் பார்த்திருப்பீர்கள் என்று நினைக்கிறேன். முதல் கட்டமாக அந்த வீடியோ பற்றி உங்கள் கருத்தை பதிவு செய்யுங்கள்.

**மூத்த பத்திரிகையாளர் மணி:** ஆமாம், மிகவும் நல்ல உரையாடலாகத்தான் நான் பார்க்குறேன். அவர் மாநில சுயாட்சி குறித்து பேசி இருக்கிறார். நரேந்திர மோடி அவர்கள் முதலமைச்சராக இருந்த போது பேசிய பேச்சுக்கும், இப்போது உள்ள பேச்சுக்கும் இடையில் உள்ள முரண்பாடுகளை நன்றாக தோலுரித்துக் காட்டியிருக்கிறார். இந்தியாவிற்கான வளர்ச்சி என்பது மாநிலங்களில் தீர்க்கப்படும் என்று மோடி முதலமைச்சராக இருந்த போது சொன்னது பிரதமரானவுடன் டெல்லிக்கு எல்லா முதலமைச்சர்களும் காவடி தூக்கக் கூடிய சூழ்நிலை ஏற்பட்டது என்று சொல்லி இருக்கிறார். நிதி அயோக் குறித்து பேசி இருக்கிறார். அதே போல் கடந்த ஆட்சியில் மோடி பேசிய பல விஷயங்கள் இன்றைக்கு எப்படி தலைகீழாக மாறிப்போய் இருக்கின்றன என்பதையும் அவர் குறிப்பிட்டு பேசி இருக்கிறார்.

12 வது நிதிக்குழு அறிக்கைகளைப் பற்றி தெளிவாகப் பேசி இருக்கிறார். மாநிலங்களுக்குக் கொடுக்க வேண்டிய நிலுவைத்தொகை 19 ஆண்டுகளாக நிலுவையில் இருக்கிறது என்று சொல்லி இருக்கிறார். மத்திய அரசாங்கத்தின் பாரா முகத்தால் மாநிலங்களின் நிதி நிலை என்பது ஐ.சி.யு.வில் இருக்கிறது என்று சொல்லிக் கொண்டு இருக்கிறார்.

NEWS “FOCUS” TAMIL

இத்தனை இடர்பாடுகளுக்கு மத்தியிலும் தமிழ்நாடு போன்ற மாநிலங்கள் நலத்திட்டங்களை நிறைவேற்றிக் கொண்டிருக்கின்றன. இதனை சுட்டிக் காட்டிய முதலமைச்சர் ஒரு வேளை நல்ல அரசு அமைந்திருந்தால் நம்மால் இன்னும் அதிகமாக சாதித்திருக்க முடியும் என்பதையும் மக்களுக்கு நினைவூட்டி இருக்கிறார். ஒரு மிக நல்ல உரையாகத்தான் நான் இதனை பார்க்கிறேன்.

கண்டிப்பாக பா.ஜ.க.வுக்கு இது வயிற்றில் புளியைக் கரைக்கும். ஏன் என்றால் இந்தியாவிலேயே மிக சரியாக மாநில உரிமைகளுக்காக சித்தாந்த ரீதியிலும், தரவுகளின் அடிப்படையிலும் பேசக்கூடிய ஒரே முதலமைச்சராக தமிழக முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் தான் இருக்கிறார்.

இந்த உரை என்பது மிகவும் நல்ல உரை என்று நான் பார்க்கிறேன்.

**நெறியாளர் :** ஏற்கனவே சி.ஏ.ஜி. அறிக்கை பற்றி பேசி இருக்கிறார். அதனுடைய ரியாக்ஷனாக சி.ஏ.ஜி. அதிகாரிகள் மாற்றப்பட்டனர் என்று முகப்பிலே சொல்கிறார். இப்போது நான் மாநில சுயாட்சி பற்றி பேசப்போறேன் என்று சொல்கிறார். இதன் ரியாக்ஷன் பா.ஜ.க.விடமிருந்து எப்படி இருக்கும் என்று நீங்கள் பார்க்கிறீர்கள்.?

**மூத்த பத்திரிகையாளர் மணி:** அதில் சி.ஏ.ஜி. ரிப்போர்ட் அதிகாரிகளை மாற்றினார்



கள். இன்னும் மாநில உரிமைகளை பறிப்பார்கள் அதனை நியாயப்படுத்துவார்கள். இந்தியாவின் அரசியல் அமைப்பு சாசன அமைப்பால் உருவாக்கப்பட்ட அனைத்து அங்கங்களையும் சிதைப்பார்கள். ஒரு அழகான நந்தவனம், இன்றைக்கு கிடைக்கக் கூடாதவர்களின் கையில் கிடைத்ததால் சிதைந்து சின்னாபின்னமாகிக் கொண்டிருக்கிறது.

ஆகவே இந்த உரைக்குப் பிறகும் அவர்கள் ஒன்றும் திருந்தப் போவதுகிடையாது. அவர்கள் மேலும் கூட்டாட்சித் தத்துவத்தின் மீதான தாக்குதல்களை அதிகரிப்பார்கள். இன்றைக்கு தன்னுடைய உரையில் முதலமைச்சர் சொல்லி இருப்பதைப் போல அவர்கள் மாநிலங்களைக் கலைத்து விட்டு எல்லாவற்றையும் ஒரு நகராட்சியைப் போல உருவாக்கத்தான் விரும்புகிறார்கள்.

### மக்கள் 2024-இல் ஆட்சி மாற்றத்தைக் கொண்டு வருவார்கள்!

ஆர்.எஸ்.எஸ்.சின் எண்ணம் பண்முகத் தன்மை கொண்ட இந்தியா அல்ல,இதனை அழித்து ஒற்றைத் தன்மை கொண்ட இந்தியாவாக உருவாக்க வேண்டும், மாநிலங்களை அழிக்க வேண்டும் நகராட்சிகளாக ஆக்க வேண்டும். மண்ணடலங்களாப் பிரித்து ஸ்பெஷல் ஆபிஸர்களைப் போட்டு இந்தியாவை நடத்த வேண்டும். இது தான் அவர்களின் நோக்கம். ஆர்.எஸ்.எஸ்.தான் இன்றைக்கு இந்தியாவை வழி நடத்திக் கொண்டிருக்கிறது. இந்தப்போக்கு தொடர்ந்தால் 2024 இல் மோடி வெற்றி பெற்றால், இந்தியா சவக்குழிக்குப் போகும் என்பதை தன்னுடைய உரையில் மறைமுகமாக முதலமைச்சர் சுட்டிக் காட்டியிருக்கிறார். நிச்சயம் மக்கள் 2024 இல் ஆட்சி மாற்றத்தைக் கொண்டு வருவார்கள். கவலை வேண்டாம்.

## மோடியின் இரட்டை வேடம்!

### பெட்ரோல் பங்கில் மோடி படம் எதற்கு!

**நெறியாளர்:** முக்கியமாக ஒரு விஷயத்தைக் குறிப்பிடுகிறார். திட்டங்களுக்கு மோடியின் படத்தை வைக்காவிடில் நாங்கள் நிதியை கட் செய்வோம் என்று ஒரு மினிஸ்டர் ஒருவர் கூறி இருக்கிறார். அது குறித்து முதல்வர் கருத்து தெரிவித்து இருக்கிறார்.

**மூத்த பத்திரிகையாளர் மணி:** உண்மை தான் நாம் பெட்ரோல் பங்கில் கூட பார்க்கிறோம் மக்கள் அன்றாடும் புழங்கக் கூடிய இடத்தில் மோடியின் படம் இருக்கிறது. பெட்ரோல் பங்கில் மோடியின் படம் எதற்கு? மன்மோகன் சிங் படமோ, வாஜ் பாய் படமோ, நரசிம்மராவ் படமோ, தேவகௌடா படமோ, ஐ.கே. குஜ்ரால் படமோ, சந்திரசேகர் படமோ வி.பி.சிங் படமோ, ராஜீவ் காந்தி படமோ , இந்திரா காந்தி படமோ, ஜவஹர்லால் நேரு படமோ, மொராஜ் தேசாய் படமோ, சரண்சிங் படமோ இருந்ததா , இவர் என்ன வானத்தில் இருந்து வந்து குதித்த பிரதமர் மாதிரி, பெட்ரோல் பங்கில் எதற்கு படம்?

ஒற்றைத் தன்மையில் நாடு நகர்கிறது. நகர்த்த முயற்சிக்கப்படுகிறது. இது நடந்தால் கண்டிப்பாக அதிபர் ஆட்சி முறை வரும். மோடி 2024இல் வெற்றி பெற்றால் இந்தியா சர்வாதிகாரப் பாதையில் பயணிக்கும். ஆகவே மோடிப்படத்தைப் போட்டு நீங்கள் விளம்பரம் செய்யுங்கள், நிதி இல்லாவிட்டால் திட்டங்களுக்கு அனுமதிக்க மாட்டோம் என்பது எல்லாம் அயோக்கியத்தனம். மாநிலஅரசு கொடுக்கக் கூடியது ஆயிரம் கோடி மத்திய அரசு ஒரு கோடி கொடுக்கிறது என்றால் மோடி படத்தை எதற்காக போட வேண்டும்? மத்திய அரசு பணமும், மாநில அரசுப் பணமும் அது மக்கள் பணம். இதில் எதற்கு மோடி படம். இது சர்வாதிகாரத்துக்கான அறிகுறி. இப்படித் தான் நாம் புரிந்து கொள்ளவேண்டும். இவை எல்லாம் சர்வாதிகாரத்தை நோக்கி நாட்டை நகர்த்துவதற்கான அறிகுறிகள். இந்திய மக்கள் விழிப்புடன் இருக்க வேண்டும்.

**நெறியாளர்:** இந்த விஷயத்தில் பிரதமர் நரேந்திர மோடி சி.எம். ஆக இருக்கும் போது அப்போது அவருடைய நிலைப்பாடு வேறாக இருந்தது. குறிப்பாக மாநிலங்களின் சுயாட்சி பற்றி அவர் நிறைய பேசி இருக்கிறார். ஆனால், இன்றைக்கு பிரதமரானவுடன் அவர் முதலில் ஒரு விஷயத்தை செய்திருக்கிறார் அரசியல் சட்டத்தின் முதல் வரியை அவர் கடுமையாக எதிர்க்கிறார்.

இதை அவர் எப்படி பார்க்கிறார் என்றால் அரசியல் அமைப்பின் முதல்வர் “India, that is Bharat, shall be a Union of States!” இந்தியா என்கிற பெயரை எடுத்துட்டு பாரத் என்கிற பெயரையே நிறுவப் பார்க்கிறார். பல இடங்களில் பார்த்துட்டோம். பிறகு யூனியன் ஆப் ஸ்டேட்ஸ் என்பதை காலி செய்துட்டு ஸ்டேட்ஸ்கான எந்தவிதமான முக்கியத்துவமும் பார்க்க முடியாமல் அதனை மாற்றி வைத்து இருக்கிறார். இந்த விஷயத்தை அவர் பதிவு செய்து இருக்கிறாரே இதனை எப்படி பார்க்குறீங்கள்?

### பா.ஜ.க. எண்ணம் நிறைவேறாது!

**மூத்த பத்திரிகையாளர் மணி :** ஆமாம், சரியான இடத்தை முதலமைச்சர் தொட்டு இருக்கிறார். மாநிலங்களின் கூட்டமைப்பையே மோடி மறுக்கிறார். இந்தியா என்பது ஒரு நாடு கிடையாது. இந்தியா என்பது மாநிலங்களின் கூட்டமைப்பு தான். “India, that is Bharat, shall be a Union of States!” மாநிலங்கள் இல்லை என்றால் இந்தியா இல்லை, இது தான் அரசியல் அமைப்பு சாசனத்தின் அடிப்படை. ஆனால் இதனை பா.ஜ.க. எப்படி திரிக்கிறது என்றால் இந்தியாதான் மாநிலங்களை உருவாக்கியது. உனக்கு தனித் தன்மை கிடையாது. நான் சொல்வதைக் கேள், போட்டதை தின்னுட்டு வேலை செய். இதுதான் பி.ஜே.பி.யின். ஆர்.எஸ்.எஸ்.சின் குறிக்கோள்.

அதனைத் தான் முதலமைச்சர் எதிர்க்கிறார். அதனைத்தான் இடது சாரிகள் எதிர்க்கிறார்கள். அதனைத்தான் காங்கிரஸ் எதிர்க்கிறது. எல்லா மாநிலக் கட்சிகளும் அதனை எதிர்க்கின்றன.

சரியான இடத்தை முதலமைச்சர் பிடித்து இருக்கிறார். இந்திய அரசியலமைப்பு சாசனத்தை ஏன் தலைகீழாக மாற்ற மோடி அரசும் முயற்சி செய்து கொண்டிருக்கிறது.

“India, that is Bharat, shall be a Union of States!” என்று ராகுல் காந்தி சொன்னதை திரித்து எப்படி விஷமப்பிரச்சாரம் செய்தார்கள்




என்பதை நாடு அறியும். இந்த முறை அந்தப் பருப்பு வேகாது. மாநிலங்கள் இல்லை என்றால் இந்தியா இல்லை. இதை இந்திய மக்கள் உணர்ந்து கொள்வார்கள். ஆகவே ஒற்றைத் தன்மையுடன் இந்த நாட்டை உருவாக்க, கட்டமைக்க முயற்சிக்கிற இந்தியாவை நிர்மாணிக்க விரும்புகிற ஆர்.எஸ்.எஸ். பா.ஜ.க.வின் குறிக்கோள் ஒருபோதும் நிறைவேறாது.

**நெறியாளர்:** அதாவது பிரதமர் நரேந்திர மோடி மாநிலங்களை புறக்கணிக்கிறார். மாநிலக் கட்சிகளை புறக்கணிக்கிறார். அவர்களுடைய உரிமைகளை புறக்கணிக்கிறார். ஆனால் அவர்களுடைய பண்பாட்டை மட்டும் எடுத்துக் கொள்கிறார். எங்களுடைய பண்ட் மட்டும் உங்களுக்குத் தேவைப்படுகிறது.

> ஆர்.எஸ்.எஸ்.சின் எண்ணம் பண்முகத் தன்மை கொண்ட இந்தியா அல்ல,இதனை அழித்து ஒற்றைத் தன்மை கொண்ட இந்தியாவாக உருவாக்க வேண்டும், மாநிலங்களை அழிக்க வேண்டும் நகராட்சிகளாக ஆக்க வேண்டும். மண்ணடலங்களாப் பிரித்து ஸ்பெஷல் ஆபிஸர்களைப் போட்டு இந்தியாவை நடத்த வேண்டும். இது தான் அவர்களின் நோக்கம். ஆர்.எஸ்.எஸ்.தான் இன்றைக்கு இந்தியாவை வழி நடத்திக் கொண்டிருக்கிறது. இந்தப்போக்கு தொடர்ந்தால் 2024 இல் மோடி வெற்றி பெற்றால், இந்தியா சவக்குழிக்குப் போகும் என்பதை தன்னுடைய உரையில் மறைமுகமாக முதலமைச்சர் சுட்டிக் காட்டியிருக்கிறார். நிச்சயம் மக்கள் 2024 இல் ஆட்சி மாற்றத்தைக் கொண்டு வருவார்கள். கவலை வேண்டாம்.

எங்களுக்கான நிதி எதுவும் திரும்ப கிடைக்க மாட்டேன் என்கிறது என்பதை பதிவு செய்து இருக்கிறார் அதனை எப்படி பார்க்குறீங்க?

**மூத்த பத்திரிகையாளர் மணி:** ஆமாம், உண்மைதான். மாநிலங்களை சுரண்டி மத்திய அரசு வாழ்ந்து கொண்டிருக்கிறது. தமிழ்நாடு மட்டுமல்ல எல்லா மாநிலங்களையும் மத்திய அரசு சுரண்டித்தான் கொழுத்துக்கொண்டிருக்கிறது.

இவர்களுக்கு கிடைக்கக் கூடிய பணம் எல்லாம் நம்முடைய பணம். ஆனால் நமக்கு பட்டை நாமம் போடப்படுகிறது. அதைத்தான் முதலமைச்சர் சுட்டிக் காட்டி இருக்கிறார் ஆட்சி மாற்றம் தான் இதற்கு ஒரு நிரந்தரத் தீர்வு.

**நெறியாளர்:** இன்னொரு முக்கியமான பொருளாதாரக் கருத்தை பதிவு செய்கிறார். இனி வரக்கூடிய காலக்கட்டங்களில் ஆண்டுக்கு பத்தாயிரம் கோடி ரூபாய் இழப்பு ஏற்படும் என்று குறிப்பிடுகிறார். அந்த இழப்பு எல்லாம் எப்படி பேஸ் செய்ய முடியும். ஏன் என்றால், அரசியல் கட்சிகள் பல தேர்தல் வாக்குறுதிகளை கொடுக்குறாங்க. அதையெல்லாம் நிதியைச் சார்ந்து தான் இருக்கு. இந்த மாதிரி இழப்புகளை சந்திக்கின்ற விஷயங்கள் இருந்தால் மக்களுக்கான வளர்ச்சித் திட்டம் என்பதோ அல்லது கடன் வாங்குவது அதிகமாவதோஇந்த விஷயங்களை எல்லாம் எப்படி பேஸ் செய்வது?

**மூத்த பத்திரிகையாளர் மணி:** கஷ்டம் தான் முதலமைச்சர் சரியான பாயிண்டைத் தான் பிடித்து இருக்கிறார்..பத்தாயிரம் கோடி ரூபாய் இழப்பு வருதுன்னு. ஜி.எஸ்.டி.யில் பெரிய அளவில் எடுத்துக் கொண்டு போய் விட்டார்கள். மாநிலங்களுக்கான வருவாய் என்பது மதுபான விற்பனையும், ரிஜிஸ்டேசன்? மட்டும் தான் வேறு எதுவும் கிடையாது. இந்த நிலை மாற வில்லை என்றால் கடினமானதுதான். அதே நேரத்தில் எல்லா கட்சிகளும் தி.மு.க. உள்ளிட்ட கட்சிகள் வாக்குறுதிகளை வாரி வழங்குகின்றன. பணம் எங்கே இருந்து வரும் என்று தெரியவில்லை. ஆகவே இவை மிகவும் சிக்கலான பிரச்சினை. அதனையும் நாம் கவனத்தில் கொள்ளத்தான் வேண்டும்.

### மகாத்மா காந்தி வேலை வாய்ப்புத் திட்டத்தில் தேக்க நிலை!

**நெறியாளர்:** கிராமத்தில் இருக்கின்ற ஏழை மக்கள் பயன் படக் கூடிய வகையில் பெண்களுக்கு கொடுக்கக் கூடிய வகையில் நூறு நாள் வேலைத்திட்டம் இருந்தது. அந்த நூறு நாள் வேலைத்திட்டத்திற்கான பண்ட் கிட்டத்தட்ட 2600 கோடி ரூபாய் ஒதுக்காமல் இருக்கிறார்கள். இப்போது அதனால் 14 மாதம் சம்பளம் தரவில்லை என்ற பிரச்சினை இருக்கிறது. மக்களுக்கு கேட்டால் நிதியை இழுத்தடிக்கிறாங்க. அல்லது குறைத்து கொடுக்குறாங்க. இல்லாட்டி இல்லவே இல்லை என்ற கூறுகிறார்கள். திட்டத்திற்கு பிரதமர் மோடி படம் வைக்க வேண்டும் என்று சொல்கிறார்கள். இந்த மாதிரி நெருக்கடியை கொடுப்பது என்பது கிராமத்தில் இருக்கின்ற பெண்கள் மத்தியில் அவை எந்தமாதிரியான பிரச்சினையை ஏற்படுத்தும்?

**மூத்த பத்திரிகையாளர் மணி:** ஆமாம் மகாத்மா காந்தி ஊரக வேலைவாய்ப்பு திட்டத்தில் பெரிய அளவில்தேக்க நிலை ஏற்பட்டு இருக்கிறது. மத்திய அரசு பண்ட்ஸ் கொடுக்க மாட்டேன் என்கிறது. முதலில் இதனை மோடி அரசு விரும்பவில்லை. இதனை ஒழித்துக் கட்டத்தான் அவர்கள் விரும்புகிறார்கள்.

ஆனால் நேரடியாக ஒழித்துக் கட்டினால் மக்களிடம் பெரிய அளவில் எதிர்ப்பு கிளம்பும் மிகப் பெரிய அளவில் கொந்தளிப்பு ஏற்படும் என்பதால் மெல்ல மெல்ல அதனை சாகடித்துக் கொண்டிருக்கிறார்கள்.

அதுதான் இந்தப் பிரச்சினையுடைய மூலக்கருத்து. 14 மாத சம்பளம் கொடுக்காபமல் இருக்கிறார்கள் என்றால் இதனைவிட இரக்கமற்ற கேடு கெட்ட அரசு இந்தியாவில், உலக அளவில் இருக்குமா? கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு வாரி வாரி வழங்குகிறார்கள். இது என்ன தமிழ்நாட்டிற்கு இரண்டாயிரம் சொச்ச கோடி, வாராக் கடன் 25இலட்சம் கோடி தள்ளுபடி செய்திருக்கிறது.

### இந்தியாவை விற்றுக் கொண்டிருக்கும் மோடிக்கு ஏழை மக்களைப் பற்றிப் பேச நேரம் இல்லை!

அதுதான் பெரும் முதலாளிகளுக்காக இந்தியாவை விற்றுக் கொண்டிருக்கிற நரேந்திர மோடி அரசுக்கு, ஏழை மக்களைப் பற்றி பேசுவதற்கு எந்தவிதமான நேரம் இல்லை. விருப்பமும் இல்லை. மகாத்மா காந்தி ஊரக வேலைவாய்ப்புத்திட்டத்தை ஒழித்துக் கட்ட விரும்புகிறார்கள். அதனை மெல்லமாக சாக அடிக்க விரும்புகிறார்கள். அதனால் தான் 14 மாதமாக சம்பளம் பாக்கி. இது ரொம்ப கொடுமையான ஒரு விஷயம். இதற்காகவாவது ஆட்சி மாற்றம் ஏற்பட வேண்டும். ஏற்படும் என்று நாம் நம்புவோமாக.

இவ்வாறு மூத்த பத்திரிகையாளர் மணி பேட்டியளித்தார்.



வடசென்னை நாடாளுமன்ற தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூபாய் 25 லட்சம் மதிப்பில் ராயபுரம் பகுதியில் வார்டு48 மண்டலம் 4 லாலா குண்டா ஹவுசிங் போர்டு பல்நோக்கு கட்டிடம் (நியாய விலைக் கடை) கழக அயலக அணி தலைவரும் வட சென்னை நாடாளுமன்ற உறுப்பினருமான டாக்டர். கலாநிதி வீராசாமி அடிக்கல் நாட்டினார். இந்நிகழ்வில் சிறப்பு அழைப்பாளர்களாக சென்னை வடக்கு மாவட்ட கழக செயலாளர் தா.இளைய அருணா எம்.சி., ராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் திரு. ஐட்ரீம்ஸ்.ஆர். மூர்த்தி, ராயபுரம் மேற்கு பகுதி செயலாளர் வா. பே. சுரேஷ்,மாமன்ற உறுப்பினர் திருமதி. வி. விஜயலஷ்மி விஜயகுமார் .எம்.சி, மாமன்ற உறுப்பினர் நேதாஜி யு கணேசன், 48 அ வட்ட கழக செயலாளர் எம்.ரவி,மாவட்ட கழக நிர்வாகிகள், பகுதி கழக நிர்வாகிகள், கழக நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

## எழும்பூர் தொகுதி 99வது வார்டில் ஆய்வு!

### பரிதிஇளம்சுருதி எம்.சி. மக்கள் குறைகளைக் கேட்டு அறிந்தார்!

*சென்னை,நவ.2-*

*நேற்று (01.11.2023) எழும்பூர் சட்டமன்றத் தொகுதி, 99 வது வார்டில் பிரிக்ளின் சாலை, சண்முகராயன் தெரு, பொன்னன் தெரு, செல்லப்பா தெரு, சரவண பெருமாள் தெரு, இராஜா அண்ணாமலை சாலை சென்னை கிழக்கு மாவட்ட கழக செயலாளர், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு வழிக்காட்டுதலின்படி எழும்பூர் தொகுதி, 99 வது வார்டு மாமன்ற உறுப்பினர் பரிதி இளம்சுருதி மக்களின் குறைகளைக் கேட்டறிந்து மக்களின் அடிப்படை பிரச்சனைகளை தீர்வு செய்து மாநகராட்சி மன்ற உறுப்பினர் நிதியில் நடைபெறும் பணிகளை ஆய்வு செய்து தூர்வாரும் பணியினையும், கழிவு நீர் பிரச்சனைகளையும் ஆய்வு செய்து குப்பைகள் அகற்றும் பணியினை ஆய்வு செய்தார்.*

*இந்நிகழ்வில் 99 வது வார்டு மாநகராட்சி உதவி பொறியாளர், சிவக்குமார், துப்புறவு ஆய்வாளர், கிருஷ்ணமூர்த்தி, சுகாதார பணியாளர், சுமன் மற்றும் துப்புறவு மேஸ்திரிகள், கிருபாநாதன், மணிமாறன், ஏசுவதனம், சாலை பணியாளர் சிவா ஆகியோர் உடனிருந்தனர்.*



சென்னை தென்மேற்கு மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு மாவட்ட அமைப்பாளர் சண்முகநாதன் தலைமையில் தேனாம்பேட்டை அன்பகத்தில் பள்ளி மாணவ மாணவிகளுக்கு வசனம் கவிதை ஒப்பித்தல் போட்டி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் மாவட்ட கழக செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ., தியாகராயர் நகர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் ஜெ.கருணாநிதி ஆகியோர் கலந்து கொண்டு வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகளை வழங்கினார்கள். இந்நிகழ்வில் கலை இலக்கிய பகுத்தறிவு பேரவையின் மாநில துணை அமைப்பாளர் இறையன்பன் குத்தூஸ், மாநில மாணவரணி துணை அமைப்பாளர் எஸ்.மோகன், பகுதி கழக செயலாளர்கள் கே.ஏழுமலை எம்.சி., நந்தனம் மதி, எஸ். முரளி எம்.சி., தலைமை செயற்குழு உறுப்பினர் கோ.சு.மணி மற்றும் வட்டக் கழக செயலாளர்கள் கழக நிர்வாகிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவையொட்டி

# “தொலைநோக்குச் சிந்தனையாளர் கலைஞர்” குறும் பட - சுருள்படப் போட்டி!

## தமிழ் வளர்ச்சி - செய்தித் துறை அறிவிப்பு

சென்னை, நவ. 2 -

**முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை கொண்டாடும் வகையில் “தொலைநோக்குச் சிந்தனையாளர் கலைஞர்” எனும் குழுவின் சார்பில் குறும்பட போட்டி (Short film Competition) மற்றும் சுருள்படப் போட்டி (Reels Competition) குறித்து தமிழ்நாடு அரசின் செய்தித் துறை அறிவிப்பு வருமாறு:-**

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தமிழ்நாட்டிற்கு ஆற்றிய அரும்பணிகள் மற்றும் நலதிட்டங்கள் வருங்கால இளைய தலைமுறையினர் அறிந்துகொள்ளும் வகையில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை சிறப்பாக நடத்திட, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறையால் 12 குழுக்கள் அமைக்கப்பட்டு ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

அதில், தொலைநோக்குச் சிந்தனையாளர் கலைஞர் எனும் குழு, நூற்றாண்டு விழா நாயகன் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தமிழ்நாட்டிற்கு ஆற்றிய அரும்பணிகளில் அவரது பரிமாணங்களை போற்றும் வகையில் பல்வேறு முன்னெடுப்புகளை செய்து வருகிறது.

அந்த வகையில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை சிறப்பிக்கும் வகையில் தொலைநோக்குச் சிந்தனையாளர்கலைஞர் எனும் குழுவின் சார்பில் குறும்படபோட்டி (Short film Competition) மற்றும் சுருள்படபோட்டி (Reels Competition) நடத்தப்பட வுள்ளது.

குறும்படபோட்டியில் கலந்துகொள்ள விரும்புமுள்ளவர்கள் தொலைநோக்குச் சிந்தனையாளர்கலைஞர் (உ.தாரணமாக: சமூக நீதி, கல்வியில் புரட்சி, சுகாதார துறையில் புரட்சி, தொழிற்துறை மேம்பாடு, மாநில அரசின் உரிமை, பெண்கள்முன்னேற்றம், கிராமப்புற/ நகர்ப்புற வளர்ச்சி) என்ற தலைப்பில் புதிய குறும்படங்களை (அதிகபட்சம் 10 நிமிடங்கள்) உருவாக்கி அதனை இணைப்பில் உள்ள விண்ணப்பங்களுடன் 20.12.2023 தேதிக்குள் (shortfilmkalaignar100@gmail.com) என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

சுருள்படபோட்டியில் கலந்துகொள்ள விரும்புமுள்ளவர்கள் தொலைநோக்குச் சிந்தனையாளர் கலைஞர் எனும் தலைப்பில் புதிய சுருள்படங்களை 30 வினாடிகள் முதல் 1 நிமிடம் வரை இருக்கும் வகையில் உருவாக்கி இணைப்பில் உள்ள விண்ணப்பங்களுடன் 20.12.2023 தேதிக்குள் (reelskalaignar100@gmail.com) என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

குறும்பட போட்டி (Short film Competition) மற்றும் சுருள்பட போட்டி (Reels Competition )களுக்கு வழிகாட்டி நெறிமுறைகள் மற்றும் விண்ணப்பங்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

குறும்படபோட்டியில்(Short film Competition) வெற்றி பெறுபவர்களுக்கு முதல் பரிசுத் தொகை ரூ.2 இலட்சம், இரண்டாம் பரிசு ரூ.1.50 இலட்சம், மூன்றாம் பரிசு ரூ.1 இலட்சம் மற்றும் பாராட்டுச் சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளது.

சுருள்படபோட்டியில் (Reels Competition) வெற்றி பெறும் முதல் 10 நபர்களுக்கு பரிசு தொகையாக தலா ரூ.10,000/ என 10 நபர்களுக்கும் மற்றும் பாராட்டுச் சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளது.

**தொலைநோக்குச் சிந்தனையாளர் - கலைஞர்**

**சுருள்பட போட்டி - 2023 (Reels Competition, 2023)**

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா கொண்டாட்டங்கள் தொடர்பாக அமைக்கப்பட்டுள்ள தொலைநோக்குச் சிந்தனையாளர் கலைஞர் எனும் குழு சார்பாக நடத்தப்படும் சுருள்பட போட்டியின் (Reels Competition) விதிமுறைகள் பின்வருமாறு :

**(i) போட்டிக்கு விண்ணப்பித்தல் :** எந்தவொரு இந்திய குடிமகனும் இப்போட்டிக்கு விண்ணப் பிக்கலாம் ஒவ்வொரு விண்ணப்பத்திற்கும் ஒரு படம் மட்டுமே சமர்ப்பிக்க வேண்டும். இப்போட்டிக்கு அனுப்பப்படும் சுருள்படங்கள் போட்டிக்கு, விண்ணப்பிப்பவரால் உருவாக்கப் பட்டிருக்க வேண்டும். எந்தவொரு சமூக வலைதளங்கள் மற்றும் இணையதளத்தில் இடம் பெற்றிருக்க கூடாது. போட்டியாளர்கள் இணைப்பில் உள்ள விண்ணப் பப் படிவத்தை முழுமையாக பூர்த்தி செய்து அனுப்ப வேண்டும்.

**(ii) நுழைவு கட்டணம் :** நுழைவு கட்டணம் இல்லை

**(iii) படத்தின் மைய கருத்து :** தொலைநோக்குச் சிந்தனையாளர் கலைஞர் உதாரணமாக, சமூக நீதியில் கலைஞரின் சாதனை, கல்வியில் புரட்சி, சுகாதார துறையில் புரட்சி, தொழிற்துறை மேம்பாடு, மாநில அரசின் உரிமை, பெண்கள் முன்னேற்றம், கிராமப்புற/ நகர்ப்புற வளர்ச்சி என்பனவற்றில் ஏதேனும் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட பொருண்மைகளை மைய கருத்தாக அத்துறையில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களது தொலை நோக்குச் சிந்தனையில் உருவான திட்டங்கள்/ செயல்பாடுகள், அதனால் சமூகத்திற்கு / தமிழ்நாட்டிற்கு ஏற்பட்ட பயன்கள் குறித்து விரிவாக்க பட்டிருக்க வேண்டும்.

**(iv) படத்தின் மொழி :** தமிழ்

**(v) சுருள்படத்தின் கால அளவு :** 30 வினாடிகள் முதல் 1 நிமிடம் வரை இருக்க வேண்டும்.

**(vi) திரைப்பட வடிவம்:** சுருள்படத்தினை ( MP4 format, Full HD(1080p) or 1920X1820p) கேமரா அல்லது வேறு சாதனங்கள் மூலமாகவும் எடுக்கலாம். சுருள்படத்தின் அளவு 500 MBக்கு மேல் இருக்கக்கூடாது. சுருள் படத்தின் தயாரிப்பாளர், எழுத்தாளர் மற்றும் இயக்குநரின் பெயர் கள் இடம் பெற்றிருக்க வேண்டும்.

**(vii) நடுவர் மன்றம் :** நடுவர் குழு வெற்றியாளரை தேர்ந்தெடுக்கும்.

**(viii) பரிசு வழங்குதல்:** விண்ணப்பிக்கும் நபர்களின் சுருள்படங்களிருந்து சிறப்பான சுருள்படங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, விண்ணப்பதாரரின் பெயரில் மட்டுமே காசோலை வழங்கப்படும்.


**(ix) பரிசு தொகை :** 10 நபர்களுக்கு தலா ரூ.10,000/ மும் பாராட்டு சான்றிதழும் வழங்கப்படும்.

★ **அனுப்பும் முறை :** முறையாக பூர்த்தி செய்த விண்ணப்பத்தினை சுருள்படத்துடன் shortfilmkalaignar100@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு மட்டுமே அனுப்ப வேண்டும்.

★ **கடைசி தேதி :** 20.12.2023 (மாலை 6.00 மணிக்கு மேல் பெறப்படும் பதிவுகள் ஏற்றுகொள்ளப்படாது)

**(x) உறுதி மொழி படிவம் :** விண்ணப்பதாரர்கள் விண்ணப்பத்துடன் பின்வரும் உறுதிமொழியினை அளிக்க வேண்டும் :

“கலைஞர் சுருள்பட போட்டியின் அனைத்து விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை நான் படித்து அதற்கு உடன்பட்டு, என்னால் போட்டிக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ள சுருள்படங்களை இணையதளம் / சமூக ஊடகங்களில் பதிவேற்றம் செய்யவும், பயன்படுத்தவும் உரிமையை வழங்குகிறேன். என்னால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள சுருள்படத்தின் பதிப்புரிமை குறித்து ஏதேனும் பிரச்சினை ஏற்பட்டால் அப்பிரச்சனையை கையாளும் பொறுப்பு என் மீது மட்டுமே இருக்கும். அரசுக்கு அல்ல.”



**(xi) திரையிடல் உரிமை :** வெற்றி பெறும் சுருள்படங்களை சமூக ஊடகங்களில் பதிவேற்ற அரசுக்கு உரிமை உண்டு.

★ **தவறான உள்ளீடுகள்:** முழுமையடையப்பாத விண்ணப்பங்கள் மற்றும் உள்ளீடுகள், இப்போட்டிக்கான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை பூர்த்தி செய்யப்படாதவை தவறானதாக கருதப்பட்டு இப்போட்டிக்கு எடுத்துக் கொள்ளப்படாததாக கருதப்படும்.

**(xv) முடிவுகள் :** போட்டி குறித்த முடிவுகள் இணையத்திலும் பத்திரிகை செய்தி வாயிலாகவும் வெளியிடப்படும்.

**சுருள் போட்டிக்கான விண்ணப்ப படிவம்**

விண்ணப்பதாரரின் பெயர், தந்தை / தாயின் பெயர் / கணவர் பெயர்,

தேசியம் (Nationality), அடையாளச் சான்று, (ஆதாரமாக ஆதார் அட்டை, வாக்காளர் அடையாள அட்டை, பான்கார்டு, ஓட்டுநர் உரிமம் அல்லது அரசு அதிகாரியால் வழங்கப்பட்ட வேறு ஏதேனும் அடையாளச் சான்று போன்றவை)

(அடையாள அட்டை அடையாள அட்டை எண், பெயர் குறிப்பிடவும்) மற்றும் நகலை இணைக்கவும்

முழு முகவரி, (மற்றும் பின்கோடு), தொலைபேசி எண், (Telephone with STD)

அலைபேசி எண் (செல் எண்.), மின்னஞ்சல் முகவரி (இ.மெயில் முகவரி),

தொழில் (மாணாக்கர் எனில் அதனை குறிப்பிடவும்)

**சுருள் படத்தின் தலைப்பு**

(தொலைநோக்குச் சிந்தனையாளர் கலைஞர் (உதாரணமாக சமூக நீதியில் கலைஞரின் பங்களிப்பு, கல்வியில் புரட்சி, சுகாதார துறையில் புரட்சி, தொழிற்துறை மேம்பாடு, மாநில அரசின் உரிமை, பெண்கள் முன்னேற்றம், கிராமப்புற / நகர்ப்புற வளர்ச்சி)

சுருள்படத்தின் கால அளவு (30 வினாடிகள் முதல் 1 நிமிடம் வரை இருக்க வேண்டும்)

சுருள் படத்தின் மொழி (தமிழ்),

சுருள்படத்தில் பங்கேற்றோர், தயாரிப்பாளர், எழுத்தாளர் மற்றும் இயக்குநரின் பெயர் விபரங்கள் (Title and credits) சுருள்படத்தில் தரப்பட்டுள்ளதா? (ஆம்/ இல்லை)

தேர்ந்தெடுக்கப்பட்ட சுருள் படங்கள் குறித்த A3 size color poster குழுவிற்கு அனுப்ப சம்மதமா?. (ஆம் / இல்லை)

இப்படம் இதற்கு முன்பு வேறு ஏதேனும் சுருள்பட போட்டிக்கு அனுப்பப்பட்டதா? (ஆம்/ இல்லை)

இப்படம் இணையத்தில் பொதுமக்கள் பார் வைக்காக எப்போதாவது பதிவிடப்பட்டுள்ளதா? ஆம் / இல்லை

**உறுதி மொழி படிவம்**

★ திரு/திருமதி/செல்வி.............. ........ த / பெ / க / பெ ........... .. .. ............... ......இல் வசிக்கும் நான் தொலை நோக்குச் சிந்தனையாளர் கலைஞர் எனும் குழுவால் சார்பாக நடத்தப்படும் சுருள்படப் போட்டியின் 2023 விதிமுறைகளை படித்து தெரிந்து கொண்டேன் அந்த விதிமுறைகளை பின்பற்றி இப்போட்டியில் பங்கேற்கிறேன் போட்டியின் அனைத்து விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை நான் படித்து அதற்கு டன்பட்டு, எனது சுருள்படங்களை இணையதளம் / சமூக ஊடகங்களில் பதிவேற்றம் செய்யவும், பயன்படுத்தவும் உரிமையை அரசுக்கு வழங்குகிறேன். பதிப்புரிமை அல்லது வேறு ஏதேனும் பிரச்சனை ஏற்பட்டால் அப்பிரச்சினையை கையாளும் பொறுப்பு என் மீது மட்டுமே இருக்கும்.

**போட்டியாளரின் கையொப்பம்**

**போட்டியாளரின் பெயர்**

**தொலைநோக்குச் சிந்தனையாளர் கலைஞர் குறும்படப் போட்டி - 2023 (Short Film Competition, 2023)**

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா கொண்டாட்டங்கள் தொடர்பாக அமைக்கப்பட்டுள்ள தொலைநோக்குச் சிந்தனையாளர் கலைஞர் எனும் குழு சார்பாக நடத்தப்படும் குறும்படபோட்டியின் (short film Competition) விதிமுறைகள் பின்வருமாறு :

**(xii) போட்டிக்கு விண்ணப்பித்தல் :** எந்தவொரு இந்திய குடிமகனும் இப்போட்டிக்கு விண்ணப்பிக்கலாம் ஒவ்வொரு விண்ணப்பத்திற்கும் ஒரு படம் மட்டுமே சமர்ப்பிக்க வேண்டும். இப்போட்டிக்கு அனுப்பப்படும் குறும்படங்கள் போட்டிக்கு, விண்ண ப்பிப்பவரால் உருவாக்கப் பட்டிருக்க வேண்டும். எந்தவொரு சமூக வலைதளங்கள் மற்றும் இணையதளத்தில் இடம் பெற்றிருக்க கூடாது. போட்டியாளர்கள் இணைப்பில் உள்ள விண்ணப்பப் படிவத்தை முழுமையாக பூர்த்தி செய்து அனுப்ப வேண்டும்.

**(xiii) நுழைவு கட்டணம் :** நுழைவு கட்டணம் இல்லை

**(xiv) படத்தின் மைய கருத்து :** தொலைநோக்குச் சிந்தனையாளர் கலைஞர் உதாரணமாக, சமூக நீதியில் கலைஞரின் சாதனை, கல்வியில் புரட்சி, சுகாதார துறையில் புரட்சி, தொழிற்துறை மேம்பாடு, மாநில அரசின் உரிமை, பெண்கள் முன்னேற்றம், கிராமப்புற/ நகர்ப்புற வளர்ச்சி என்பனவற்றில் ஏதேனும் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட பொருண்மைகளை மைய கருத்தாக அத்துறையில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களது தொலை நோக்குச் சிந்தனையில் உருவான திட்டங்கள்/ செயல்பாடுகள், அதனால் சமூகத்திற்கு / தமிழ்நாட்டிற்கு ஏற்பட்ட பயன்கள் குறித்து விரிவாக்கப்பட்டிருக்க வேண்டும்.

**(xv) படத்தின் மொழி :** தமிழ்

**(v) குறும்படத்தின் கால அளவு :** அதிகபட்சம் 10 நிமிடங்கள்

**(vi)திரைப்பட வடிவம்:** குறும்படத்தினை (MP4 format, Full HD(1080p) or 1920X1820p) கேமரா அல்லது வேறு சாதனங்கள் மூலமாகவும் எடுக்கலாம். குறும்படத்தின் அளவு 2 GBக்கு மேல் இருக்கக்கூடாது. குறும்படத்தின் தயாரிப்பாளர், எழுத்தாளர் மற்றும் இயக்குநரின் பெயர்கள் இடம் பெற்றிருக்க வேண்டும்.

**(vii) நடுவர் மன்றம் :** நடுவர் குழு வெற்றியாளரை தேர்ந்தெடுக்கும்.

**(viii) பரிசு வழங்குதல் :** விண்ணப்பிக்கும் நபர்களின் குறும்படங்களிருந்து சிறப்பான குறும்படங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, விண்ணப்பதாரரின் பெயரில் மட்டுமே காசோலை வழங்கப்படும்.

**(ix) பரிசுத் தொகை :** முதல் பரிசு ரூ. 2 இலட்சம், இரண்டாம் பரிசு ரூ.1.50 இலட்சம், மூன்றாம் பரிசு ரூ. 1 இலட்சம்.

★ **(x) அனுப்பும் முறை :** முறையாக பூர்த்தி செய்த விண்ணப்பத்தினை குறும்படத்துடன் shortfilmkalaignar100@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு “Kalaignar short Film Award 2023, <name of the applicant>” என்ற Subjectல் அனுப்ப வேண்டும். பெரிய அளவிலான குறும்படத்தினை 'Google Drive' -ல் சேமித்து link - ஐ அனுப்பலாம். Google Drive-லும் மேற்கூறிய பெயர் கொண்ட Folder -ஐ உருவாக்கி அதன் linkஐ அனுப்ப வேண்டும்.

★ **(xi) கடைசி தேதி :** 20.12.2023 (மாலை 6.00 மணிக்கு மேல் பெறப்படும் பதிவுகள் ஏற்றுக்கொள்ளப்படாது)

★ **(xii) உறுதி மொழி படிவம் :** விண்ணப்பதாரர்கள் விண்ணப்பத்துடன் பின்வரும் உறுதிமொழியினை அளிக்க வேண்டும் :

★ “கலைஞர் குறும்பட போட்டியின் அனைத்து விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை நான் படித்து அதற்கு உடன்பட்டு, என்னால் போட்டிக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ள குறும்படங்களை இணையதளம் / சமூக ஊடகங்களில் பதிவேற்றம் செய்யவும், பயன்படுத்தவும் உரிமையை வழங்குகிறேன். என்னால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள குறும்படத்தின் பதிப்புரிமை குறித்து ஏதேனும் பிரச்சினை ஏற்பட்டால் அப்பிரச்சினையை கையாளும் பொறுப்பு என் மீது மட்டுமே இருக்கும். அரசுக்கு அல்ல.”

★ **(xiii) திரையிடல் உரிமை :** வெற்றி பெரும் குறும்படங்களை சமூக ஊடகங்களில் பதிவேற்ற அரசுக்கு உரிமை உண்டு.

**(xiv) தவறான உள்ளீடுகள்:** முழுமை யடையப்படாத விண்ணப்பங்கள் மற்றும் உள்ளீடுகள், இப்போட்டிக்கான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை பூர்த்தி செய்யப்படாதவை தவறானதாக கருதப்பட்டு இப்போட்டிக்கு எடுத்துக் கொள்ளப்படாததாக கருதப்படும்.

★ **(xv) முடிவுகள் :** போட்டியின் முடிவுகள் குறித்த இணையத்திலும் பத்திரிகை செய்தி வாயிலாகவும் வெளியிடப்படும்.

**குறும்பட போட்டிக்கான விண்ணப்ப படிவம்**

விண்ணப்பதாரரின் பெயர் , தந்தை / தாயின் பெயர் / கணவர் பெயர், தேசியம் (Nationality)

**அடையாளச்சான்று :** (ஆதாரமாக ஆதார் அட்டை, வாக்காளர் அடையாள அட்டை, பான் கார்டு, ஓட்டுநர் உரிமம் அல்லது அரசால் வழங்கப்பட்ட வேறு ஏதேனும் அடையாளச் சான்று போன்றவை)

(அடையாள அட்டை அடையாள அட்டை எண், பெயர் குறிப்பிடவும்) நகலை இணைக்கவும்

முழு முகவரி (மற்றும் பின்கோடு), தொலைபேசி எண், (Telephone with STD) . அலைபேசி எண் (Mobile No.) . மின்னஞ்சல் முகவரி (email) . தொழில் (மாணாக்கர் எனில் அதனை குறிப்பிடவும்) . குறும்படத்தின் தலைப்பு

(தொலைநோக்குச் சிந்தனையாளர் கலைஞர் (உதாரணமாக சமூக நீதியில் கலைஞரின் பங்களிப்பு, கல்வியில் புரட்சி, சுகாதார துறையில் புரட்சி, தொழிற்துறை மேம்பாடு, மாநில அரசின் உரிமை, பெண்கள் முன்னேற்றம், கிராமப்புற/ நகர்ப்புற வளர்ச்சி) குறும்படத்தில் கால அளவு (அதிகபட்சம் 10 நிமிடம்) குறும்படத்தின் மொழி (தமிழ்)

குறும்படத்தில் பங்கேற்றோர், தயாரிப்பாளர், எழுத்தாளர் மற்றும் இயக்குநரின் பெயர் விபரங்கள் (Title and credits) குறும்படத்தில் தரப்பட்டுள்ளதா? ( ஆம் / இல்லை )

தேர்ந்தெடுக்கப்பட்ட குறும்படங்கள் குறித்த A3 size color poster குழுவிற்கு அனுப்ப சம்மதமா? (ஆம் / இல்லை )

இப்படம் இதற்குமுன்பு வேறு ஏதேனும் குறும்பட போட்டிக்கு அனுப்பப்பட்டதா? (ஆம்/ இல்லை)

இப்படம் இணையத்தில் பொதுமக்கள் பார்வைக்காக எப்போதாவது பதிவிடப்பட்டுள்ளதா? (ஆம் / இல்லை .

இவ்வாறு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை சார்பில் அறிவிக்கப்பட்டுள்ளது.



தூத்துக்குடி மாவட்டம், தருவைகுளம் மீனவ கிராமத்திலிருந்து ஆழ்கடலில் மீன் பிடிப்பதற்காக சென்ற மீனவர்கள் மாலத்தீவு கடலோர காவல்படையினரால் கைது செய்யப்பட்டனர். இதனைத் தொடர்ந்து, தூத்துக்குடி பாராளுமன்ற உறுப்பினரும், தி.மு.க. துணைப் பொதுச்செயலாளரும், தி.மு.க. நாடாளுமன்றக்குழு துணைத் தலைவருமான கனிமொழி கருணாநிதி அவர்கள் ஒன்றிய அமைச்சர் ஜெய்சங்கர் அவர்களுக்கு கடிதம் மூலமாக, கைது செய்யப்பட்ட மீனவர்களை விடுதலை செய்ய உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரிக்கை வைத்தார். இதனைத்தொடர்ந்து, 28.10.2023 அன்று மாலத்தீவில் கைது செய்யப்பட்ட மீனவர்களின் குடும்பத்தினரை நேரில் சந்தித்து ஆறுதல் தெரிவித்து, அவர்களை விடுதலை செய்ய உரிய நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்தார். உடன் சட்டமன்ற உறுப்பினர் எம்.சி.சண்முகையா, மாநகராட்சி மேயர் ஜெகன் பெரியசாமி, ஒன்றிய செயலாளர் இளையராஜா மற்றும் பலர் உள்ளனர்.

## எண்ணற்ற தியாகிகளின் தன்னலமற்ற தியாகம்:

# தமிழ் தியாகிகளின் நினைவைப் போற்றுவோம்!

## நவம்பர் 1 – எல்லைப் போராட்டத் தியாகிகள் நாளையொட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலை தளப்பதிவில் உறுதி!

சென்னை, நவ. 2 -

எண்ணற்ற தியாகிகளின் தன்னலமற்ற தியாகத்தால் நமக்கு பல பகுதிகள் பெற முடிந்தது. இத் தமிழ் தியாகிகளின் நினைவைப் போற்றுவோம் என்று நவம்பர் 1 எல்லைப் போராட்ட தியாகிகள் நாளையொட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட் டுள்ளார்.

இது குறித்து முதல்வர் அவர்களின் சமூக வலை தளப் பதிவு வருமாறு:

**நவம்பர் 1 : எல்லைப் போராட தியாகிகள் நாள்!**

**திருத்தணியும் தென்குமரியும் இன்று தமிழ்நாட்டின் பகுதிகளாக இரு திசைகளில் திகழ்கிறதென்றால் அது எளிதில் நடந்துவிடவில்லை.**

**எண்ணற்ற தியாகிகளின் தன்னலமற்ற, தமிழ்நலம் மிக்க போராட்டத்தால்தான் நமக்குரிய பல பகுதிகளை மொழிவாரி மாநிலங்கள் பிரிக்கப்பட்டபோது நாம் பெறமுடிந்தது.**

**அத்தகைய மேன்மைமிகு தமிழ் தியாகிகளின் நினைவை மறவாது போற்றுவது நம் கடமை.**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப் பதிவில் குறிப் பிட்டுள்ளார்.

# கழகத்தின் வளர்ச்சி கண்டு வியக்கிறேன் ; கொள்கை மறவர்களை மறவோம்!

# பா.ஜ.க. - அ.தி.மு.க.வின் போலி அரசியலுக்கு முற்றுப்புள்ளி வைப்போம்!

**கழக இளைஞர் அணிச் செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மாவட்ட வாரியாக சுற்றுப்பயணம் செய்து கழகத்தின் மூத்த முன்னோடிகளுக்கு பொற்கிழி வழங்கியும், பல நலத்திட்ட உதவிகளை அளித்தும் சிறப்பித்து வருகிறார். அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தமது சுற்றுப் பயணத்தில் கண்ட எழுச்சியின் மாட்சி குறித்து பெருமிதத்துடன் குறிப்பிட்டுள்ளது வருமாறு:-**

சிறிய விதை போல மனதில் தோன்றிய ஓர் எண்ணம், இந்தக் கழகத்தின் பலத்தினால் படிப்படியாக வளர்ந்து ஆலமரமாகக் கிளைவிடுவதைக் கண்முன் கண்டு வியக்கிறேன். சமீபத்தில், நான் சென்றுவந்த தேனி, விருதுநகர், நெல்லை மற்றும் கன்னியாகுமரி மாவட்ட சுற்றுப்பயணமே அதற்கான சான்று.

கடந்த ஆண்டு, மே மாதம் கழக நிகழ்ச்சிகளுக்காக என்னிடம் தேதி கேட்டு வந்த கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டச் செயலாளர் அண்ணன் தளி பிரகாஷ் அவர்களிடம், ‘கழக முன்னோடிகளின் உழைப்பைப் போற்றும் வகையில், அவர்களுக்குப் பொற்கிழி வழங்கலாம்’ என்ற என் எண்ணத்தைப் பகிர்ந்துகொண்டேன். அதன்படி, அவர் பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு மத்தியில் 500 கழக முன்னோடிகளுக்குத் தலா ரூ.5,000 என பொற்கிழிகளை வழங்கினார்.

அந்த மேடையில் முன்னோடிகள் பலர் அண்ணா, கலைஞர் கையெழுத்திட்ட உறுப்பினர் அட்டைகளை, அவர்கள் எழுதிய கடிதங்களை எடுத்து வந்து காண்பித்தனர். பெரியாரை, அண்ணாவை சந்தித்த நிகழ்வுகளைப் பகிர்ந்துகொண்டனர். தங்களின் அனுபவங்களை, உழைப்பை என்னிடம் சொல்லிவிடவேண்டும் என்ற தவிப்பு, அனைவரிடமும் இருந்ததை உணர்ந்தேன்.

முன்னோடிகளின் பங்களிப்பை, உழைப்பை, அனுபவத்தை கவுரவிக்கும் வகையிலும் அவற்றை இளைஞர் அணியினருக்குக் கடத்தும் வகையிலும், இந்தப் பொற்கிழி வழங்கும் நிகழ்ச்சியை மாவட்டந்தோறும் நடத்த மாவட்ட செயலாளர்களைக் கேட்டுக்கொள்ள வேண்டும் என்று அன்றே முடிவுசெய்தோம். அதைத் தொடர்ந்து சேப்பாக்கம்-திருவல்லிக்கேணி தொகுதி கழக முன்னோடிகள் 200 பேருக்கு தலா 10 ஆயிரம் ரூபாயை பொற்கிழியாக என் கைகளால் வழங்கவைத்து அவர்களை கவுரவித்தார் மாவட்டக் கழகச் செயலாளர் சிற்றரசு. ‘பொற்கிழியாக 10 ஆயிரம் வழங்குவதுதான் சரியாக இருக்கும்’ என அன்று முடிவானது.

அந்த வரிசையில் சமீபத்தில் நடைபெற்ற தேனி, விருதுநகர், நெல்லை, கன்னியாகுமரி மாவட்டங்களுக்கான பொற்கிழி வழங்கும் நிகழ்ச்சிகள் ஒவ்வொன்றும் ‘கழக முன்னோடிகள் மாநாடு’ என்று சொல்லும் வகையில் மிகச்சிறப்பாக நடைபெற்று முடிந்தன. இப்படி இதுவரை மொத்தமுள்ள 72 மாவட்டக் கழகங்களில் 46 கழக மாவட்டங்களின் சார்பில் 44 கோடியே 73 லட்சத்து 60 ஆயிரம் ரூபாய் கழக முன்னோடிகளுக்கு என் கைகளால் பொற்கிழியாக வழங்கப்பட்டுள்ளது.

கழகப் பணி அனுபவங்களின் மொத்த வடிவமாக அமர்ந்திருக்கும் முன்னோடிகள் ஒவ்வொருவரையும் பெரியார் - அண்ணா - கலைஞர் - பேராசிரியர் ஆகியோரின் மறு உருவமாகவே பார்க்கிறேன். இந்தப் பொற்கிழி வழங்கும் நிகழ்ச்சிகளை ஒரு பேரன் தாத்தா பாட்டிகளுக்குச் செய்யும் கடமையாகவே கருதுகிறேன்.

**மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சமீபத்தில், கொளத்தூர் தொகுதியில் கழக மூத்த முன்னோடிகளுக்கு பொற்கிழி வழங்கிப் பேசும்போது, “இளைஞர் அணி செயலாளர் தம்பி உதயநிதி தன்னிடம் நிகழ்ச்சிகளுக்குத் தேதி கேட்கும் மாவட்ட செயலாளர்களிடம், ‘கழகமூத்த முன்னோடிகளுக்கு பொற்கிழி வழங்கினால் தேதி தருகிறேன்’ என்று சொல்லி அதை உறுதிப்படுத்திவிட்டுத்தான் அந்த மாவட்டத்துக்குச் செல்கிறார். அவரை நான் பாராட்டுகிறேன். மகன் என்பதற்காக அல்ல. கட்சி முன்னோடிகளுக்கு உரிய மரியாதையைத் தரும் உதயநிதியை கழகத் தலைவராகப் பாராட்டுகிறேன்” என்று குறிப்பிட்டுள்ளார்.**

**இந்தப் பாராட்டு அனைத்தும் பொற்கிழி வழங்கும் நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்யும் மாண்புமிகு அமைச்சர்கள் - மாவட்டக் கழகச் செயலாளர்களையே சேரும். அவர்கள் அனைவருக்கும் இந்த நேரத்தில் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.**

வருவாய் மாவட்டவாரியாக நடைபெற்றுவரும் இளைஞர் அணி செயல்வீரர்கள் கூட்டமும் ஒரு சிறுபுள்ளியில் இருந்து தொடங்கியதுதான். சேலத்தில் வரும் டிசம்பர் 17-ம் தேதி நடைபெற உள்ள இளைஞர் அணி மாநாட்டுக்கு இளைஞர்களை மனரீதியாகத் தயார்படுத்தும் வகையில், மாவட்டந்தோறும் சென்று அவர்களைச் சந்திக்கலாம் என்ற எண்ணத்தில் தொடங்கியதுதான் இந்தச் செயல்வீரர்கள் கூட்டம்.

முதல் கூட்டம் கடந்த ஆகஸ்ட் மாதம் 9-ம் தேதி காஞ்சிபுரத்தில் நடைபெற்றது. மாவட்டக் கழகச் செயலாளர் அண்ணன் சுந்தர் அவர்கள் தலைமையில், நடைபெற்ற இந்தக் கூட்டம் முன்மாதிரியாக அமைந்தது என்றால், அது மிகையல்ல. அந்த வரிசையில் இந்தச் சுற்றுப்பயணத்தில் தேனி, விருதுநகர், நெல்லை, கன்னியாகுமரியில் நடைபெற்ற இளைஞர் அணி செயல்வீரர்கள் கூட்டம் மிகத் தேர்ந்த திட்டமிடலுடன் பிசிறின்றித் தெளிவாக நடைபெற்று முடிந்துள்ளன.

ஒவ்வொரு செயல்வீரர்கள் கூட்டத்திலும் அதிகபட்சம் அரை மணிநேரம் உரையாற்றுகிறேன். தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு முட்டுக்கட்டையாக உள்ள ஒன்றிய பாசிச பா.ஜ.க. அரசையும், மனிதகுலத்துக்கே எதிரியாக உள்ள பா.ஜ.க.வையும், அதற்கு உடந்தையாக இருந்து தமிழர்களின் நலன்களை விட்டுக்கொடுத்த அடிமை அ.தி.மு.க.-வையும் சம்பவங்களை உதாரணமாகச் சொல்லி விமர்சித்துப் பேசுகிறேன். நான் பேசும் விஷயங்களை இளைஞர்கள் வரவேற்று உள்வாங்கிக் கொள்கின்றனர்.

“குழம்பிய குட்டையில் மீன் பிடிக்க நினைப்பதுதான் பா.ஜ.க.-வின் அரசியல். அமைதியான தெளிந்த நீரோடை போல் உள்ள தமிழ்நாட்டில், அவர்களால் அரசியல் செய்ய முடியவில்லை. இந்தத் தெளிந்த நீரோடையை அவதூறு பேச்சு, சர்ச்சை, சாதி-மதத் துவேஷம் போன்ற அழுக்குகளைக் கொட்டி குழப்பிவிட்டு, பிறகு அரசியல் செய்ய நினைக்கிறது. ஆனால், பல சமயங்களில் அழுக்கைக் கொட்டும்போதே பிடிபட்டு அம்பலப்பட்டு விடுகிறது. ‘யாருக்கும் தெரியாமல் அழுக்கைக் கொட்டிவிட்டோம்’ என்று நினைக்கையில், சி.சி.டி.வி காட்சிகள், சாட்சியங்களுடன் கையும் களவுமாகப் பிடிபட்டு முகமூடி கிழிக்கப்படுகிறது.

தங்களின் செயல்பாடுகள் மூலம் மக்களின் மனங்களை வெல்வதுதானே சிறந்த அரசியலாக இருக்க முடியும். அந்தக் கொள்கைப் பயணத்தில் இளைஞர்களைக் கொள்கை ரீதியாக வளர்த்தெடுத்து, அவர்களைத் தலைவர்களாக உருவாக்கி, மக்கள் பிரதிநிதிகளாக உயர்த்தி, அவர்கள் மூலம் மக்கள் நலத்திட்டங்களைச் செயல்படுத்தி... என அது ஒரு நீண்ட நெடிய பயணம்.

அதைத்தான் பெரியார்-அண்ணா - கலைஞர் போன்றோரெல்லாம் பின்பற்றிச் சமூக நீதி, மாநில சுயாட்சி அரசியலைக் கையிலெடுத்து, தமிழ்நாட்டை வளர்த்தெடுத்தனர். அவர்களின் தொடர்ச்சியாகத்தான் நம் தலைவர் அவர்கள் இன்று கழகத்தையும் தமிழ்நாட்டையும் வழிநடத்தி வருகிறார்.

ஆனால், `இன்ஸ்டன்ட் அரசியல்' செய்யும் பா.ஜ.க.விடம் அவ்வளவு பொறுமை இல்லை. இன்று அவதூறு பரப்பி, நாளையே கோட்டைக்குள் சென்றுவிடவேண்டும் என்ற வெறி மட்டுமே அவர்களிடம் உள்ளது.

**இந்தப் போலி அரசியல்பயணத்தில் அங்கங்கு இருக்கும் சமூக விரோதிகளை எல்லாம் அள்ளிப்போட்டுக்கொண்டு, அரசியல் என்ற பெயரில், மக்கள் விரோதச் செயல்களில் ஈடுபட்டு வருகிறது.**

**இப்படி உருவாக்கப்படும் இந்தப் பரபரப்புகளால் வரும் ஊடக வெளிச்சத்தைத் தன் மீது வாங்கிக்கொண்டு மறுபக்கம் அ.தி.மு.க.வைப் பாதுகாக்கவும் நினைக்கிறது. பா.ஜ.க. உடனான கூட்டணி முறிவு, தனித்துப் போட்டி போன்றவை அந்த நாடகத்தின் சில அத்தியாயங்கள்தான்.**

இந்த நாடகத்தில், ‘தமிழ்நாட்டின் உரிமையை விட்டுக்கொடுத்தவர்கள்’, `நீட் தேர்வை நுழையவிட்டு, 20-க்கும் மேற்பட்டோரின் சாவுக்குக் காரணமாக இருந்தவர்கள்’, ‘ஸ்டெர்லைட் துப்பாக்கிச் சூட்டில் 13 பேர் இறப்புக்கு காரணமானவர்கள்’, மக்களின் வரிப் பணத்தில் பல லட்சம் கோடி ரூபாயைச் சுருட்டியவர்கள்’ என்ற அ.தி.மு.க. மீதுள்ள ஊழல் கறையை, இரத்தக் கறையைக் கழுவிவிடப் பா.ஜ.க. நினைக்கிறது. ‘பூசியவர்களே கறைகளைக் கழுவியும் விடுகிறார்களே’ என்று எடப்பாடியும் கைகளைக் கட்டிக்கொண்டு நிற்கிறார்.

அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர்கள் மீதான ஊழல் வழக்குகளுக்கு அனுமதி அளிக்காமல் ஆளுநர் முட்டுக்கட்டை போடுவது, பொள்ளாச்சி பாலியல் பலாத்கார வழக்குகள் போன்ற முக்கியமான பல வழக்குகளைச் சி.பி.ஐ கிடப்பில் போட்டிருப்பது போன்றவை எல்லாம் அதைத்தான் உணர்த்துகின்றன.

**`கோத்ரா ரயில் எரிப்புச் சம்பவம்’, தூண்டிவிடப்பட்ட `மணிப்பூர் கலவரம்’, `சி.ஏ.ஜி.’ வெளியிட்ட 7.5 லட்சம் கோடி ரூபாய் ஊழல் என ஏற்கெனவே இரத்தக் கறையும் ஊழல் கறையும் படிந்தவர்களால், எடப்பாடி மீதுள்ள அதே கறைகளை எப்படிக் கழுவிவிட முடியும்?**

**பாசிச பா.ஜ.க.-வுக்கு அடிமையாக இருந்து மக்களின் உரிமையை விட்டுக்கொடுத்ததற்கான தண்டனையை, மக்கள் எடப்பாடி அண்ட் கோ-வுக்கு வழங்குவார்கள் என்பது நிச்சயம். எடப்பாடியின் தொடர் தோல்வியும் அதைத்தான் உணர்த்துகின்றன.”**

மக்கள் விரோத அடிமை அ.தி.மு.க. - பாசிச பா.ஜ.க. குறித்து ஆயிரக்கணக்கான இளைஞர்கள் மத்தியில் இப்படிப் பேசும்போது அவர்கள் கூர்ந்து கவனித்து உள்வாங்குவதை உணரமுடிகிறது.

நவீன தமிழ்நாட்டின் சிற்பியான முத்தமிழறிஞர் கலைஞரின் நூற்றாண்டை அரசின் சார்பிலும், கழகத்தின் சார்பிலும், மக்களுக்குப் பயனுள்ள வகையில் எப்படியெல்லாம் கொண்டாடுகிறோம் என்பதை, ஒவ்வொரு மேடையிலும் பட்டியலிடுவதை வழக்கமாகக் கொண்டிருக்கிறேன்.

‘முடியவே முடியாது’ என்றார்கள். ஆனால், கலைஞர் பெயரில் மகளிருக்கு மாதந்தோறும் உரிமைத் தொகை வழங்கி வருகிறோம். ஆறேழு ஆண்டுகளுக்கு முன் அடிக்கல் நாட்டிய எய்ம்ஸைக் கட்ட அவர்களுக்கு மனமில்லை. ஆனால், கலைஞர் பெயரில் மதுரையில் பிரம்மாண்ட நூலகத்தையும், சென்னையில் மருத்துவமனையையும்நம்முதலமைச்சர் அவர்கள் கட்டியெழுப்பித் திறந்து வைத்துள்ளார்” என்பதைக் குறிப்பிடும்போது மக்கள் நல அரசுக்கும் - மக்கள் விரோத கும்பலுக்குமான வித்தியாசத்தை இளைஞர்கள் நன்றாகப் புரிந்துகொள்கின்றனர்.

ஒரு கட்சி ஆளுங்கட்சியாகும்போது, கட்சியைக் கைவிட்டு விடுவார்கள். அதன் பணிகள் தொய்வடையும் என்று கூறுவார்கள். ஆனால், நம் கழகத் தலைவர் அவர்கள் எதிர்க்கட்சியில் இருப்பது போன்ற மனநிலையுடன் எப்படி கட்சிப் பணியாற்றுகிறார் என்பதை ஒவ்வொரு மேடையிலும் பட்டியலிடுகிறேன்.

**“ஒரு பக்கம் ‘கள ஆய்வில் முதலமைச்சர்’ என மண்டல வாரியாக அரசு ஆய்வுக் கூட்டங்கள், மறுபக்கம் கழகத் தலைவராக மண்டல வாரியாக, `பாக முகவர்கள் மாநாடு’ நடத்துகிறார். முத்தமிழறிஞர் கலைஞரின் பிறந்தநாளைக் கொண்டாட அரசின் சார்பில், 13 குழுக்கள் அமைத்துள்ளார். அதேபோல கழகத்தின் ஒவ்வோர் அணிக்கும் சில பணிகளை ஒதுக்கித் தந்து கலைஞரின் நூற்றாண்டை மக்களுக்குப் பயனுள்ள வகையில் கொண்டாடி வருகிறார். கூட்டணிக் கட்சிகளுடன் இணைந்து சட்டமன்றத்தை மிகச் சிறப்பாக நடத்திச் செல்கிறார். மறுபுறம் ‘இந்தியா கூட்டணி’ அமைத்து, நாடாளுமன்றத் தேர்தல் பணியைத் தொடங்கிவிட்டார்.**

**இப்படி முதலமைச்சர் - கழகத் தலைவர் என இரு பொறுப்புகளிலும் தன்னுடைய உழைப்பால் தொய்வில்லாமல் தொடர்கிறார். மக்கள் நலத் திட்டங்களின் வெற்றியும் தொடர் தேர்தல் வெற்றியும் அதைத்தான் உணர்த்துகின்றன” என்று பேசும்போது நம் கழகத் தலைவரின் உழைப்பை நம் இளைஞர்கள் தெளிவாகப் புரிந்துகொள்கின்றனர்.**

“சமூக வலைதளத்திலேயே கருத்துகளைப் பரிமாறிக்கொள்கிறோம். காணொலிக் காட்சி வாயிலாக உரையாடிக்கொள்கிறோம். இந்த நவீன தொழில்நுட்ப யுகத்தில் மாநாடு நடத்தி, லட்சக்கணக்கான இளைஞர்களை ஒரே இடத்தில் கூட்டவேண்டியதன் அவசியம் என்ன?” என்ற கேள்வியையும் ஒவ்வொரு கூட்டத்திலும் நானே எழுப்பிப் பதிலளிக்கிறேன்.

“தலைமைக் கழகம் தொடங்கி, கடைக்கோடி கிளைக்கழகம் வரை, நம் இயக்கம் மிகப்பெரிய கட்டமைப்பைக் கொண்டது. மேலும் 23 அணிகள், ஒவ்வொன்றுக்கும் ஒன்றிய -நகர-பகுதி- பேரூர் வரை நிர்வாகிகள் இருக்கிறார்கள். இளைஞர் அணி கிளைக்கழகம் வரை நிர்வாகிகளைக் கொண்டது. இந்தக் கட்டமைப்பினால்தான் பல இடர்களுக்கு இடையிலும் கழகம் தொய்வின்றி, தன் வெற்றிநடையைத் தொடர்கிறது.

இப்படிப் பலம் வாய்ந்த கட்டமைப்பை, இந்தச் சங்கிலித் தொடரை நம் அடுத்தடுத்த தலைமுறைக்குக் கடத்தவும், உங்களின் தேவைகளை நிறைவேற்றவும், உங்களின் கோரிக்கைகளுக்குச் செவிகொடுக்கவும் கழகம் இருக்கிறது என்பதை மக்களுக்கு உணர்த்தவும்தான் இந்த மாநாடு.

தவிர, நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்பு நடைபெறும் மாநாடு. கழகத்தின் பலத்தை எதிர்க்கட்சிகளுக்கு உணர்த்தவும், நீண்ட பாரம்பரியம் கொண்ட, முதிர்ந்த அரசியல் அனுபவம் கொண்ட கழகம் நமக்குத் துணையாக இருக்கிறது என்பதை மக்களுக்கு உணர்த்தவும் கழகத்தில் உள்ள இளைஞர்கள் அனைவரும் சேலத்தில் கூட வேண்டியது அவசியம்” என்று உரையாற்றுகிறேன்.

**“சமீபத்தில், மதுரையில் நடைபெற்று முடிந்த ஒரு கட்சியின், மாநாட்டில் அதன் கொள்கைகள் குறித்துப் பேசப்பட்டதா, அந்தக் கட்சியின் ஆட்சியின் சாதனைகளாக எதுவும் விவாதிக்கப்பட்டதா? அந்த `புளிசாத மாநாடு’ போல் இல்லாமல் நம் இளைஞர் அணி மாநாடு நம் கொள்கைகளைப் பேசக்கூடியதாக, நம் தலைவர்களின், கழக அரசின் சாதனைகளைப் பட்டியலிடும் வகையில், நம் வரலாற்றைத் திரும்பிப் பார்த்து நம் செயல்பாடுகளை மேம்படுத்திக்கொள்ளும் வகையில் இருக்கும்” என்ற உறுதியையும் அவர்களுக்கு அளிக்கிறேன்.**

அதேபோல நம் கழகம் முன்னெடுத்துள்ள, ‘நீட் விலக்கு நம் இலக்கு’ என்ற கையெழுத்து இயக்கம் குறித்தும், நீட் தேர்வுக்கு எதிரான ஒட்டுமொத்த தமிழ்நாட்டு மக்களின் மனநிலையை ஒன்றிய அரசுக்கு உணர்த்தும் வகையில், 50 நாட்களில் 50 லட்சம் கையெழுத்துகளைப் பெற வேண்டியதன் அவசியம் குறித்தும் மறக்காமல் குறிப்பிடுகிறேன். மேலும், அந்தச் செயல்வீரர்கள் கூட்டத்தில் கலந்துகொண்டுள்ள இளைஞர்கள் அனைவரும் ‘நீட் விலக்கு’க்கு தங்களின் ஆதரவை தெரிவிக்கும் வகையில், சம்பந்தப்பட்ட இணையதளத்துக்குச் சென்று கையெழுத்திடுகின்றனர்.

இதுவரை 20 வருவாய் மாவட்டங்களில் இந்தச் செயல்வீரர்கள் கூட்டம் நடைபெற்று முடிந்துள்ளது. மீதியுள்ள 18 வருவாய் மாவட்டங்களுக்கான செயல்வீரர்கள் கூட்டத்தை டிசம்பர் முதல் வாரத்துக்குள் நடத்தி முடிக்க வேண்டும் என்று திட்டமிட்டுள்ளோம்.

அதேபோல ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதிக்கும் ஒரு ‘கலைஞர் நூலகம்’ அமைக்க வேண்டும் என்று கழகத் தலைவர் அவர்கள் இளைஞர் அணியை அறிவுறுத்தி உள்ளார்கள். அதன்படி, கிருஷ்ணகிரி தொகுதியில் முதல் ‘கலைஞர் நூலக’த்தைத் தொடங்கி வைத்தோம். இந்தச் சுற்றுப்பயணத்தில் கம்பம், பெரியகுளம், நாங்குனேரி, பாளையங்கோட்டை, பத்மநாபபுரம், கன்னியாகுமரி ஆகிய 6 தொகுதிகளுக்கான ‘கலைஞர் நூலக’ங்களைத் தொடங்கி வைத்துள்ளோம். இதுவரை 15 தொகுதிகளில், கலைஞர் நூலகங்கள் தொடங்கப்பட்டு, மிகச்சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றன.

இப்படி, இளைஞர் அணி செயல்வீரர்கள் கூட்டம், கழக மூத்த முன்னோடிகளுக்குப் பொற்கிழி வழங்குவது, கலைஞர் நூலகங்கள் திறப்பு, பல்வேறு துறைகளில் செயல்படுத்தப்படும் அரசு நலத்திட்டங்களின் முன்னேற்றம் குறித்து, மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகங்களில் ஆய்வுக் கூட்டம்... என இந்தச் சுற்றுப்பயணம் எதிர்பார்த்ததைவிட, மிகச்சிறப்பாக அமைந்திருந்தது மனதுக்கு நிறைவைத் தருகிறது.

இந்த 4 மாவட்டங்களிலும் இந்த நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்த மாண்புமிகு அமைச்சர்கள் அண்ணன் ஐ.பெரியசாமி, அண்ணன் கே.கே.எஸ்.எஸ்.ஆர், அண்ணன் தங்கம் தென்னரசு, அண்ணன் மனோ தங்கராஜ், மாவட்டச் செயலாளர்கள் அண்ணன் ஆவுடையப்பன், அண்ணன் கம்பம் ராமகிருஷ்ணன், அண்ணன் டி.பி.எம்.மைதீன்கான், அண்ணன் மகேஷ், அண்ணன் தங்க தமிழ்ச்செல்வன் ஆகியோருக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

நெல்லையில் அரசு நிகழ்ச்சிகளில் எங்களுடன் பங்கேற்ற மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் அண்ணன் அப்பாவு அவர்களுக்கும் நன்றி.

இந்த மாவட்டங்களில் இளைஞர் அணி நிர்வாகிகளை ஒருங்கிணைக்கும் துணைச் செயலாளர்கள் இன்பா ரகு, ஜி.பி. ராஜா ஆகியோருக்கும் நன்றி. அரசு நிகழ்ச்சிகளை ஒருங்கிணைத்த சிறப்புத் திட்ட செயலாக்கத்துறைச் செயலாளர் மருத்துவர் தாரேஷ் அகமது, மாவட்ட ஆட்சித் தலைவர்கள் உள்ளிட்ட அனைத்து அரசு அலுவலர்களுக்கும் நன்றி.

கழக நிர்வாகிகளுக்கு ஒரு வேண்டுகோள். நிகழ்ச்சிகளில் பட்டாசு வெடிப்பது, பூங்கொத்து அளிப்பது, பொன்னாடை - மாலை அணிவிப்பது, ஃப்ளெக்ஸ் பேனர் வைப்பது போன்ற தேவையற்ற ஆடம்பரங்களைத் தவிருங்கள். கழக வேட்டி - துண்டு மற்றும் புத்தகங்களை அன்பளிப்பாக அளியுங்கள். அவை தேவையானோருக்கு பயன்படும். விரும்புவோர் சிறிய தொகையாக இருந்தாலும் பரவாயில்லை; இளைஞர் அணி வளர்ச்சி நிதியாக அளியுங்கள். நன்றி!



அமைச்சர்
**உதயநிதி ஸ்டாலின்**
(கழக இளைஞர் அணிச் செயலாளர்)

> ‘இன்ஸ்டன்ட் அரசியல்’ செய்யும் பா.ஜ.க.விடம் அவ்வளவு பொறுமை இல்லை. இன்று அவதூறு பரப்பி, நாளையே கோட்டைக்குள் சென்றுவிடவேண்டும் என்ற வெறி மட்டுமே அவர்களிடம் உள்ளது.
> இந்தப் போலி அரசியல்பயணத்தில் அங்கங்கு இருக்கும் சமூக விரோதிகளை எல்லாம் அள்ளிப்போட்டுக்கொண்டு, அரசியல் என்ற பெயரில், மக்கள் விரோதச் செயல்களில் ஈடுபட்டு வருகிறது.
> இப்படி உருவாக்கப்படும் இந்தப் பரபரப்புகளால் வரும் ஊடக வெளிச்சத்தைத் தன் மீது வாங்கிக்கொண்டு மறுபக்கம் அ.தி.மு.க.-வைப் பாதுகாக்கவும் நினைக்கிறது. பா.ஜ.க. உடனான கூட்டணி முறிவு, தனித்துப் போட்டி போன்றவை அந்த நாடகத்தின் சில அத்தியாயங்கள்தான்.



காஞ்சிபுரத்தைச் சேர்ந்த, தேசிய மாணவர் படையின் மாணவர் தம்பி குகன்ராஜ், உத்தரகாண்டில் உள்ள இமயமலையின் “தெலு” சிகரத்தை தொடுகிற மலையேற்ற பயிற்சியை அண்மையில் நிறைவு செய்தார். இந்தியாவிலிருந்து மொத்தம் 9 என்.சி.சி. மாணவர்கள் மட்டுமே பங்கேற்ற இந்த மலையேற்றப் பயிற்சியில், தமிழ்நாட்டிலிருந்து பங்கேற்ற தம்பி குகன்ராஜை தலைமைச் செயலகத்தில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பாராட்டினார். உடன் அரசு உயர் அதிகாரிகள் அதுல்யா மிஸ்ரா, மேகநாத ரெட்டி ஆகியோர் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (1.11.2023) தலைமைச் செயலகத்தில், செய்தி மக்கள் தொடர்புத்துறையின் ‘தமிழரசு’ சார்பில் தயாரிக்கப்பட்டுள்ள “விடுதலை போராட்டத்தில் தமிழ்நாட்டின் பங்களிப்பு” (தமிழ் நூல்) மற்றும் “Tamil Nadu’s Contribution to the Freedom Struggle” (ஆங்கில மொழிபெயர்ப்பு நூல்) ஆகிய சிறப்பு மலர்களை வெளியிட, மேற்கு வங்க முன்னாள் ஆளுநர் கோபாலகிருஷ்ண காந்தி அவர்கள் பெற்றுக் கொண்டார். உடன், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் மரு.இரா. செல்வராஜ், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் த.மோகன் ஆகியோர் உள்ளனர்.

### 2023-24ஆம் ஆண்டிற்கான முதலமைச்சரின் ஆராய்ச்சி உதவித் தொகை

# தகுதித் தேர்வுக்கான விண்ணப்பங்கள்!

## தமிழ்நாடு அரசு அறிவிப்பு!

சென்னை, நவ. 2-

முதல்வர் அவர்களால் தமிழக மாணவர்களின் ஆராய்ச்சி திறமையை மேம்படுத்தவும், புதிய கண்டுபிடிப்புகளை ஊக்கப்படுத்தவும் மாநில அளவில் தகுதித் தேர்வு நடத்தப்பட்டு முதலமைச்சரின் ஆராய்ச்சி ஊக்கத்தொகை வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டது. இந்த அறிவிப்பின்படி கலை, மனித நேயம் (ம) சமூக அறிவியல் பிரிவைச் சேர்ந்த 60 மாணாக்கர்களுக்கும் அறிவியல் பாடப் பிரிவைச் சேர்ந்த 60 மாணாக்கர்களுக்கும் ஆராய்ச்சி ஊக்கத்தொகை முதல் இரண்டாண்டுகளுக்கு மாதம் ரூ.25,000/ வீதமும், மூன்றாம் ஆண்டிற்கு மாதம் ரூ. 28,000/ வீதம் 12 மாதங்களுக்கும் வழங்கப்படும்.

இத்திட்டத்தின் கீழ் தகுதி வாய்ந்த மாணாக்கர்களை தெரிவு செய்யும் பொருட்டு ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் தகுதித் தேர்வு நடத்த திட்டமிட்டு இதற்கான அறிவிப்பு (https://trb.tn.gov.in/) என்ற இணையதளத்தில் 16.10.2023 அன்று வெளியிடப்பட்டுள்ளது.

2024ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் உள்ள அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் முழு நேர ஆராய்ச்சி படிப்பு மேற்கொள்ள விரும்பும் மாணாக்கர்களுக்கு (Full Time Ph.D Programme) நிதியுதவி அளிக்கும் வகையில் தமிழ்நாட்டைச் சார்ந்த தகுதியான மாணாக்கர்களிடமிருந்து 2023 24ஆம் ஆண்டிற்கான முதலமைச்சரின் ஆராய்ச்சி உதவித் தொகை தகுதித் தேர்வுக்கான விண்ணப்பங்கள் இணையதளம் மூலமாக வரவேற்கப்படுகின்றன.

விண்ணப்பதாரர்கள் மேற்கண்ட இணையதளம் வாயிலாக 20.10.2023 முதல் 15.11.2023 பிற்பகல் 5.00 மணி வரை விண்ணப்பிக்கலாம் என்று தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது.

### அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் தலைமையில்

# டெல்டா பகுதியில் சம்பா சாகுபடி தொடர்பான ஆலோசனைக் கூட்டம்!

சென்னை, நவ. 2 -

தலைமை செயலகத்தில் வேளாண்மை உழவர் நலத் துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தலைமையில் டெல்டா பகுதியில் சம்பா சாகுபடி தொடர்பான ஆலோசனைக் கூட்டம் 31.10.2023 அன்று நடைபெற்றது,

இக்கூட்டத்தில் வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு முதன்மைச் செயலாளர் செல்வி. அபூர்வா, வேளாண்மைத் துறை ஆணையர் முனைவர் இல.சுப்பிரமணியன், வேளாண்மை கூடுதல் இயக்குநர் திருமதி ஸ்ரேயா பி.சிங்., தலைமைப் பொறியாளர் (வே. பொ.) ஆர்.முருகேசன் மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளின்படி கீழ்க்கண்டவாறு டெல்டா விவசாயிகளுக்கு சம்பா சாகுபடிக்கான ஆலோசனைகள் வழங்கப்படுகிறது.

நவம்பர் 15 ஆம் தேதிக்கு முன்பு மழை பொழிவு பெறப்படின், குறுகிய கால நெற்பயிர் இரகங்களான ஆடுதுறை 45, 53, 56, 57, கோ 51. அம்பை 16 போன்ற இரகங்களை நேரடி விதைப்பு முறையில் பயிரிடலாம். பருவமழை பொய்த்தால், குறுகியகாலப் பயிர்களான பயறு வகைகள், எண்ணெய் வித்துக்கள் மற்றும் சிறுதானியங்களை, மார்கழிப் பின் பட்டத்தில் சாகுபடி செய்யலாம்.

தற்போது, நடவு செய்யப்பட்ட சம்பா பயிர்களில் வறட்சி ஏற்படும் பட்சத்தில் வறட்சியைத் தாங்கும் தன்மையை ஏற்படுத்தும். பிங்க் பிக்மெண்ட்டட் ஃபேக்கல் டேடிவ் மெத்தைலோட்ரோஃப் என்ற உயிரினக் காரணியை ஒரு லிட்டருக்கு ஒரு மில்லி என்ற வீதத்தில் கலந்து கைத்தெளிப்பான் கொண்டு தெளிக்குமாறு அறிவுறுத்தப்படுகிறது.

நிலத்தடி நீரை (கிணறுகள், உறைக் கிணறுகள், ஆழ்துளை குழாய்க் கிணறுகள்) தேவைக்கேற்றவாறு, சிக்கனமாக விவசாயிகள் பயன்படுத்திட கேட்டுக்கொள்ளப்படுகிறது.

சம்பா பருவத்தில் பயிர் காப்பீடு செய்ய அறிவிக்கை செய்யப்பட்டுள்ள கிராமங்களில் உள்ள அனைத்து விவசாயிகளும் 15.11.2023 க்குள் பயிர் காப்பீடு செய்ய கேட்டுக் கொள்ளப்படுகிறது.

இவ்வாறு அரசின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### இன்று காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட

# தி.மு.க. செயற்குழுக் கூட்டம்!

## மாவட்ட செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. அறிவிப்பு!



காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம், இன்று (02.11.2023 -வியாழக்கிழமை) காலை 9.00 மணியளவில் செங்கல்பட்டு மதுராந்தகம் ஜி.எஸ்.டி சாலையில் மாமண்டூர் மனோஜ் பவன் ஓட்டல் கூட்ட அரங்கில் மாவட்ட கழக அவைத்தலைவர் ச.இனியரசு தலைமையிலும் மாவட்ட துணை செயலாளர்கள் க.செல்வம் எம்.பி. டி.வி.கோகுலகண்ணன். கு. மலர்விழி, மாவட்டப் பொருளாளர் சன்பிராண்ட் கே.ஆறுமுகம் முன்னிலையிலும் நடைபெற உள்ளது.

கூட்டத்தில் சட்டமன்ற தொகுதி பார்வையாளர்கள், டாக்டர் சுபேர் கான் காஞ்சிபுரம், ஜெ.பச்சையப்பன் (உத்திரமேரூர்), கான்ஸ்டன்டைன் ரவிந்திரன் (மதுராந்தகம். கே.ஜி.பாஸ்கர் சுந்தரம் (செய்யூர்), ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளார்கள்.

எனவே, இக்கூட்டத்தில் சட்டமன்ற உறுப்பினர் தலைமைசெயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர நகர ஒன்றிய பகுதி பேரூர் செயலாளர்கள் மாநில, மாவட்ட, கழக அணிகளின் நிர்வாகிகள் மற்றும் சிறப்பு அழைப்பாளர்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

பொருள் : வருகின்ற நவம்பர் 5 அன்று திருவள்ளூரில் முதல்வர் அவர்கள் தலைமையில் நடைபெறும் வாக்குச் சாவடி நிலை முகவர்கள் (BLA2) பயிற்சி பாசறை கூட்டத்தில் பங்கேற்பது சம்மந்தமாக. வாக்காளர் பட்டியல் சரிபார்த்தல். கழக ஆக்கப் பணிகள்.

**க.சுந்தர், எம்.எல்.ஏ.**

செயலாளர், காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட தி.மு.க.





தலைமைச் செயலகத்தில், 31.10.2023 அன்று முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணி தலைமையில் உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறைத் தலைமை அலுவலர்களின் பணி ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், டாக்டர் கே. கோபால், உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை முதன்மைச் செயலாளர் / ஆணையாளர் ஹர் சஹாய் மீனா, தமிழ்நாடு நுகர்பொருள்வாணிபக் கழக நிர்வாக இயக்குனர் ஆ. அண்ணாதுரை, தமிழ்நாடு சேமிப்பு கிடங்கு நிர்வாக இயக்குநர் எஸ். பழனிசாமி, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அரசு துணைச் செயலாளர் து.மோகன்ராஜ், குடிமைப்பொருள் வழங்கல் குற்றப்புலனாய்வு காவல்துறைத் தலைவர் க. ஜோஷி நிர்மல் குமார், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அரசு கூடுதல் செயலாளர் பி.கே. இராமச்சந்திரன் மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### ஆங்கிலத்தில் சிறப்பு மலர்கள் மற்றும்

# “விடுதலைப் போராட்டத்தில் தமிழ்நாட்டின் பங்களிப்பு” நூல்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட மேற்குவங்க முன்னாள் ஆளுநர் கோபாலகிருஷ்ண காந்தி பெற்றுக் கொண்டார்!

சென்னை, நவ. 2-

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (1.11.2023) தலைமைச் செயலகத்தில், செய்தி மக்கள் தொடர்புத்துறையின் ‘தமிழரசு’ சார்பில் தயாரிக்கப்பட்டுள்ள “விடுதலைப் போராட்டத்தில் தமிழ்நாட்டின் பங்களிப்பு” (தமிழ் நூல்) மற்றும் “Tamil Nadu’s Contribution to the Freedom Struggle” (ஆங்கில மொழிபெயர்ப்பு நூல்) ஆகிய சிறப்பு மலர்களை வெளியிட, மேற்கு வங்க முன்னாள் ஆளுநர் கோபாலகிருஷ்ண காந்தி அவர்கள் பெற்றுக் கொண்டார்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முதலமைச்சராகப் பதவியேற்று முதன்முதலாக 15.08.2021 அன்று சுதந்திரத் திருநாளன்று சென்னை தலைமைச் செயலக கோட்டைக் கொத்தளத்தில் தேசியக் கொடியினை ஏற்றி வைத்து ஆற்றிய உரையின்போது, இந்திய விடுதலைப் போராட்டத்திற்கு தமிழ்நாடு அளித்த பங்களிப்பு குறித்த முழுமையான ஆவணம் ஒன்றை தயாரித்து தமிழிலும் ஆங்கிலத்திலும் வெளியிடும் என்று அறிவித்தார்.

அவ்வறிவிப்பினை செயல்படுத்தும் விதமாகவும், தமிழ்நாட்டு தியாகிகளைப் போற்றி பெருமைப்படுத்தும் வகையிலும், விடுதலைப் போராட்டத்தில் தமிழ்நாட்டின் பங்களிப்பு குறித்த ஆவணத்தினை தயார் செய்ய, சென்னை லயோலா கல்லூரி முன்னாள் தலைவர் டாக்டர் பெர்னாட் டி சாமி அவர்கள் தலைமையில், சென்னை வளர்ச்சி ஆராய்ச்சி நிறுவனத்தின் வரலாற்றுப் பேராசிரியர் டாக்டர் ஆ.இரா.வேங்கடாசலபதி, தமிழ்நாடு பாடநூல் கழக இணை இயக்குநர் சங்கர சரவணன், எழுத்தாளர் ஸ்டாலின் குணசேகரன், தமிழ்நாடு ஆவண காப்பக ஆய்வு அதிகாரி விஜயராஜா ஆகியோர் ஆலோசனைக்குழு உறுப்பினர்களாகவும், தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழக பேராசிரியர் டாக்டர் என்.தனலட்சுமி, ஸ்டெல்லா மேரி கல்லூரி உதவிப் பேராசிரியர் டாக்டர் சிந்தியா ஜூட், லயோலா கல்லூரி உதவிப் பேராசிரியர் டாக்டர் ஏ. அற்புதச் செல்வி, லயோலா கல்லூரி இணைப் பேராசிரியர் டாக்டர் எல்.செல்வநாதன், லயோலா கல்லூரி உதவிப் பேராசிரியர் டாக்டர் சேவியர், சென்னை கிறிஸ்தவக் கல்லூரி உதவிப் பேராசிரியர் டாக்டர் கே.அசோக், ராஜபாளையம், ராஜூஸ் கல்லூரி முன்னாள் முதல்வர் டாக்டர் வி.வெங்கட்ராமன், அழகப்பா கல்லூரி உதவிப் பேராசிரியர் டாக்டர் டி.பாலசுப்பிரமணியன், தமிழ்நாடு மெய்நிகர் பல்கலைக்கழக ஆய்வாளர் செந்தில் குமரன் மற்றும் செய்தி மக்கள் தொடர்புத்துறை இணை இயக்குநர் (வெளியீடுகள்) இரா. அண்ணா ஆகிய பிற உறுப்பினர்களைக் கொண்டு குழுக்கள் அமைக்கப்பட்டு, இச்சிறப்பு மலர் தயார் செய்யப்பட்டுள்ளது.

இச்சிறப்பு மலரில், அண்ணாமலைப் பல்கலைக்கழக பேராசிரியர் டாக்டர் சி. நடராஜன் அவர்கள் எழுதிய “தமிழ்நாட்டில் சுதந்திரப் போராட்டத்தின் சுருக்கமான வரலாறு”, பஞ்சாப் இந்திய அறிவியல் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தின் தலைவர் டாக்டர் ராஜேஷ் வெங்கட சுப்பிரமணியன் அவர்கள் எழுதிய “இந்திய தேசிய வாதமும், சங்கத் தமிழ் இலக்கியமும்”, புதுதில்லி ஜவஹர்லால் நேரு ஆய்வு மையத்தைச் சேர்ந்த டாக்டர் வேலாயுதம் சரவணன் அவர்கள் மற்றும் டாக்டர் வீரமணி அவர்கள் எழுதிய “தமிழ்நாட்டில் பழங்குடியின சுதந்திரப் போராட்ட வீரர்கள் ஓர் ஆய்வு செய்யப்படாத வரலாறு”, இராஜபாளையம் ராஜூஸ் கல்லூரி இணைப் பேராசிரியர் டாக்டர் கே.ராஜேஷ் குமார் அவர்கள் எழுதிய “தமிழ்நாட்டில் விவசாயிகள் எழுச்சி (1920-1947)”, சிக்கிம் பல்கலைக்கழக வரலாற்றுத்துறை பேராசிரியர் வி. கிருஷ்ணா ஆனந்த் அவர்கள் எழுதிய “தேசிய வாதமும் தமிழ்நாட்டின் உழைக்கும் வர்க்கமும்”, எழுத்தாளர் டாக்டர் தியோடர் பாஸ்கரன் அவர்கள் எழுதிய “சுதந்திரப் போராட்டமும், தமிழ்நாட்டின் வெள்ளித்திரையும்”, சென்னை தியாகராய கல்லூரி முன்னாள் தலைவர் டாக்டர் எஸ்.என். நாகேஸ்வரராவ் அவர்கள் எழுதிய “இந்தியாவுடன் இணைதல்; புலம்பெயர் தமிழர்களும் இந்திய சுதந்திரப் போராட்டமும்”, இராணிப்பேட்டை அப்துல் ஹக்கிம் கல்லூரி உதவிப் பேராசிரியர் முகமது ஹாசன் அவர்கள் எழுதிய “அரசியல் உரை மற்றும் தேசிய வாத கதைகள்; காலனித்துவ தமிழ்நாட்டில் தடைசெய்யப்பட்ட புத்தகங்கள்”;

இராஜபாளையம் ராஜூஸ் கல்லூரி முன்னாள் முதல்வர் டாக்டர் வி.வெங்கட்ராமன் அவர்கள் எழுதிய “பிரிட்டிஷ் ஆட்சியின்கீழ், கம்யூனிஸ்ட் சித்தாந்தத்தின் இறக்குமதி; காலனித்துவ தமிழ்நாட்டில் பொதுவுடை மைவாதிகளின் எழுத்துக்களுக்கான முக்கிய மேடை (1925-1945)”, பீகார் பாபா சாஹேப் பீமாராவ் அம்பேத்கர் பல்கலைக்கழக பேராசிரியர் டாக்டர் கௌதம் சந்திரா அவர்கள் எழுதிய “காலனித்துவ மதராசில் கல்வி, வேலையின்மை மற்றும் சுதந்திரப் போராட்டம்”, ஸ்டெல்லா மேரி கல்லூரி உதவிப் பேராசிரியர் டாக்டர் சிந்தியா ஜூட் அவர்கள் எழுதிய “மாணவர் இயக்கங்களும் சுதந்திரப் போராட்ட மும்1”, இராஜபாளையம் ராஜூஸ் கல்லூரி உதவிப் பேராசிரியர் டாக்டர் டி.எபிஜேம்ஸ் அவர்கள் எழுதிய “மாணவர் இயக்கங்கள் மற்றும் சுதந்திரப் போராட்டம் 2”;

திருச்சிராப்பள்ளி செயின்ட் ஜோஸப் கல்லூரி முதல்வர் டாக்டர் எம். ஆரோக்கிய சாமி சேவியர் அவர்கள் எழுதிய “சுதந்திரப் போராட்டத்தில் தமிழ்நாட்டு கிறிஸ்தவர்களின் பங்களிப்புகள்”, திருச்சிராப்பள்ளி ஜமால் முகமுது கல்லூரி இயக்குநர் டாக்டர் ஜே. ராஜாமுகமது அவர்கள் எழுதிய “சுதந்திரப் போராட்டத்தில் இஸ்லாமியர்களின் பங்களிப்புகள்”, இராஜபாளையம் ராஜூஸ் கல்லூரி முன்னாள் முதல்வர் டாக்டர் வி.வெங்கட்ராமன் அவர்கள் எழுதிய “தமிழ்நாடு சட்டமறுப்பு இயக்கத்தில் ஐரோப்பிய மேட்டுக்குடியினரின் காந்திய ஆதரவு அணுகுமுறை (1930-1932)”, சென்னை கிறிஸ்தவக் கல்லூரி உதவிப் பேராசிரியர் டாக்டர் கே. அசோக், டாக்டர் பி.சுமபாலா மற்றும் டாக்டர் எஸ். தீபிகா ஆகியோர் எழுதிய “தியாகத்தின் அடையாளங்கள்; தமிழ்நாட்டின் சுதந்திரப் போராட்டத்தின் நினைவுச் சின்னங்கள்”, பாண்டிச்சேரி மாநில உயர்கல்வி மன்ற உறுப்பினர் டாக்டர் எம்.பி. இராமானுஜம் அவர்கள் எழுதிய “இந்திய தேசியவாதமும், புதுச்சேரியின் விடுதலையும்” ஆகிய கட்டுரைகள் இச்சிறப்பு மலரில் இடம்பெற்றுள்ளன.

இந்நிகழ்ச்சியில், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் மருத்துவர் இரா. செல்வராஜ், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் த.மோகன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.



தலைமைச் செயலகத்தில், நேற்று (01.11.2023) சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ்.மஸ்தான், 4 உலமா ஓய்வூதியதாரர்களுக்கு மாதம்தோறும் தலா ரூ.3,000/ வீதம் மற்றும் ஒரு உலமா குடும்ப ஓய்வூதியதாரருக்கு மாதந்தோறும் தலா ரூ.1,500/ வீதம் வழங்குவதற்கான ஆணைகளை பயனாளிகளுக்கு வழங்கினார். இந்நிகழ்வில், பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை செயலாளர் திருமதி. ரீட்டா ஹரீஷ் தக்கர், தமிழ்நாடு வக்ஃபு வாரிய தலைவர் எம். அப்துல் ரஹ்மான், தமிழ்நாடு வக்ஃபு வாரிய முதன்மை செயல் அலுவலர் இரா.ஜெய்னுலாப்தீன், தமிழ்நாடு வக்ஃபு வாரிய அலுவலர்கள் மற்றும் துறை உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## பட்டாம்பூச்சி போல் பறந்து கொண்டிருக்கும் அண்ணன் அமைச்சர் எ.வ.வேலு! ‘விபத்தில்லா தமிழ்நாடு’ எனும்

# முதலமைச்சரின் கனவை நிறைவேற்ற ‘சாலை செயலி’ வெற்றி பெறட்டும்!

## திட்டத்தைத் தொடங்கி வைத்து அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் உரை!

சென்னை, நவ.2-

**“விபத்தில்லா தமிழ்நாடு எனும் முதலமைச்சரின் கனவை நிறைவேற்ற ‘சாலை செயலி’ திட்டம் வெற்றி பெறட்டும்” என்று அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் திட்டத்தை தொடங்கி வைத்து உரையாற்றும் போது கூறினார்.**

திட்டத்தைத் தொடங்கி வைத்து அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு :

அமைச்சர் எ.வ.வேலு அவர்கள் தொடர்ந்து, கழக நிகழ்ச்சிகளுக்காக, அவருடைய மாவட்டத்திற்கு என்னைப் பல முறை அழைத்துச் சென்றிருக்கிறார்.

பல்வேறு நிகழ்ச்சிகளை என்னை வைத்து நடத்திக் கொண்டிருக்கிறார். ஆனால், அவருடைய துறை சம்பந்தப்பட்ட ஒரு நிகழ்ச்சிக்கு என்னை அழைத்து நடத்துவது இதுவே முதல்முறை. அதற்கு இந்த நேரத்தில் என்னுடைய நன்றியை நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

முதலமைச்சர் அவர்கள் நம்முடைய நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் அவர்களைப் பலமுறை பாராட்டி பேசி இருக்கிறார். அடிக்கடி சொல்வார், `எ.வ.வேலு என்றால் எதிலும் வல்லவர் வேலு’ என்று பெருமையாகக் குறிப்பிடுவார். அதைத் தொடர்ந்து நிரூபிக்கின்ற வகையில் இந்த நிகழ்ச்சியை இவ்வளவு சிறப்பாக ஏற்பாடு செய்து, இதிலும் வல்லவர் என்று நிருபித்திருக்கிறார் அண்ணன் வேலு அவர்கள்.

இன்றைக்குத் தொடங்கி வைக்கப்படுகின்ற இந்த இரண்டு சேவைகளும் மிக முக்கியமானவை. சட்டப்பேரவை மானியக் கோரிக்கையின் போது அண்ணன் வேலு அவர்களால் அறிவிக்கப்பட்டது. சொன்னதைச் செய்கின்ற அரசு என்பதற்கு உதாரணமாக, இந்த இரண்டு சேவைகளும் மானியக் கோரிக்கை மீதான விவாதத்தில் அறிவித்தபடி, இன்



சென்னை, கிண்டி, நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையத்தில், நேற்று (1.11.2023) சாலைகளில் ஏற்படும் இடர்பாடுகள் தொடர்பாக பொதுமக்கள் புகார் தெரிவிக்க ”நம்ம சாலை” என்ற புதிய செயலியை, பொதுப் பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள்துறை அமைச்சர் எ.வ.வேலு முன்னிலையில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப்யாதவ், தமிழ்நாடு சாலைமேம்பாட்டுத் திட்ட இயக்குநர் எஸ்.பிரபாகர், நெடுஞ்சாலைத்துறை கட்டுமானம் மற்றும் பராமரிப்பு தலைமைப் பொறியாளர் இரா.சந்திரசேகர், முதன்மை இயக்குநர் திருமதி ந.சாந்தி, சென்னை கன்னியாகுமரி தொழிற்தட திட்ட தலைமைப் பொறியாளர் எம்.கே.செல்வன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

றைக்கு நடைமுறைக்கு வந்திருக்கின்றது.

தொழில்நுட்பத்தின் உதவியுடன் சாலையின் தரத்தை பொறியாளர்களுடைய பணியை எப்படி மேம்படுத்த முடியும் என்ற யோசனைக்குப் பதிலாக, இந்த இரண்டு சேவைகளும் இன்று இங்கு உருவாக்கப்பட்டுள்ளன.

### இந்தியாவில் முதல் முறையாக அறிமுகம்!

இந்திய ஒன்றியத்திலேயே முதன் முறையாக உருவாக்கப்பட்டுள்ள நம்ம `சாலை அப்ளிகேஷனை பொறுத்தவரை, சாலையில் பயணிக்கிற பொழுது ஏதாவது பள்ளமோ அல்லது குழியோ இருந்தால், அதனைப் பொதுமக்களே அரசுக்கு தெரிவிக்கும் வகையில், இந்தச் செயலி இந்தியாவிலேயே முதன்முறையாக அறிமுகப் படுத்தப்பட்டுள்ளது.

பள்ளம், குழி மற்றும் முறையற்ற சாலைகளைப் புகைப்படம் எடுத்து, அந்த செயலில் பொதுமக்கள் அப்லோட் செய்தால், அது நேரடியாக அரசு அதிகாரிகளின் கவனத்திற்கு வரும். அந்தப் புகைப்படத்தின் அடிப்படையில், உடனே பழுதான சாலைகளை அவர்கள் சரிசெய்வார்கள்.

இந்த செயலியின் மூலம் தகவல் தெரிவித்தால், மாநில நெடுஞ்சாலைகள் உள்ள பள்ளங்கள் 24 மணி நேரத்திலும், மாவட்ட முக்கிய சாலையில் மற்றும் மாவட்ட இதர சாலைகளில், 72 மணி நேரத்திலும் அந்தச் சாலைகள் சரிசெய்து தரப்படும்.

சாலை சரிசெய்யப்பட்டதற்கான ஆதாரமாக சம்பந்தப்பட்ட புகைப்படம் இந்தச் செயலில் உடனே பதிவேற்றம் செய்யப்படும். எந்த ஒரு விஷயத்தையும் அரசு மட்டுமே தனித்துச் செயல்படுத்த முடியாது.

பொதுமக்களுடைய ஆதரவும் ஒத்துழைப்பும் இருந்தால்தான், எந்த ஒரு திட்டமும் சிறப்பாகச் செயல்படுத்த முடியும். அந்த வகையில்தான் இந்த `நம்ம சாலை’ செயலி உருவாக்கப்பட்டுள்ளது. இதனைத் தமிழ்நாட்டு மக்கள் சிறப்பாகப் பயன்படுத்திக் கொண்டு, நம்முடைய மாநிலத்தின் சாலைக் கட்டமைப்பை மேம்படுத்த, அரசுக்குத் துணை நிற்குமாறு இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கின்றேன்.

### நிரந்தர தொலைபேசி எண்!

அதுபோல நெடுஞ்சாலைத்துறை பொறியாளர்களுக்கு நெருக்கமான பயணர் குழு அதாவது போஸ்ட் யூசர் குரூப் CUG எனும் சேவையை இங்கு தொடங்கி வைக்கின்றோம். இந்த சேவை மூலம் நிரந்தர அலைபேசி எண்கள் பொறியாளர்களுக்கு வழங்கப்படுகின்றது. இது மிக மிக முக்கியமான ஒரு முன்னெடுப்பு. சாலை பராமரிப்பு நடவடிக்கைகள் சாலைப் பாதுகாப்புச் சாலையில் ஏற்படும் பழுதுகள், பேரிடர் காலங்கள் போன்றவை குறித்த தகவல் பரிமாற்றங்களுக்கு நெடுஞ்சாலைத்துறைக்குப் பொறியாளர்களைத் தொடர்பு கொள்வதற்கு நிரந்த தொலைபேசி எண் தேவைப்படுகின்றது. அந்தத் தேவையைப் பூர்த்திச் செய்யும்விதமாக இன்று இங்கு தொடங்கப்பட்டுள்ளது.

இந்த நிரந்தரத் தொலைபேசி எண் மூலமாக எந்த ஒரு அலுவலரையும் எளிதில் தொடர்பு கொள்ள முடியும். சாலைகளின் நிலையைத் தெரியப்படுத்தி, உடனுக்குடன் அவற்றைச் சரி செய்ய முடியும். இந்த இரண்டு சேவைகளையும் பொதுமக்களும் நெடுஞ்சாலைத்துறை அதிகாரிகளும் சிறப்பாகப் பயன்படுத்திக் கொள்ள நான் உங்களையெல்லாம் வாழ்த்துகின்றேன்.

இங்கு எங்களுக்கெல்லாம் நினைவுப் பரிசு வழங்கப்பட்டது. எனக்கு விளையாட்டு சம்பந்தமாக ஒரு நினைவு பரிசு வழங்கினார் நம்முடைய அமைச்சர் அவர்கள். அப்போது அவர் சொன்னார், விளையாட்டுத்துறை அமைச்சர் அதற்காக இந்த நினைவுப் பரிசு என்றார்.

அதேபோல் அவருக்கு ஒரு நினைவுப் பரிசு வழங்கப்பட்டது பட்டாம்பூச்சி சின்னங்கள் பொறிக்கப்பட்ட நினைவுப் பரிசு. அப்போது நான் சொன்னேன் நீங்கள் பட்டாம்பூச்சி போலப் பறந்து கொண்டிருக்கிறீர்கள் அதற்காகத்தான் உங்களுக்கு பட்டாம்பூச்சி நினைவுப் பரிசு என்று சொன்னேன்.

நம்முடைய அரசு செயலாளர் அவர்களுக்கு பேனா சின்னம் நினைவுப் பரிசாகக் கொடுக்கப்பட்டது. நான் அப்போது அமைச்சரிடம் கேட்டேன், எதற்கு பேனா சின்னம் என்று கேட்டேன். உடனே அவர் பதில் சொன்னார், எந்த ஃபைல் கொடுத்தாலும், உடனே கையெழுத்து போட்டுச் சீக்கிரம் அனுப்பிவிடுவார் அதனால்தான் அவருக்கு பேனா சின்னம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னார்.

எனவே, இந்தச் சிறப்பு வாய்ந்த நெடுஞ்சாலைத்துறை நிகழ்ச்சி இவ்வளவு சீரும் சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. உங்கள் அத்தனை பேருக்கும் மீண்டும் என்னுடைய வாழ்த்துக்களை நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

விபத்தில்லா தமிழ்நாடு எனும் நம்முடைய முதலமைச்சருடைய கனவை நனவாக்கவும், சாலை கட்டமைப்பை மேம்படுத்தவும், நம்முடைய சாலை செயலியை நெடுஞ்சாலைத்துறைப் பொறியாளர்களுக்கான சி.யு.ஜி சேவையும் வெற்றி பெறட்டும்.

இவ்வாறு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

---

## அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர் காமராஜ் ரூ.350 கோடி முறைகேடு!

### அறிக்கை தாக்கல் செய்ய லஞ்ச ஒழிப்புத் துறைக்கு சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவு!

சென்னை, நவ. 2 -

அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர் காமராஜ் மீதான 350 கோடி ரூபாய் முறைகேடு புகாரில் விரிவான அறிக்கை தாக்கல் செய்ய லஞ்ச ஒழிப்புத் துறைக்கு சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

முந்தைய அ.தி.மு.க. ஆட்சிக்காலத்தில் உணவுத்துறை அமைச்சராக பதவி வகித்த காமராஜ் தனது அதிகாரத்தை தவறுதலாக பயன்படுத்தி, விநியோகத் திட்டத்தின் கீழ் பொது மக்களுக்கு வழங்குவதற்காக பருப்பு, எண்ணெய் போன்ற அத்தியாவசியப் பொருட்கள் கொள்முதல் செய்ததில் 350 கோடி ரூபாய் அளவுக்கு முறைகேடு செய்துள்ளதாக புகார் கூறப்பட்டது.

அதன் அடிப்படையில் உரிய நடவடிக்கை எடுக்க லஞ்ச ஒழிப்பு துறைக்கு உத்தரவிட வேண்டும் என முன்னாள் முதலமைச்சர் பன்னீர்செல்வம் அணியைச் சேர்ந்த புகழேந்தி என்பவர் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்திருந்தார்.

இந்த வழக்கு நீதிபதி ஜெகதீஷ் சந்திரா முன் விசாரணைக்கு வந்த போது, மனுதாரருடன் சேர்த்து மூன்று பேர் இதே புகாரை தெரிவித்துள்ளதாகவும், அந்த புகார்கள் தொடர்பாக ஆரம்ப கட்ட விசாரணை நடத்தி தற்போது விரிவான விசாரணை துவங்கி உள்ளதாகவும் லஞ்ச ஒழிப்புத்துறை சார்பில் விளக்கம் அளிக்கப்பட்டது.

அதிகாரிகளிடம் விசாரணை நடத்த வேண்டி உள்ளது என்றும், 31 டெண்டர் ஆவணங்களை ஆய்வு செய்து உண்மையான இழப்பை கண்டறிய வேண்டி உள்ளதாகவும் லஞ்ச ஒழிப்புத்துறை தரப்பில் தெரிவிக்கப்பட்டது. இதையடுத்து, மனுதாரர் அளித்த புகாரின் மீது எடுத்த நடவடிக்கைகள் குறித்து விரிவான அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும் என லஞ்ச ஒழிப்புத் துறைக்கு உத்தரவிட்ட நீதிபதி, மனு மீதான விசாரணையை நவம்பர் 15 ஆம் தேதிக்கு ஒத்திவைத்தார்.


---

## எதிர்க்கட்சிகளின் தலைவர்களை குறிவைக்கும் அமலாக்கத்துறை!

### மூத்த வழக்கறிஞர் கபில் சிபல் குற்றச்சாட்டு!

புதுடெல்லி, நவ. 2 -

கபில் சிபல் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், டெல்லி முதலமைச்சர் கெஜ்ரிவாலுக்கு, அமலாக்கத்துறை சம்மன் அனுப்பியுள்ளதாகவும், ஏறக்குறைய எதிர்க்கட்சிகளில் உள்ள அனைத்து



அரசியல் கட்சிகளின் தலைவர்களையும் அமலாக்கத்துறை குறிவைப்பதாகவும் கபில் சிபல் தெரிவித்துள்ளார்.

தலைவர்களுக்கு ஜாமின் மறுப்பு என்பது அரசாங்கத்தின் கைகளில் அரசியல் ஆயுதமாக மாறியுள்ளது என்று குற்றம்சாட்டியுள்ள கபில்சிபல், பண மோசடி தடுப்புச்சட்டத்தை ஒன்றிய அரசு அப்பட்டமாக தவறாக பயன்படுத்தும் விவகாரத்தில் நீதிமன்றங்கள் விழித்துக்கொள்ள வேண்டிய நேரம் வந்து விட்டதாக கபில் சிபல் எச்சரித்துள்ளார்.

---

நீலகிரி மாவட்டத்தில் உள்ள கழகத்தினர்

## வாக்காளர் பட்டியலை சரிபார்க்கும் பணியில் முனைப்புடன் ஈடுபடுவீர்!

### மாவட்டச் செயலாளர் பா.மு.முபாரக் வேண்டுகோள்!

உதகை, நவ.2-

1.1.2024ஐ தகுதியேற்படுத்திடும் நாளாகக்கொண்டு வாக்காளர் பட்டியலில் 9.12.2023 சனிக்கிழமை வரை திருத்தங்கள் மேற்கொள்ள தேர்தல் ஆணையம் வரைவு வாக்காளர் பட்டியலை 27.10.2023 அன்று வெளியிட்டுள்ளது.

நீலகிரி மாவட்டத்தில் உள்ள உதகை, கூடலூர், குன்னூர் ஆகிய சட்டமன்ற தொகுதிகளுக்கான வாக்காளர் பட்டியலை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலிருந்து நீலகிரி மாவட்ட கழக அலுவலகத்திற்கு வழங்கியுள்ளனர். அதனை அனைத்து நகரஒன்றிய கழக செயலாளர்களுக்கும் நகரஒன்றிய கழகங்கள் வாரியாகப் பிரித்து வழங்கப்பட்டு உள்ளது.

வாக்காளர் பட்டியலைப் பெற்றுக்கொண்ட நகரஒன்றியபேரூர் கழக செயலாளர்கள் உடனடியாக தங்களது பகுதிகளுக்கு உட்பட்ட வாக்குச்சாவடி பாகம் வாரியாக அந்தந்த வார்டுகிளைக் கழக செயலாளர்களிடம் ஒப்படைத்தும், விரைந்து செயலாற்றிட அன்புடன் வேண்டுகிறேன்.

வாக்காளர் பட்டியலை சரிபார்க்கும் பணியில் கழக நிர்வாகிகள் அனைவரும் ஒன்றிணைந்து எவ்வித சுணக்கமுமின்றி முனைப்புடன் ஈடுபட வேண்டும் என்று தலைமை கழகத்தின் மூலம் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

கழகத் தலைவர் முதல்வர் அவர்கள் விடுத்துள்ள அன்புக் கட்டளையை ஏற்று நீலகிரி மாவட்டத்தில் உள்ள கழகத்தினர் அனைவரும் வாக்காளர் பட்டியலை சரிபார்க்கும் இன்றியமையாப் பணியில் விரைந்து ஈடுபட வேண்டும்.

புதிய வாக்காளர்களை சேர்க்க, நீக்க, திருத்தம் மேற்கொள்ள தேர்தல் ஆணையம் எதிர்வரும் நவம்பர் 4,5 (சனி,ஞாயிறு) மற்றும் நவம்பர் 18,19 (சனி,ஞாயிறு) ஆகிய நாட்களில் அந்தந்த வாக்குசாவடிகளில் சிறப்பு முகாம்கள் நடைபெறும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த சிறப்பு முகாம்களில் அனைத்து பாக நிலை முகவர்கள் BLA2 அனைவரும் தவறாது கலந்துக்காள்ள கேட்டுக்கொள்வதோடு,

புதிய வாக்காளர் சேர்ப்பின்போது (17வயது நடப்பிலுள்ளவர்களும்) படிவம்6 பூர்த்தி செய்து உரிய ஆதாரங்களை இணைத்து வழங்கிட வேண்டும்.

இறந்த அல்லது இடம்



பெயர்ந்த வாக்காளர்கள் நீக்காமல் தொடர்ந்து இடம் பெற்றிருந்தால் உரிய ஆதாரங்களை இணைத்து படிவம்7ல் பூர்த்தி செய்து வாக்காளர் இறந்திருந்தால் இறப்புச் சான்றிதழை அந்தந்த குடும்பத்தினரிடம் இருந்து பெற்று அவர்களது ஒப்புதல் கடிதத்தை இணைத்து வழங்கிட வேண்டும்.

மேலும் வெளியிடப்பட்டுள்ள வாக்காளர் பட்டியலில் பிழை, திருத்தங்கள், முகவரி மாற்றம் ஏதாவது இருந்தால் படிவம்8, படிவம்8ஏ ஆகிய படிவங்களை பூர்த்திசெய்து வழங்கிட வேண்டும்.

வாக்காளர் பட்டியலை சரி பார்த்த பின்பு பூர்த்தி செய்துள்ள படிவம்6, படிவம்7, படிவம்8, படிவம்8ஏ ஆகிய படிவங்களுடன் உரிய சான்றிதழ் ஆதாரங்களை அந்தந்த வாக்குசாவடி நிலை அலுவலரிடம் சிறப்புமுகாம்கள் நடைபெறும் நாட்களில் கழகத்தினர் வழங்கிட வேண்டும் என்றும் வேண்டுவதோடு,

மேற்கண்ட நாட்களில் நடைபெறும் சிறப்பு முகாம்களில் தொடர்புடைய நகர - ஒன்றிய - பேரூர் கழக செயலாளர்கள் - நிர்வாகிகள் மற்றும் அனைத்து கிளை கழக செயலாளர்கள் உள்ளிட்ட அனைவரும் நம் கழக ஆதரவு புதிய வாக்காளர்களை சேர்க்கும் இப்பணியில் தங்களை முழுமையாக ஈடுபடுத்திக்கொண்டு வாக்காளர் பட்டியல் சரிபார்ப்பு பணியில் முனைப்புடன் செயலாற்றிட அன்புடன் வேண்டுகிறேன்.

நீலகிரி மாவட்டத்தில் நவம்பர் 4,5 மற்றும் 18,19 ஆகிய நாட்களில் நடைபெறும் சிறப்பு முகாம்களில் வாக்காளர் சரிபார்த்தல் பணிகள் அனைத்தும் சிறப்புடன் நடைபெற தேவையான அனைத்து ஏற்பாடுகளை தொடர்புடைய நகர - ஒன்றிய - பேரூர் - கிளை கழக நிர்வாகிகள் சிறப்புடன் செய்திட வேண்டுகிறேன்.

இவ்வாறு மாவட்டக் கழகச் செயலாளர் பா.முபாரக் விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

---



விருதுநகர் மாவட்டம், இராஜபாளையத்தில் மாவட்ட நிர்வாகம், தொல்லியல் துறை, சுற்றுலாத்துறை, பாண்டிய நாட்டு வரலாற்று ஆய்வு மையம் மற்றும் இராஜபாளையம், இராஜீக்கள் கல்லூரி ( முதுகலை மற்றும் வரலாற்று ஆய்வு மையம் ) இணைந்து “வைப்பாற்றங்கரையின் வரலாற்றுத் தடம்” என்ற தலைப்பில் நடைபெற்ற, மாநில அளவிலான தொல்லியல் மற்றும் வரலாற்றுக் கருத்தரங்கம் மற்றும் தொல்லியல் கண்காட்சியினை மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர் வீ.ப.ஜெயசீலன் தலைமையில், தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் தனுஷ் எம்.குமார், இராஜபாளையம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.தங்கபாண்டியன் மற்றும் சிவகாசி மாநகராட்சி மேயர் சங்கீதா இன்பம் ஆகியோர் முன்னிலையில், நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு துவக்கி வைத்து, தொல்லியல் கண்காட்சியில் வைக்கப்பட்டிருந்த தொல்பொருட்களை பார்வையிட்டார்.



குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், நேற்று (01.11.2023) சென்னை, அண்ணா பல்கலைக்கழகத்தில், தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனத்தின் சார்பில் (EDII) நடைபெற்ற விழாவில், பள்ளி மற்றும் உயர்கல்வி மாணவர்களின் 55 புதிய கண்டுபிடிப்புக்களுக்கு ரூபாய் 32 லட்சத்து 50 ஆயிரம் நிதி உதவிக்கான காசோலைகளை மாணவ, மாணவிகளிடம் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் அமைச்சர் மா.சுப்பிரமணியன், நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி தமிழச்சி தங்கப்பாண்டியன், EDII இயக்குநர் செ.உமாசங்கர், சிட்கோ மேலாண்மை இயக்குநர் திருமதி எஸ்.மதுமதி, தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி ஜெ.இன்னசன்ட் திவ்யா, தொழில் ஆணையர் இல.நிர்மல்ராஜ், அண்ணா பல்கலைக்கழக துணை வேந்தர் டாக்டர் ஆர் வேல்ராஜ், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ப்பு திட்ட இயக்குநர் முனைவர் ஜெ.யு.சந்திரகலா ஆகியோர் கலந்துகொண்டனர்.



இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேற்று (01.11.2023) நாமக்கல் மாவட்டம், நாமக்கல், ஆஞ்சநேயர் சுவாமி திருக்கோயிலில் தல விருட்சக் கன்றினை நட்டு வைத்தார். உடன் மாநிலங்களவை உறுப்பினர் கே.ஆர்.என்.இராஜேஸ்குமார், சட்டமன்ற உறுப்பினர் பெ.ராமலிங்கம், மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் ச. உமா, மண்டல இணை ஆணையர் எ.டி.பரஞ்ஜோதி மற்றும் அலுவலர்கள் உள்ளனர்.

### 1000 மாணவர் மற்றும் இளைஞர்களுக்கு

# தொழில் முனைவோர் மேம்பாடு - புத்தாக்க பட்டயப் படிப்பு விரைவில் துவங்கப்படும்!

## அமைச்சர் தா.மோ.அன்பரசன் தகவல்!

சென்னை, நவ. 2 -

தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனத்தின் சார்பில் சென்னை அண்ணா பல்கலைக்கழகத்தில் மாணவர்களின் புதிய கண்டுப்பிடிப்புகளுக்கு பரிசுகள் வழங்கும் விழா நடைபெற்றது. விழாவில் புத்தாக்க தொழில் முனைவோர் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் 25 மாணவ குழுக்களுக்கும், பள்ளி புத்தாக்க மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 30 மாணவக் குழுக் களுக்கும் என 55புதிய கண்டுபிடிப்புக்களுக்கு ரூ.32லட்சத்து 50ஆயிரம் நிதி உதவி அமைச்சர் தா.மோ.அன்பரசனால் வழங்கப்பட்டது.

இதில் அமைச்சர் தா. மோ.அன்பரசன் பேசியதாவது:

“இன்று இந்த விழாவில், புத்தாக்க தொழில் முனைவோர் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் 25 மாணவ குழுக்களுக்கும், பள்ளி புத்தாக்க மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 30மாணவக் குழுக்களுக்கும் என 55 புதிய கண்டுபிடிப்புக்களுக்கு ரூ. 32 லட்சத்து 50 ஆயிரம் நிதி உதவி வழங்குவதில் பெரும் மகிழ்ச்சி அடைகிறேன். இந்த பரிசுகளை பெறும் மாணவர்கள் இளைஞர்களுக்கு என் பாராட்டுகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன். வேக, வேகமாக முன்னேறி கொண்டிருக்கும் இன்றைய விஞ்ஞான உலகில் பயோ டெக்னாலேஜி. நானோ டெக்னாலேஜி, ரோபோடிக்ஸ் ஏ.ஐ எனப்படும் செயற்கை நுண்ணறிவு போன்ற துறைகள் உருவாகினாலும், நாம் மற்ற உலக நாடுகளுடன் போட்டி போடுவதற்கு புதிய புதிய கண்டுப்பிடிப்புகள் அவசியம் அத்தகைய புதிய கண்டுபிடிப்புகளை உருவாக்கிட தமிழ் நாட்டில் உள்ள புத்தாக்க சிந்தனை கொண்ட இளைஞர்களை கண்டறிந்து அவர்களை ஊக்கப் படுத்திட தமிழக முதல்வர் அவர்கள் பல்வேறு புதிய திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறார்.

புத்தாக்கச் சிந்தனைக் கொண்ட நம் இளைஞர்களையும், மாணவர்களையும் ஊக்கப்படுத்திட EDII நிறுவனம் மூலம் பல்வேறு பயிற்சிகள் அளிக்கப்படுகிறது. தொழில் முனைவோர் மேம்பாட்டு திட்டத்தின் கீழ்26ஆயிரத்து 410 இளைஞர்களுக்கும், ஊரக வளர்ச்சி, தகவல் தொழில்நுட்பம், தாட்கோ, மாவட்ட தொழில் மையம் போன்ற அரசு துறைகளுடன் இணைந்து 13ஆயிரத்து 764 இளைஞர்களுக்கும், புத்தாக்க தொழில் முனைவோர் மேம்பாட்டு திட்டத்தின் கீழ்3 லட்சத்து 5ஆயிரத்து 669 கல்லூரி மாணவர்களுக்கும், 97 அரசு மற்றும் தனியார் கல்லூரிகளில் உள்ள Incubation Centresமூலம் 74 ஆயிரத்து 969 மாணவர்களுக்கும் பள்ளி புத்தாக்க மேம்பாட்டு திட்டத்தின் கீழ் 4 லட்சத்து 78ஆயிரம் பள்ளி மாணவர்களுக்கும் என ஆட்சி பொறுப்பேற்று, இது வரை 8லட்சத்து 98 ஆயிரத்து 812 இளைஞர்கள் மற்றும் மாணவர்களுக்கு தொழில் முனைவோர் பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளது என்பதை பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

படித்த இளைஞர்கள், கல்வி பயிலும் மாணவர்கள் தங்களின் புதிய கண்டுபிடிப்புகளுக்கான ஆராய்ச்சி வடிவமைப்புகளுக்கும் அவற்றை தயாரித்து சந்தைப்படுத்தவும் புத்தாக்க பற்று சீட்டு திட்டத்தின் கீழ் ரூ.2 லட்சம் முதல் ரூ.5 லட்சம் வரை நிதி உதவி வழங்கப்படுகிறது. கடந்த 2 ஆண்டுகளில், இத்திட்டத்தின் கீழ், 266 புதிய கண்டுப்பிடிப்பாளர்களுக்கு ரூ. 7 கோடியே 39 லட்சம் நிதிஉதவி வழங்கப்பட்டுள்ளது.மேலும், 101 அரசு மற்றும் தனியார் கல்லூரிகளில் தொழில் வளர் காப்பகங்கள் -Incubation Centres அமைக்கப்பட்டு உள்ளது. இதில் 29 இன்குபேஷன் சென்ட்டர் களில் ரூ.19 கோடியே 84 லட்சம் மதிப்பீட்டில்,புதிய இயந்திரங்கள் பரிசோதனை கூடங்கள் நிறுவப் பட்டு மேம்படுத்தப்பட்டு உள்ளன. அரசின் தொழில் வளர் காப்பகங்களை பயன்படுத்தி 89 மாணவர்கள் மற்றும் தொழில்முனைவோர்கள் புதிய கண்டுபிடிப்பு களை தயாரித்து பலன் அடைந் துள்ளனர். கல்லூரி மாணவர்கள் தங்கள் மாணவ பருவத்திலேயே புதிய தொழிலை தொடங்கும் வழி முறைகளை தெரிந்து கொள்ள, தமிழகத்தில் உள்ள 1545 கல்லூரிகளில் பயிலும் மாணவர்கள் பயன் பெறும் வகையில் 31 இடங்களில் தொழில்முனைவோர் மையங்கள் Hubs அமைக்கப்பட்டு தொழில் துவங்க உதவிகளும் ஆலோச ணைகளும் வழங்கப்படுகிறது. இதிலிருந்து 50 மாணவர்களுக்கு ரூ.50 லட்சம் நிதியுதவி வழங்கப்பட்டு உள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாணவர்களிடம் புத்தாக்க சிந்தனையை உருவாக்கிட முதல்வர் அவர்கள் கடந்த ஆண்டு ரூ.1 கோடி மதிப்பில் “பள்ளி புத்தாக்க மேம்பாட்டு திட்டத்தினை” அறிவித்துள்ளார். இதன்படி, 4,343 அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில், 9 முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்கள் தொழில்முனைவோர்களாக மாற விழிப் புணர்வும், ஆலோசனையும் அளிக்கப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் மூலம் 40 மாணவ குழுக்களின் சிறந்த புதிய கண்டுபிடிப்புகளுக்கு தலா ரூ.25ஆயிரம் முதல் ரூ.1லட்சம் வரை ரொக்க பரிசும், பாராட்டு சான்றிதழும் வழங்கப்படுகிறது.கடந்த ஜீன் மாதம் நடைபெற்ற MSME தின விழாவில் முதல்வர் அவர்களின் திருக்கரங்களால் மாநில அளவில் வெற்றி பெற்ற 10 சிறந்த மாணவ குழுக்களுக்கு தலா ரூ.1 லட்சம் வீதம் ரூ.10லட்சம் நிதியுதவி வழங்கப்பட்டது. 1,000 இளைஞர்களுக்கு சுழற்சி முறையில் தொழில்முனைவோர் மற்றும் புத்தாக்க பட்டய படிப்பு வகுப்புகள் நடத்தப்பட உள்ளன.இதற்காக, 320 இளைஞர்களுக்கு பயிற்சி அளிக்கும் வகையில் கிண்டி, EDII பயிற்சி நிலையம் ரூ.4கோடியே 41 லட்சம் மதிப்பில் புனரமைக்கப்பட்டு வருகிறது. மேலும், 260 இளைஞர்களுக்கு பயிற்சி அளிக்கும் வகையில், EDII தலைமையிடத்தில் 10,260 சதுர அடியில் ரூ.1 கோடியே 72லட்சம் மதிப்பில் ஒரு பயிற்சி நிலையமும் அமைக்கப்பட்டு வருகிறது. இப்பணிகள் விரைவில் முடிக்கப்பட்டு, வகுப்பு கள் தொடங்கப்படும் என தெரிவித்துக் கொள்கிறேன்.

புதிய கண்டுபிடிப்புகளை வர்த்தக ரீதியாக சந்தைப்படுத்த StartUp TN மூலம் இதுவரை SC/ST ஸ்டார்ட் அப் நிறுவனங்கள் உட்பட 153 ஸ்டார்ட் அப் நிறுவனங்களுக்கு ரூ.41 கோடியே 96லட்சம், பங்குகளாக முதலீடாக வழங்கப்பட்டுள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். புதிய கண்டுபிடிப்பாளர்களை ஸ்டார்ட் அப் நிறுவனங்களாகவும், ஸ்டார்ட் அப் நிறுவனங்களை MSME நிறுவனங்களாக வளர்த்தெடுக்க, MSME துறையில் 3வகையான சுயதொழில் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஆட்சி பொறுப்பேற்று, இதுவரை ரூ. 892கோடியே 94லட்சம் மானியத்துடன் ரூ.3 ஆயிரத்து 312 கோடியே 16 லட்சம் வங்கி கடனுதவி வழங்கப்பட்டு26 ஆயிரத்து 121 படித்த இளைஞர்கள் புதிய தொழில் முனைவோர்களாக உருவாக்கப்பட்டுள்ளனர் என்பதை பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்று இந்த கண்காட்சியில் நம் மாணவர்களின் புதிய கண்டுப்பிடிப்புக்களான Self chargeable வாகனங்கள் கழிவு நீர் குழாய் அடைப்புகளை நீக்கும் கருவிகள் பூக்களின் கழிவுகளிலிருந்து உரங்கள் விவசாயி களுக்கு உதவும்சூரிய சக்தி குளிர் பதன வாகனம் கடற்பாசியில் அழகு சாதனங்கள் மாற்றுத்திறனாளிகளுக்கு உதவும் செயற்கை உறுப்புகள் என பல்வேறு கண்டு பிடிப்புகள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. 2G, 3G, 5Gஎன உலகம் வேகமாக முன்னேறி கொண்டிருக்கும் காலத்தில் நம் மாணவர்களும் புதிய தொழில்நுட்பங்களை அறிந்து மக்களின் தேவையினை புரிந்து தரமான பொருட்களை குறைந்த விலையில் தயாரிக்கும் வகையில் தங்களது கண்டுப்பிடிப்புகளை உருவாக்கிட வேண்டும். அதற்காக தொடர்ந்து நீங்கள் அயராமல் உழைக்க வேண்டும். அதற்கான ஆலோசனைகள் பயிற்சிகள் நிதி உதவிகள் வழங்க அரசு தயாராக உள்ளது. ஆகவே மாணவர்கள் இளைஞர்கள் புதிய கண்டுபிடிப்புகளை உருவாக்கி தமிழகத்தின் தொழில் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்து தமிழகத்தை முன்னேற்ற பாதைக்கு அழைத்து செல்லுங்கள் என்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் தா. மோ.அன்பரசன் கூறினார்.

இந்நிகழ்ச்சிக்கு முன்பாக பரிசு பெற்ற புத்தாக்க கண்டுப்பிடிப்புகளின் கண்காட்சி நடை பெற்றது. அதனை அமைச்சர் மா. சுப்பிரமணியன் துவக்கி வைத்து அமைச்சர் பெருமக்கள் மாணவர்களுடன் கலந்துரையாடினார். நிகழ்சியில், கூடுதல் தலைமைச் செயலாளர் / EDII இயக்குநர் செ.உமாசங்கர், தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநர் இல. நிர்மல்ராஜ், தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி., அண்ணா பல்கலைக்கழக துணை வேந்தர் Dr. ஆர் வேல்ராஜ் முன்னாள் EDII இயக்குநரும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ப்பு திட்ட இயக்குநர் முனைவர் ஜெ.யு.சந்திரகலா கூடுதல் இயக்குநர் முத்துராமன் மற்றும் பல்வேறு பள்ளி மாணவர்கள், இளைஞர்கள் கலந்துக் கொண்டனர்.

### 28 மாத ஆட்சிக் காலத்தில்

# 8,006 திருக்கோயில்களுக்கு திருப்பணிகள் மேற்கொள்ள அனுமதி!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு தகவல்!

நாமக்கல், நவ.2-

முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு நேற்று (01.11.2023) குடமுழுக்கு நடைபெற்ற நாமக்கல் மாவட்டம், நாமக்கல், நரசிம்மசுவாமி திருக்கோயிலின் உபகோயிலான ஆஞ்சநேயர் சுவாமி திருக்கோயிலுக்கு வருகை தந்து, திருக்கோயிலின் தல விருட்சக் கன்றினை நட்டு வைத்தார்.

பின்னர், அமைச்சர் பி.கே. சேகர்பாபு செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

நாமக்கல், நரசிம்மசுவாமி திருக்கோயிலின் உபகோயிலான ஆஞ்சநேயர் சுவாமி திருக்கோயிலுக்கு 14 ஆண்டுகளுக்குப் பிறகு குடமுழுக்கு நடைபெற்றுள்ளது. இத்திருக்கோயிலில் ரூ.67.75 இலட்சம் செலவில் 7 திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்த குடமுழுக்கு விழாவில் 50 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டதோடு, தொடர்ந்து பக்தர்கள் ஆஞ்சநேயரை தரிசித்த வண்ணம் உள்ளனர். திராவிட முன்னேற்ற கழக அரசு பொறுப்பேற்றபின் முதலமைச்சர் அவர்களின் நல் வழிகாட்டுதலின்படி இன்றுவரை 1,131 திருக்கோயில்களுக்கு குடமுழுக்கு நடைபெற்றுள்ளது. அதேபோல் ரூ.5,496 கோடி மதிப்பிலான 5,855 ஏக்கர் நிலங்கள் ஆக்கிரமிப்பிலிருந்து மீட்கப்பட்டுள்ளன. கடந்த காலங்களில் ஆண்டிற்கு சுமார் 50 திருக் கோயில்களுக்கு திருப்பணி மேற்கொள்ள அனுமதி வழங்கப்படுவதே கடினமாக இருந்த நிலையை மாற்றி இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு 28 மாத ஆட்சி காலத்தில் 8,006 திருக்கோயில் களுக்கு இது வரையில் மாநில வல்லுநர் குழுவால் திருப்பணி மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இது இந்து சமய அறநிலையத்துறை வரலாற்றிலேயே இல்லாத அளவிற்கு ஒரு மிகப்பெரிய சாதனையாகும்.

இத்திருக்கோயில் திருப்பணிகளில் திமுகவை சேர்ந்த மக்கள் பிரதிநிதி கள் தங்களை முழுமையாக ஈடுபடுத்தி, துறை அலுவலர்களோடு ஒருங்கிணைந்து செயல்பட்டதால் திருப்பணிகள் வேக மாகவும், நேர்த்தியாகவும் எவ்வித தவறுக்கும் இடம்கொடாமல் நடைபெற்றுள்ளன. மாவட்ட நிர்வாகமும், காவல் துறையும் குடமுழுக்கு விழாவில் எவ்வித இடர்பாடுகளும் ஏற்படாமல் அனைவரும் சுவாமி தரிசனம் செய்வதற்கு நல்ல சூழ்நிலையை உருவாக்கி தந்துள்ளார்கள்.

ஈரோடு மண்டலத்தை பொறுத்தளவில் ரூ.69.09 கோடி மதிப்பீட்டில் 345 திருப்பணிகள் நடைபெற்று வருகின்றன. ஒவ்வொரு திருக்கோயிலு க்கும் தல மரங்கள் இருக்கின்றன. நாமக்கல், ஆஞ்சநேயர் திருக்கோயிலின் தல விருட்சம் பலா மரமாகும். இன்றைய தினம் இத்திருக்கோயிலில் தல விருட்சமான பலா மரக் கன்றினை நட்டு வைத்துள்ளோம். முதலமைச்சர் அவர்கள் பொறுப் பேற்றவுடன் 2021 ஆம் ஆண்டில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு ஒரு லட்சம் தல மரக்கன்றுகள் நடும் திட்டத்தினை தொடங்கி வைக்கும் வகையில் இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் அலுவலக வளாகத்தில் முதல் தல மரக்கன்றினை நட்டார்கள். அதனைத் தொடர்ந்து மாநிலம் முழுவதும் உள்ள திருக்கோயில்களில் இது வரை ஒரு லட்சம் மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளன. இப்படி எந்த திட்டத்தை எடுத்துக் கொண்டாலும் அதில் சாதனை புரியும் வரலாற்றினை இந்து சமய அறநிலைத்துறை படைத்து கொண்டிருக்கிறது என்றால் அதற்கு ஆக்கமும், ஊக்கமும் அளித்து வருகின்ற முதலமைச்சர் அவர்களே முழு முதற்காரணமாகும்.

முதலமைச்சர் அவர்கள் ஒருகால பூஜை திட்டம் செயல்படுத்தப்பட்டிருந்த 13 ஆயிரம் திருக்கோயில் களுக்கான வைப்பு நிதி ரூ.1 லட்சத்தை ரூ.2 லட்சமாக உயர்த்தி வழங்கியதோடு, கடந்தாண்டு மேலும், 2,000 திருக்கோயில் களில் ஒருகால பூஜை நடைபெற ரூ.40 கோடி அரசு மானியம் வழங்கினார்கள். இன்றைய தினம் கூட ஒருகால பூஜை திட்டத்தினை விரிவுபடுத்தும் வகையில் 2,000 திருக்கோயில்களுக்கு வைப்பு நிதியாக ரூ.40 கோடிக்கான காசோலையை வழங்கினார்கள். ஒட்டுமொத்தமாக 17 ஆயிரம் திருக்கோயில்களில் ஒரு வேளை யாவது பூஜை நடைபெற வேண்டும் என்பதற்காக நிதியுதவி வழங்கி விளக்கேற்றியவர் நமது முதலமைச்சர் அவர்கள். அதே போல அந்த திருக்கோயில்களின் அர்ச்சகர்களுக்கு எவ்வித பணி உத்தரவாதமும் இல்லாத நிலையில் மாதந்தோறும் ரூ.1,000 ஊக்கத் தொகையாக வழங்கி அவர்களின் வாழ்வாதாரத்தை பாதுகாத்துள்ளார்.

கிராமப்புற திருக்கோயில்கள் மற்றும் ஆதிதிராவிடர்கள் பழங்குடியினர் வசிக்கின்ற பகுதியில் இருக்கின்ற திருக்கோயில் களுக்கு திருப்பணிகள் மேற்கொள்ள வழங்கப்பட்டு வந்த நிதியுதவி ரூ.2 லட்சமாக உயர்த்தப்பட்டு இதுவரை 2,500 கிராமப் புற திருக்கோயில்களுக்கும் 2,500 ஆதிதிராவிடர்கள் பழங்குடியினர் வசிக்கின்ற பகுதியிலே இருக்கின்ற திருக்கோயில்களுக்கு தலா ரூ.2 லட்சம் வீதம் ரூ. 100 கோடி நிதியுதவியாக வழங்கப்பட்டுள்ளது. இந்த திருக்கோயில்களையும் சேர்த்து ஐந்தாண்டு கால ஆட்சி முடிவில் கணக்கிட்டால் 25 ஆயிரத்திற்கும் மேற்பட்ட திருக்கோயில் களில் குடமுழுக்கு நடந்தேறி இருக்கும். இது இந்து சமய அறநிலையத்துறையின் வரலாற்றில் ஒரு மிகப்பெரிய புரட்சியாக அமையும்.

இவ்வாறு அமைச்சர் பி. கே.சேகர்பாபு தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் மாநிலங்களவை உறுப்பினர் கே. ஆர்.என்.இராஜேஸ்குமார், நாமக்கல் சட்டமன்ற உறுப்பினர் பெ.ராமலிங் கம், நாமக்கல் மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் ச.உமா, மண்டல இணை ஆணையர் எ.டி.பரஞ்ஜோதி, மாவட்ட அறங்காவலர் குழுத் தலைவர் ரங்கசாமி, திருக்கோயில் அறங்காவலர் குழுத் தலைவர் நல்லுசாமி மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### பண்டிகையை முன்னிட்டு நவம்பர் 5ஆம் தேதிக்குள் 35,941 நியாய விலைக் கடைகளிலும்

# அரிசி உட்பட இதர பொது விநியோகத் திட்ட பொருட்கள் இருப்பு வைத்திட வேண்டும்!

## ஆய்வுக் கூட்டத்தில் அமைச்சர் அர.சக்கரபாணி அறிவுரை!

சென்னை, நவ.2-

முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க 31.10.2023 அன்று உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணி மற்றும் கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் கே.கோபால் தலைமையிலான துறை அலுவலர்களின் ஆய்வுக் கூட்டம் தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது.


ஆய்வுக் கூட்டத்தின் தொடக்கத்தில் அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் அனைவரையும் வரவேற்று பேசினார்கள். தொடர்ந்து தலைமையுரையாற்றிய அமைச்சர், வரும் தீபாவளி பண்டிகையை முன்னிட்டு அரிசி உட்பட அனைத்து பொது விநியோகத் திட்ட பொருட்களும் குடும்ப அட்டைதாரர்களுக்கு உரிய நேரத்தில் கிடைத்திட ஏதுவாக தீபாவளி வரை அனைத்து நாட்களிலும் நியாய விலைக்கடைகள் திறக்கப் பட்டு பொருட்கள் விநியோகம் செய்வது உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்றும் இதற்கான நகர்வு பணிகள் அனைத்தும் நவம்பர் 5ம் தேதிக்குள் முடிக்கப்பட வேண்டும் என்றும் அறிவுரை வழங்கினார்கள். அதனைத் தொடர்ந்து தற்போது வடகிழக்கு பருவ மழைக்காலம் தொடங்கி உள்ளதால் பொருட்கள் இருப்பு வைக்க பயன்படுத்தக் கூடிய அனைத்து சேமிப்புக் கிடங்குகளிலும் மழை நீர் கசிவு ஆகியவற்றால் பொருட்கள் சேதமாவது முற்றிலும் தவிர்க்கப்படுதல் வேண்டும் என்றும் வலியுறுத்தினார்கள். கொள்முதல் செய்யப்படும் நெல்லும் மழையினால் நனைந்து சேதமடையாமல் இருக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் தெரிவித்தார்கள்.

கூடுதல் தலைமைச் செயலாளர் துறைவாரி யான ஆய்வின்பொழுது, உணவுப் பொருள் வழங்கல் துறை, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக அலுவலர்கள் ஆகியோர் ஒருங்கிணைந்து செயலாற்றி, சேமிப்பு கிடங்கு கட்டுமான பணிகளில் ஒப்பந்தப் புள்ளி முடிவு செய்யப்பட்ட இனங்களின் பணிகள் துரிதப்படுத்தப் படுதல் வேண்டும் என்றும் மலைப் பிரதேசங்களில் பயன்பாட்டி லுள்ள நியாய விலைக் கடைகள் வன விலங்குகள் மூலம் தாக்கப்படுவதை தடுக்க முன் கதவுகளுக்கு இரட்டை அடுக்கு பாதுகாப்பு அமைத்திட பரிசீலித்திட வேண்டும் என்றும் இரண்டாயிரம் குடும்ப அட்டைகளுக்கு மேல் உள்ள நியாய விலைக் கடைகளை துரித அடிப்படையில் உடனடியாக பிரிக்கப்படுதல் வேண்டும் என்றும் அரிசி கடத்தல் தடுப்பு நடவடிக்கையினைத் தீவிரப்படுத்து தல் வேண்டும் எனவும் அறிவுரை வழங்கினார்.

ஆய்வுக் கூட்டத்தில் துறைத் தலைவர்கள் தங்கள் துறையின் செயல்பாடுகள் குறித்து எடுத்துரைத்தனர். ஆய்வுக் கூட்டத்தில் முதன்மைச் செயலாளர் / ஆணையாளர் ஹர் சகாய் மீனா, உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை, தமிழ்நாடு சேமிப்பு கிடங்கு நிறுவன நிர்வாக இயக்குநர் சு. பழனிச்சாமி, தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழக நிர்வாக இயக்குநர் ஆ. அண்ணாதுரை மற்றும் குடிமைப் பொருள் வழங்கல் குற்ற புலனாய்வுத் துறையின் காவல் தலைவர் கே.ஜோஷி நிர்மல் குமார் மற்றும் துறையின் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



சென்னையில் மீன்வளம் மீனவர் நலத்துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் மீனவர் மற்றும் மீனவ மகளிர்களுக்கு மீன்பிடி குறைவு காலங்களில் நிவாரணத் தொகையை நேற்று (01.11.2023) வழங்கினார். உடன் மீன்வளம் மீனவர் நலத்துறை ஆணையர் மற்றும் மீனவர் நலவாரிய உறுப்பினர் செயலர் டாக்டர். கே.சு. பழனிசாமி, ஆகியோர் உள்ளனர்.



சென்னை கிழக்கு மாவட்டம், வில்லிவாக்கம் கிழக்குப் பகுதி 96 (அ) வட்டச் செயலாளர் காஞ்சி செ.துரை – புஷ்பவள்ளி துரை ஆகியோரின் புதல்வி டி.சுதா – எம்.யுவராஜ் ஆகியோரின் மணவிழாவில் பேராசிரியர் அவர்களின் புதல்வர் அ.அன்புச் செல்வன், அ.வெற்றி அழகன் எம்.எல்.ஏ. உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டு வாழ்த்தினர். உடன் கழக முன்னணியினர், நிர்வாகிகள் உள்ளனர்.

மதுரை வடக்கு – மதுரை தெற்கு மாவட்டங்களில்

# வாக்காளர் பட்டியல் சரிபார்த்தல் பணி!

## மாவட்டச் செயலாளர்கள் அமைச்சர் பி.மூர்த்தி - சேடபட்டி மு.மணிமாறன் அறிக்கை!

மதுரை,நவ 2-

மதுரை வடக்கு மாவட்டச் செயலாளர், வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் பி.மூர்த்தி, தெற்கு மாவட்டச் செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் ஆகியோர் கூட்டாக விடுத்துள்ள அறிக்கையில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளனர்.





அதன்விபரம் வருமாறு:-

கழகத் தலைவர், தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைப்படி 01.01.2024 ஐ தகுதியேற்படுத்தும் நாளாகக் கொண்டு தமிழகத்திலுள்ள வாக்காளர் பட்டியல்கள் திருத்தம் செய்திட வரைவு வாக்காளர் பட்டியலைத் தேர்தல் ஆணையம் 27.10.23 அன்று வெளியிட்டுள்ளது. அதன்படி மதுரை வடக்கு மற்றும் தெற்கு மாவட்டங்களிலுள்ள ஆறு சட்டமன்றத் தொகுதிகளிலும் 27.10.23 முதல் 09.12.23 வரை புதிய வாக்காளர்களைச் சேர்க்கவும் மற்றும் பெயர்கள் நீக்கவும், திருத்தம் செய்யவும் மனுச் செய்ய கால அவகாசம் கொடுக்கப்பட்டுள்ளது.

இது தவிர 04.11.2023 (சனிக்கிழமை), 05.11.2023 (ஞாயிற்றுக்கிழமை), 18.11.2023 (சனிக்கிழமை), 19.11.2023 (ஞாயிற்றுக் கிழமை) ஆகிய நான்கு நாட்களில் நிர்ணயிக்கப்பட்ட வாக்குச்சாவடி மையங்களில் காலை 9.30 மணி முதல் மாலை 5.30 மணி வரை சிறப்பு முகாம்களும் நடைபெறவுள்ளது. அதன்படி, இந்த நாட்களில் வாக்காளரே தாமாக முன்வந்து வாக்காளர் பட்டியலில் உள்ள தங்களது விபரங்களை சரி பார்த்து, விடுபட்ட வாக்காளர்களும், இடம் மாறிய வாக்காளர்களும், 01.01.2024 அன்று 18 வயது நிரம்பக்கூடிய புதிய வாக்காளர்களும் தங்கள் பெயர்களை சேர்க்க, நீக்க, திருத்தங்கள் மேற்கொள்வதற்கான படிவங்களைப் பெற்று பூர்த்தி செய்து, அந்தப் படிவங்களை அந்தந்த முகாம் மையங்களில் கொடுக்க வேண்டும்.

இதன் அடிப்படையில் 2024ஆம் ஆண்டு ஜனவரி 1ஆம் தேதி 18 வயது நிறைந்தவர்களின் பெயர்களையும் வாக்காளர் பட்டியலில் இதுவரை இடம் பெறாத பெயர்களையும் புதிதாக குடிபெயர்ந்து உள்ள வாக்காளர்களின் பெயர்களையும் வாக்காளர் பட்டியலில் சேர்க்கவும், தொகுதியிலிருந்து இடம் பெயர்ந்தவர்கள் மற்றும் இறந்தவர்களின் பெயர்களை தற்போதுள்ள பட்டியலிலிருந்து நீக்கவும், தீவிர நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

தேர்தல் ஆணையம் 27.10.23 அன்று வெளியிட்டுள்ள வாக்காளர் பட்டியலை பெற்றுச் சென்ற அனைத்து ஒன்றிய, நகர, பகுதி, வட்டக்கழக, பேரூர் கழக செயலாளர்கள், நிர்வாகிகள் உடனடியாக அனைத்து வாக்குச்சாவடிகளுக்கும் அளித்து, மேற்கண்டவாறு அறிவித்துள்ள சிறப்பு முகாம் நடைபெறவிருக்கும் நாட்களில் மதுரை வடக்கு மற்றும் மதுரை தெற்கு மாவட்டத்திற்குட்பட்ட மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பகுதி, வட்டக்கழக, பேரூர் கழக, கிளை செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், முன்னாள் இந்நாள் உள்ளாட்சி மன்றப் பிரதிநிதிகள் மற்றும் அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், நிர்வாகிகள், அந்தந்த வாக்குச் சாவடி நிலை முகவர்கள் வாக்குச்சாவடி உறுப்பினர்கள் ஆகியோர் இணைந்து இவ்வாய்ப்பினை பயன்படுத்தி வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்க விண்ணப்பித்தல், வாக்காளர் பட்டியலில் இருந்து பெயர் நீக்குதல், திருத்தம், முகவரி மாற்றம், ஆதார் எண் இணைப்பு போன்ற பணிகளை மேற்கொள்ளுமாறும், இப்பணிகள் குறித்து கழக நிர்வாகிகள் மேற்கொண்ட நடவடிக்கைகளை மாவட்டக் கழகத்திற்கு அவ்வப்போது தெரியப்படுத்துமாறும் மதுரை வடக்கு மாவட்டச் செயலாளரும், வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சருமான பி.மூர்த்தி, தெற்கு மாவட்ட செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் ஆகியோர் கழகத்தினருக்கு கூட்டாக வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

திருச்சி தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில்

# முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்த நாள் விழா நிகழ்ச்சிகள் 100

## நவம்பர் 2023 மாத நிகழ்வுகள் 10



### அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அறிவிப்பு!

| வ.எண் | நிகழ்ச்சிகள் | நிகழ்ச்சி ஏற்பாடு | தலைமை | சிறப்பு அழைப்பாளர்கள் |
|---|---|---|---|---|
| 1. 02/11/23 09.00AM | தலைவர் கலைஞர் எழுதிய "சேரன் செங்குட்டுவன்" நாடகம் மீண்டும் அரங்கேற்றம் | மாவட்ட, மாநகர நிர்வாகிகள் | இரா.மூக்கன், லீலா வேலு, பொன்செல்லையா, வி.சரோஜினி | அன்பகம் கலை கழக இணை அமைப்பு செயலாளர் |
| 2. 03/11/23 09.00AM | சட்ட கல்லூரியில் மாணவர்களுக்கான பேச்சுப்போட்டி தலைப்பு : மாநில சுயாட்சி, அரசியல் சட்ட மாண்புகளை காப்போம் | மாவட்ட, மாநகர வழக்கறிஞர் அணி | கே.ஏ.வி.தினகரன் மாவட்ட அமைப்பாளர் எம்.பன்னீர்செல்வன் மாநகர அமைப்பாளர் | இரா.கிரிராஜன் MA., B.L., M.P., கழக சட்ட, திட்ட திருத்தக்குழு செயலாளர் |
| 3. 04/11/23 06.00PM | தலைவர் கலைஞருக்கு புகழ் சேர்க்கும் தெருமுனை பிரச்சாரம் | வார்டு எண் - 39,39A திருவெறும்பூர் பகுதி | ஐ.செல்வராஜ் வினோத் கனகராஜ் | தமிழ்.க.அமுதரசன் தலைமை கழக பேச்சாளர் |
| 4. 05/11/23 06.00PM | தலைவர் கலைஞருக்கு புகழ் சேர்க்கும் தெருமுனை பிரச்சாரம் | வார்டு எண் -12,12A மலைக்கோட்டை பகுதி | ஜெ.சிவகுமார் வி.ஜெயச்சந்திரன் | தமிழ். சாதிக் தலைமை கழக பேச்சாளர் |
| 5. 18/11/23 08.00AM | மாவட்ட கழகம் சார்பில் திருச்சி கிழக்கு தொகுதியில் கழக கொடியேற்றுதல், மற்றும் தலைவர் கலைஞர் புகழ் பரப்பும் வகையில் அணிகளுக்கு கருத்துரை வழங்கும் விழா | திருச்சி தெற்கு மாவட்ட கழகம் | மாவட்ட கழக செயலாளர் | மாண்புமிகு க. துரை முருகன் கழக பொதுச்செயலாளர் 23 கழக சார்பு அணிகளுக்கு கருத்துரை வழங்குதல் (மாவட்டம் / மாநகரம்) |
| 6. 19/11/23 09.00AM | தலைவர் கலைஞர் புகழ் பரப்பும் திரைப்பட கலைஞர்கள் பங்கேற்கும் கருத்தரங்கம் | மாவட்ட, மாநகர தொண்டர் அணி | என்.ஏ.உதயகுமார் மாவட்ட அமைப்பாளர் ஆ.தினகரன் மாநகர அமைப்பாளர் | பெ.சேகர் மாநில அணி செயலாளர் கருத்தரங்கம் திரைப்பட நடிகர். தம்பி ராமையா |
| 7. 19/11/23 06.00PM | தலைவர் கலைஞர் புகழ் பரப்பும் பொதுக்கூட்டம் | வையம்பட்டி தெற்கு ஒன்றியம் | வி.ஏ.ராஜேந்திரன் ஒன்றிய செயலாளர் | .மா.சுப்பிரமணியன் சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளர் தமிழ்நாடு சுகாதாரத்துறை அமைச்சர் |
| 8. 26/11/23 07.00AM | திருவெறும்பூர் வடக்கு ஒன்றியம் 11 ஊராட்சிகளில் தலைவர் கலைஞர் நூற்றாண்டு விழா கல்வெட்டு திறப்பு மற்றும் கொடியேற்று விழா | திருவெறும்பூர் வடக்கு ஒன்றியம் | கே.எஸ்.எம்.கருணாநிதி ஒன்றிய செயலாளர் | மாவட்ட கழக செயலாளர் |
| 9. 22/11/23 06.00PM | தலைவர் கலைஞர் புகழ் பரப்பும் பொதுக்கூட்டம் | மருங்காபுரி தெற்கு ஒன்றியம் | சி.சின்ன அடைக்கண் ஒன்றிய செயலாளர் | .சி. வி.கணேசன் கடலூர் மேற்கு மாவட்ட கழக செயலாளர் தமிழ்நாடு தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர் |
| 10. 28/11/23 06.00PM | தலைவர் கலைஞருக்கு புகழ் சேர்க்கும் தெருமுனை பிரச்சாரம் | வார்டு எண் - 17,17A மார்க்கெட் பகுதி | எஸ்.மனோகரன் ஆர்.எம்.சுப்ரமணியன் | மன்னை.இளங்கோ தலைமை கழக பேச்சாளர் |

**அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி**
செயலாளர்
திருச்சி தெற்கு மாவட்ட தி.மு.க.



திருவள்ளூர் கிழக்கு மாவட்டம் மீஞ்சூர் கிழக்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் பி.எல்.ஏ. 2 பாக முகவர் ஆலோசனைக் கூட்டம் ஒன்றிய கழகச் செயலாளர் வல்லூர் எம்.எஸ்.கே.ரமேஷ் ராஜ் தலைமையில் நடைபெற்றது. இதில் மாவட்ட கழக செயலாளர் டி.ஜே.கோவிந்தராஜன் எம்.எல்.ஏ. கலந்துகொண்டு பல்வேறு ஆலோசனைகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் பொன்னேரி தொகுதி பார்வையாளர் மாநில மாணவர் அணி துணைச் செயலாளர் தமிழ் க.அமுதரசன், மாவட்ட மாநில நிர்வாகிகள் மு.பகலவன், கே.ஜி.பாஸ்கர் சுந்தரம், அன்பு வாணன், கதிரவன், கே.சுப்ரமணி, ரமேஷ், டாக்டர் பரிமளம், பா.து.தமிழரசன், டாக்டர் எம்.எஸ்.கே.ஆர்.ராஜ்குமார், அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் ஒன்றிய கழக நிர்வாகிகள் கழக மூத்த முன்னோடிகள் பாக முகவர்கள் அனைவரும் கலந்து கொண்டனர்.

# தாயுமானவராக இருக்கிறார்; நமது முதல்வர்!

## ‘கணையாழி’ தலையங்கம்!



மாணவர்களிடம் விழிப்புணர்வையும்
மக்களிடம் சுயமரியாதையையும்
தூண்டி வளர்க்க
வைக்கம் போராட்டத்தின்
நூற்றாண்டைக் கொண்டாடத்
தமிழக முதல்வர்
சட்டமன்றத்தில் அறிவித்திருக்கிறார்!

வைக்கம் போராட்டம்
விடுதலை வேண்டி நின்ற
இந்தியாவில்
சத்தியாகிரக முறையில் நடந்த
போராட்டத்திற்கும் வெற்றிக்கும்
வரலாறு காட்டும் முன் உதாரணம்!

கடவுள் சாதி ஆதிக்கத்திற்கு எதிராகக்
காந்தியின் ஆதரவுடன் களத்தில் இறங்கிய
கதர்ச் சட்டை ஈ.வே.ரா நாயக்கரைக்
கருப்புச் சட்டைப் பெரியாராக
மாற்றிய நிகழ்வுகளின்
முதல் புள்ளி, வைக்கம்!

பேராசிரியர் மு.இராமசாமியின்
“வைக்கம் என்பது நாயக்கர் கதையல்ல
ஈ.வே.ரா நாயகர் ஆன கதை” நாடகத்தை
மாணவர்களைக் கொண்டு அரங்கேற்றி
மதுரை
காமராசர் பல்கலைக்கழகக் கல்லூரி
முதல்வரும் துணை முதல்வரும் வைக்கம்
போராட்ட நூற்றாண்டைக்
கொண்டாடி இருக்கிறார்கள்!

வழக்கம் போல பேராசிரியரின்
நெறியாளுகையும் நடிப்பும்
பார்வையாளர்களையும்
பங்கேற்க வைத்திருக்கின்றன!.

மாணவர்கள்
கதை மாந்தர்களாக மட்டுமின்றிக்
களப் போராளிகளாகவும்
உணர்ச்சி பொங்கப் போராட்டத்தை
மதுரையில் நிகழ்த்திக் காட்டியுள்ளனர்!

யானையை எதிர்த்துப் போரிட்டுக்
களத்தில் இறந்தவருக்கான
நடுகல் தவிர
நெல் தூவி வணங்கும் தெய்வமும் இலவே!
என்று சங்க காலத்திலேயே
தமிழர்களின்
தெய்வக் கொள்கையை அறிவித்தவர்
மதுரைக் காஞ்சி தந்த மாங்குடி மருதனார்!

தெய்வமும் உண்டுகொல் -
கடவுள் இருக்கிறதா? என்று
கணவனை இழந்த கண்ணகி
புலம்பி நின்ற இடமும் மதுரைதான்!

அர்த்த மண்டபத்துக்கு வெளியே
பொதுமக்களைக் கொண்டு
இராமநாதன் நடத்திய வழிபாட்டுக்காக
அர்த்த ராத்திரி வரை அவர்கள்
அடைக்கப்பட்ட கோயில் மதுரையில்தான்.

கக்கன் உட்படப் பலரை
அழைத்துக்கொண்டு வைத்தியநாத ஐயர்
ஆலயப் பிரவேசம் நடத்திய இடமும்
மதுரைதான்!

தாழ்த்தப்பட்டோர் உள்ளே வந்ததால்
கோபித்துக்கொண்டு கடவுள்
கோயிலை விட்டு வெளியேறி
நடேச ஐயர் வீட்டுக்குச் சென்று விட்டதாகக்
கதை விட்ட இடமும் மதுரைதான்!

நந்தனார் வழிபட
திருப்புன்கூர் நந்தி, விலகி வழிவிட்டது!
ஆனால் தீக்குள் இறக்கியது
தில்லை!

ஒரே மதத்தைச் சேர்ந்தவர்களைப்
பிறப்பின் அடிப்படையில் பிரித்து வைப்பதை
பண்பாட்டின் உச்சம் எனும்
பித்தம் தெளிய மருந்தொன்றைச் சொல்கிறது
வைக்கம் நாடகம்!

மற்ற இடங்களில்
கோயிலுக்குள் நுழைய
போராட்டங்கள் நடந்தன!
வைக்கத்தில் கோயில் உள்ள
தெருவில் நுழையவே போராட்டம்!

மதுரை மீனாட்சி கோயிலில்
ஆலயப் பிரவேசம் சென்ற
கக்கன் உட்பட்ட பலருக்கும்
வைத்தியநாத ஐயர்
பூணூல் போட்டுதான்
அழைத்துச் சென்றிருக்கிறார்.

பெரியார் நடத்திய
வைக்கம் போராட்டத்தில்
பூணூல் இல்லை!


பேராசிரியர் மு.இராமசாமியின் நாடகம்
இந்தியாவைப் பாரத் ஆக்கவோ
இந்து நாடு ஆக்கவோ
பக்தி வளர்க்கவோ முயற்சிக்கவில்லை!

பார்க்கும் எல்லோருக்கும்
பூணூல் போடவில்லை.
மாறாக
நாடகத்தில் பங்கேற்றவர்கள் மட்டுமின்றி
பார்வையாளர்களின்
கைகளிலும் மனங்களிலும் இருந்த
சாதி ஏற்றத்தாழ்வுக் கட்டுமானங்களை
உடைத்தெறிய முயன்றிருக்கிறது.

கடவுளைக் காப்பாற்றவும்
ஆட்சியைக் காக்கவும்
வளர்க்கும் யாகங்கள்
கொரோனோ காலத்துக்கும் முன்பே
பயனற்றுப் போயிருக்கின்றன வைக்கத்தில்!

இப்போதும் மக்களிடம்
காலாவதியான நம்பிக்கைகளை
விதைக்க முயலும் அதிகார மையத்தைக்
கேள்வி கேட்க வைத்திருக்கிறது
வைக்கம் நாடகம்!
தொட்டால் தீட்டு என்பவர்களுக்கும்
தொடுவது தோழமை என்பவர்களுக்கும்
மனிதர்களைப் பிறப்பால்
வேறுபடுத்துகிறவர்களுக்கும்
யாவரும் கேளிர் என்பவர்களுக்கும்
இடையே இப்போதும் தொடரும்
சித்தாந்தப் போராட்டத் தொடர்ச்சியின்
ஒரு கண்ணியைக் காட்சிப்படுத்தி
நவீன ‘இந்தியா’வைக்
கட்டமைக்கத் தூண்டுகிறது
வைக்கம் நாடகம்!
கடவுளைச் சொல்லி மக்களைப் பிரிக்கும்
கயமையிலிருந்தும் விடுதலைபெற
பாரதி பாடினார்!
பறையருக்கும் இங்கு தீய
புலையருக்கும் விடுதலை”
பாரதி கனவை நிறைவேற்றிய
வைக்கம் போராட்டத்தின் நூற்றாண்டைக்
கொண்டாட ஆணையிட்டிருக்கிறார்
தமிழக முதல்வர்!
ஆம்
வைக்கம் என்பது…
ஊரின் பெயர் மட்டுமில்லை
அது ஓர் அடையாளம்!

**– நன்றி**
**கணையாழி**



ம.ரா.



பல்லாவரம் சட்டமன்றத் தொகுதி புனித தோமையார் மலை ஒன்றியத்துக்கு உட்பட்ட பொழிச்சலூர் ஊராட்சியில் கிராம சபை கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி கலந்து கொண்டு பொதுமக்களிடம் கலந்து உரையாடி குறைகளை கேட்டு அறிந்தார். அப்பொழுது தாம்பரம் வருவாய் கோட்டாட்சியர் பரிமளா தேவி, ஊராட்சி துணைத் தலைவர் ஜோசப் ஆகியோர் உடன் இருந்தனர்.

## மதுரவாயல் வடக்கு பகுதி கழக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

### நொளம்பூர் வே.ராஜன் வேண்டுகோள்!

சென்னை, நவ. 2 -

மதுராவாயல் வடக்குப் பகுதிக் கழகச் செயலாளர் நொளம்பூர் வே.ராஜன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

கழகத் தலைவர், முதல்வர் அவர்களின் ஆணைக்கிணங்கவும், மாவட்டச் செயலாளர் அமைச்சர் மா.சுப்பிரமணியன் வழிகாட்டுதலின்படி, மதுரவாயயில் வடக்கு பகுதி கழக ஆலோசனைக் கூட்டம் இன்று (02-11-2023) மாலை 5 மணி அளவில் பகுதி கழக அலுவலகத்தில் (நொளம்பூர்) பகுதி கழக நிர்வாகிகள் ஆமாலினி, தீ பாலாஜி., எம்.ஏ. செந்தில் சுரேஷ், மா.உதயகுமார் ஆகியோரின் முன்னிலையில் கூட்டம் நடைபெறுகிறது.

ஆகவே இந்த ஆலோசனைக் கூட்டத்தில் பகுதி கழகத்திற்குட்பட்ட வட்டக் கழகச் செயலாளர்கள், மாவட்டப் பிரதிநிதிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்: 2-11 - 2023. அன்று கழகத் தலைவரின் தலைமையில் நடைபெற உள்ள நடப்போம் நலம் பெறுவோம். 05-11-2023 அன்று கழகத் தலைவரின் தலைமையில் நடைபெறவுள்ள BLA 2 ஆலோசனைக் கூட்டம் மற்றும் கழக ஆக்கப் பணிகள்.

இவ்வாறு பகுதிச் செயலாளர் நொளம்பூர் வே. ராஜன் தெரிவித்துள்ளார்.

### வாக்காளர் பட்டியல் சரிபார்ப்பு!

## சோழிங்கநல்லூர் கிழக்குப் பகுதிக் கழகத்தினர் தீவிரமாக ஈடுபடுவீர்!

### பகுதிச் செயலாளர் வி.இ.மதியழகன் வேண்டுகோள்!

சென்னை, நவ.2

வாக்காளர் பட்டியல் சரிபார்க்கும் பணியில் மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆலோசனைப்படி, சென்னை தெற்கு மாவட்டம், சோழிங்கநல்லூர் கிழக்கு பகுதிக் கழகத்தினர் தங்களை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டு விடுபட்ட மற்றும் புதிய வாக்காளர்களை சேர்த்திட வேண்டுமென பகுதிக் கழகச் செயலாளர் வி.இ.மதியழகன் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

01.01.2024 தேதியை தகுதியேற்படுத்தும் நாளாக கொண்டு வாக்காளர் பட்டியல் திருத்தம் செய்திட வரைவு வாக்காளர் பட்டியலை தேர்தல் ஆணையம் 27.10.2023 அன்று வெளியிட்டுள்ளது. 27.10.2023 முதல் 09.12.2023 வரை புதிய வாக்காளர்களை சேர்க்கவும் மற்றும் பெயர்கள் நீக்கவும், திருத்தம் செய்யவும் மனு செய்ய கால அவகாசம் கொடுக்கப்பட்டுள்ளது.

இது தவிர 04.11.2023 (சனிக்கிழமை), 05.11.2023 (ஞாயிற்றுக்கிழமை), 18.11.2023 (சனிக்கிழமை), 19.11.2023 (ஞாயிற்றுக்கிழமை) ஆகிய நான்கு நாட்களில் நிர்ணயிக்கப்பட்ட மையங்களில் சிறப்பு முகாம்கள் நடைபெற உள்ளன.

இந்நாட்களில் விடுபட்ட வாக்காளர்களும், இடம் மாறிய வாக்காளர்களும் 01.01.2024 அன்று 18 வயது நிரம்பக்கூடிய புதிய வாக்காளர்களும் தங்கள் பெயர்களை சேர்க்க, நீக்க, திருத்தங்கள் மேற்கொள்வதற்கான படிவங்களை பெற்று பூர்த்தி செய்து அந்த படிவங்களை அந்தந்த முகாம்களில் கொடுக்க வேண்டும்.

17 வயது நிரம்பியவர்களும், உரிய ஆவணங்களோடு விண்ணப்பிக்கலாம். அவர்கள் 18 வயது நிரம்பும் போது வாக்காளர் பட்டியலில் இடம் பெற இந்திய தேர்தல் ஆணையம் ஏற்பாடு செய்திருக்கிறது. இதன் அடிப்படையில் 2024 ஆம் ஆண்டு ஜனவரி 1 ஆம் தேதி 18 வயது நிறைந்தவர்களின் பெயர்களையும் வாக்காளர் பட்டியலில் இதுவரை இடம் பெறாத பெயர்களையும் புதிதாக குடிபெயர்ந்து உள்ள வாக்காளர்களின் பெயர்களையும் வாக்காளர் பட்டியலில் சேர்க்கவும். தொகுதியிலிருந்து இடம் பெயர்ந்தவர்கள் மற்றும் இறந்தவர்கள் பெயர்களை தற்போதுள்ள பட்டியலில் இருந்து நீக்கவும் தேர்தல் ஆணையம் அறிவித்துள்ள மேற்கண்ட அட்டவணையின்படி சிறப்பு முகாம்கள் நடைபெறவிருக்கும் நாட்களில், நமது நிர்வாகிகள் மற்றும் வாக்குச்சாவடி நிலை முகவர்கள் (BLA-2) ஆகியோர் தங்களை முழுமையாக ஈடுபடுத்திட கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு பகுதிச் செயலாளர் வி.இ.மதியழகன் தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

### மாநகர கழக செயலாளர் எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ. பங்கேற்பு

## தாம்பரம் மேற்கு பகுதி வாக்குச்சாவடி முகவர்கள் கூட்டம்!

### பகுதி கழக செயலாளர் எஸ். இந்திரன் அறிக்கை

தாம்பரம், நவ. 2 -

தாம்பரம் மாநகரம், தாம்பரம் மேற்குப் பகுதிக் கழக பாக முகவர்கள் கூட்டம் இன்று நடைபெறுகிறது. இதில் எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ. ஆலோசனை வழங்குகிறார். இது குறித்து பகுதிச் செயலாளர் எஸ். இந்திரன் விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு :-

தாம்பரம் மேற்குப் பகுதிக் கழக நிர்வாகிகள், பாக நிலை முகவர்கள் ஆலோசனைக் கூட்டம் இன்று (2.11.2023 வியாழக்கிழமை) மாலை 4 மணி அளவில் தாம்பரம் கிழக்கு தாம்பரம் பாரத மாதா தெருவில் அமைந்துள்ள மௌஷிகா மாகலில் பகுதி அவை தலைவர் வி.முனுசாமி தலைமையிலும் பகுதி கழகத் துணைச் செயலாளர்கள் எம்.சீனிவாச குமார், கி.வேல்மணி, எல்.பேகம் மற்றும் பி.ஜோதி குமார் எம்.சி., பகுதி பொருளாளர் ஆகியோர்கள் முன்னிலையில் பகுதி பாக முகவர்கள் கூட்டம் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் தேர்தல் ஆணையத்தால் வழங்கப்பட்டிருக்கின்ற வாக்காளர் பட்டியல் சரிபார்ப்பு புதிய வாக்காளர் சேர்ப்பு, நீக்கல், ஐந்தாம் தேதி திருவள்ளூரில் நடைபெறுகின்ற பாக நிலை முகவர்களின் பாசறை கூட்டத்தில் பகுதிக்கு உட்பட்ட பாக முகவர்கள் கலந்து கொள்வது உள்ளிட்ட பொருளோடு நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் பகுதி நிர்வாகிகள் வட்ட செயலாளர்கள், நிர்வாகிகள், மாமன்ற உறுப்பினர்கள், பகுதிக்கு உட்பட்ட மாநகர அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், இளைஞர் அணி, மாணவர் அணி, மகளிர் அணி, மற்றும் சிறப்பு அழைப்பாளர்கள் கழகத் தோழர்கள் கலந்து கொண்டு சிறப்பித்துடுமாறு எஸ். இந்திரன் கேட்டுக்கொள்கிறேன்.



காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் குன்றத்தூர் தெற்கு ஒன்றிய திமுக பாக நிலை முகவர்கள் (BLA 2) கூட்டம் சோமங்கலம் மீனாட்சி மகாலில் காஞ்சிபுரம் மாவட்ட ஊராட்சி குழு தலைவர், குன்றத்தூர் தெற்கு ஒன்றிய கழக செயலாளர் படப்பை ஆ.மனோகரன் தலைமையில் திருப்பெரும்புதூர் தொகுதி தேர்தல் பொறுப்பாளர் வே.உமாகாந்த் சிறப்புரையாற்றிட ஒன்றிய கழக நிர்வாகிகள், மாவட்ட கழகத்தின் பொறுப்பாளர்கள் முன்னிலையில் நடைபெற்றது.

### கூட்டணி ஆட்சியிலிருந்து கூட்டாட்சிக்கு:

# முதலமைச்சரின் ‘பாட்காஸ்ட்’ உரை குறித்து சில குறிப்புகள்!

### ‘மின்னம்பலம்’ இணையதளத்தில் து.ரவிக்குமார் எம்.பி. சிறப்புக் கட்டுரை!



“மாநில சுயாட்சிக்கான இன்றைய தேவை குறித்து தமிழ்நாட்டின் குரல்” என்னும் தலைப்பில் இன்று (30.10.2023) தமிழ்நாடு முதலமைச்சரும் திமுக தலைவருமான மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்கள் ‘பாட்காஸ்ட்டில்’ உரையாற்றியிருக்கிறார். பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் குஜராத் மாநில அமைச்சராக இருந்தபோது மாநில உரிமைகளுக்காகக் குரல் கொடுத்ததையும், அவரே பிரதமராக வந்தபிறகு மாநில உரிமைகளைப் பறிப்பதையும் முதலமைச்சர் சுட்டிக்காட்டியிருக்கிறார். ‘மாநில சுயாட்சி மத்தியிலே கூட்டாட்சி’ என்ற முழக்கத்தின் இன்றைய தேவையை வலியுறுத்தியிருக்கிறார். ‘மாநில சுயாட்சி மத்தியிலே கூட்டாட்சி’ என்ற முழக்கம் 1970ஆம் ஆண்டு திருச்சியில் நடந்த திமுக மாநாட்டில் உருவெடுத்தது. இந்த முழக்கம் தமிழக எல்லையைத் தாண்டி இந்திய அளவில் எதிரொலிகளை எழுப்பியது மட்டுமின்றி, தலைமுறைகளைத் தாண்டி தாக்கத்தை ஏற்படுத்தி வருகிறது. இந்தித் திணிப்பையும், வடவர் ஆதிக்கத்தையும் எதிர்ப்பதாக வெளிப்பட்ட இந்தக் குரல், தமிழுக்கான அங்கீகாரத்தைக் கோருவதாகவும், மாநில அரசுக்குக் கூடுதல் அதிகாரங்களைக் கேட்பதாகவும் அமைந்திருந்தது. அன்று, அதற்குத் தெளிவான கருத்தியல் வடிவத்தை வழங்கியவர் முரசொலி மாறன் ஆவார். அவர் மாநில சுயாட்சி குறித்து எழுதிய நூல் இன்றும் பொருந்தக்கூடியதாகும்.

ஆட்சி அதிகாரத்தை திமுக பிடித்தது முதல், அவசரநிலை அமல்படுத்தப்பட்ட காலம் வரை தமிழ்நாட்டில் இந்த மாநில சுயாட்சி முழக்கம் ஓங்கி ஒலித்ததை நாம் அறிவோம். ராஜமன்னார் குழு பரிந்துரையின் அடிப்படையில் மாநிலங்களுக்குக் கூடுதல் அதிகாரங்கள் வழங்கப்படவேண்டும் என்று தமிழக சட்டப்பேரவையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட 1974ஆம் ஆண்டில்தான், சுதந்திர தினத்தன்று கோட்டையிலே தேசியக் கொடியை ஏற்றிவைத்து இந்திய அளவில் ஒரு முன்னுதாரணத்தை கலைஞர் உருவாக்கினார்.



இப்படி மாநில மக்களின் உணர்வுகள் சனநாயக ரீதியாக வெளிப்பட்டுக் கொண்டிருந்த சூழலில்தான் அவசரநிலை அறிவிக்கப்பட்டது. கட்சியிலும், ஆட்சியிலும் அதிகாரங்களைக் குவித்துக் கொள்ள வேண்டும் என்ற நாட்டம் அன்றைய பிரதமர் இந்திராவின் கண்களை மறைத்தது. மாநில உணர்வுகள் சனநாயக ரீதியாக வெளிப்படுவதற்கு தடை ஏற்படுத்தப்பட்டபோது பிரிவினை முழக்கங்கள் எழுந்தன. பஞ்சாப்பிலும், வடகிழக்கு மாநிலங்களிலும் ரத்த ஆறு பெருக்கெடுக்க அதுவே காரணமாய் அமைந்தது. இந்தியாவின் தேசிய இனப் பிரச்சினையை ஆராய்கிறவர்கள் அதன் வேர் 1947ஐத் தாண்டியும் ஆழ்ந்து செல்வதை அறிவார்கள். மொழியால், இனத்தால் வேறுபட்டுக் கிடக்கும் பல்வேறு தேசிய இனங்களின் கூட்டமைப்பாக விளங்கும் இந்தியாவை நிர்வகிப்பதற்கு பிரிட்டிஷ்காரர்களும், படாதபாடுபட்டதை அவர்கள் புரிந்து கொள்ள முடியும்.





இந்தியாவின் அரசியலமைப்புச் சட்டத்தை உருவாக்கிய அரசியலமைப்புச் சட்ட அவையின் உறுப்பினர்களாக இருந்தவர்கள் தத்தமது மாநிலங்களின் பிரதிநிதிகளாக அதில் பங்கேற்கவில்லை. எனவே மத்திய மாநில உறவுகள் குறித்த ஆழமான விவாதம் அந்த அவையில் நடைபெறவில்லை. நாட்டுப் பிரிவினையின் ரணம் ஆறாமல் இருந்த சூழலில் மாநிலங்களுக்கு வழங்கப்படும் அதிகாரம் பிரிவினைக்கு இட்டுச் சென்றுவிடக்கூடாது என்ற எச்சரிக்கை உணர்வுதான் அன்றைய அரசியல் தலைவர்களிடம் மேலோங்கி இருந்தது. அரசியலமைப்புச் சட்ட உருவாக்கத்தில் முக்கிய பங்காற்றிய அம்பேத்கரும் அதற்கு விதிவிலக்காக இல்லை. அதனால்தான் மாநிலங்களுக்கு அதிகாரங்களை வழங்கினாலும் தேவைப்படும் போது அந்த அதிகாரங்களை மத்தியில் மாற்றிக் கொள்வதற்குத் தோதாக நமது அரசியலமைப்புச் சட்டத்தை அவர் உருவாக்கினார். 1967ஆம் ஆண்டிற்குப் பிறகு மத்தியில் இந்திராகாந்தி அம்மையார் பொறுப்பேற்றதற்குப் பின்னால் காங்கிரஸ் பேரியக்கம் ஒரு சில ஆண்டுகளில் இரண்டாக உடைந்த நிலையை இந்த நாடு பார்த்தது. அப்போதே இந்தியா முழுமைக்கும் ஒரு கட்சி ஆட்சி என்பது ஏற்க முடியாது என்கிற குரல்கள் வலுவாக ஒலித்தன. அதன் விளைவாகத்தான் இந்த நாட்டில் அவசர நிலையைக் கொண்டுவரவேண்டிய நிர்ப்பந்தம் இந்திரா அம்மையாருக்கு ஏற்பட்டது என்பதையும் நாமெல்லாம் அறிவோம். அந்த அவசர நிலை காலத்துக்குப் பிறகு ஜனசங்கம் முதலான கட்சிகள் எல்லாம் ஒன்றிணைந்து ஜனதா என்கிற கூட்டணியை உருவாக்கி இந்திய வரலாற்றில் 1977ஆம் ஆண்டில் முதல் முறையாக காங்கிரஸ் அல்லாத ஓர் ஆட்சியை மத்தியில் அமைத்தார்கள். இரண்டாண்டுக் காலம் நீடித்த அந்த ஆட்சி இந்தியா முழுமைக்கும் பேரதிர்வுகளை ஏற்படுத்தியது. எல்லா இடங்களிலும் மாநில உரிமைகளுக்கான கோரிக்கைகள் தீவிரமடைந்தன.

மாநில உரிமைகளை முன்வைத்த கட்சிகள் ஏராளமாக உருவெடுத்தன. அதனுடைய தொடர்ச்சியாகத்தான் 1989ஆம் ஆண்டில் வி.பி.சிங் தலைமையிலான ஆட்சி. அதற்குப் பிறகு 1996ஆம் ஆண்டில் 16 கட்சிகளின் கூட்டணி ஆட்சி. 1998ஆம் ஆண்டு 18 கட்சிகளைக் கொண்ட கூட்டணி ஆட்சி. 1999ஆம் ஆண்டு 24 கட்சிகளைக் கொண்ட கூட்டணி ஆட்சி என்று மத்தியில் மாநிலக் கட்சிகள் பங்கேற்கின்ற கூட்டணி அரசுகள் உருவெடுத்தன. மத்தியில் ஆளுகின்ற கட்சி ஆளும் மாநிலங்களில் மட்டும்தான் மத்திய அரசின் வளர்ச்சித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படும் என்கிற நிலை மாறி இந்தக் கூட்டணி ஆட்சிகளின்போதுதான் ஒப்பீட்டளவில் மாநில உரிமைகள் மதிக்கப்பட்டன. வளர்ச்சித் திட்டங்கள் மாநிலங்களுக்கும் வந்து சேர்ந்தன. தமிழ்நாட்டை எடுத்துக்கொண்டால் தமிழ்ச் செம்மொழி ஆனது கூட்டணி ஆட்சியின் விளைவுதான். சேதுக்கால்வாய்த் திட்டம் வந்ததும் கூட்டணி ஆட்சியின் விளைவுதான். தமிழக சாலைகள் மேம்பட்டது கூட்டணி ஆட்சியின் விளைவுதான். 69 விழுக்காடு இடஒதுக்கீட்டுச் சட்டத்தை அரசியலமைப்புச் சட்டத்தினுடைய ஒன்பதாவது அட்டவணையில் சேர்க்கமுடிந்தது என்றால் அது கூட்டணி ஆட்சியின் விளைவுதான். காவிரியில் நடுவர் மன்றம் காண முடிந்தது என்றால் கூட்டணி ஆட்சியால் ஏற்பட்ட விளைவுதான்.


இப்படி கூட்டணி ஆட்சிகளால் தமிழகத்திற்குக் கிடைத்த நன்மைகள் பல. இன்றைக்குத் தமிழ்நாட்டில் ஒரு மத்திய பல்கலைக் கழகம் அமைந்திருக்கிறது, கூடுதலாக ஒரு ஐஐடி வந்திருக்கிறது – இவை எல்லாமே கூட்டணி ஆட்சி வந்ததற்குப் பின்னால் கிடைத்த நன்மைகள் தான். இப்படி ஒவ்வொரு மாநிலத்திலும் நாம் எடுத்துக்காட்டுகளை சொல்லிக் கொண்டே போகலாம். ஆகவே, மாநிலங்கள் வளர்ச்சி பெறவேண்டும் என்றால் மத்தியில் கூட்டணி ஆட்சி அமையவேண்டும், அந்தக் கூட்டணி ஆட்சி கூட்டாட்சியாக வளர்ச்சி பெறவேண்டும் என்பதைப் பற்றி நாம் கவனம் செலுத்த வேண்டும். “பெரும்பான்மை ஆட்சி நடக்கும் எந்தவொரு நாடுமே அவசரநிலை பிறப்பிக்கப்படுகிற ஆபத்துள்ள நாடுதான்” என சட்ட அறிஞர் ஃபாலி எஸ்.நாரிமன் கூறினார்.

அது மறுக்கமுடியாத உண்மையாகும். 1975 இல் அவசரநிலை பிறப்பிக்கப்படும்போது இந்திரா காந்தி அம்மையாரின் தலைமையில் ஒரு பெரும்பான்மை ஆட்சிதான் நடந்துவந்தது. 1971 பாராளுமன்றத் தேர்தலில் காங்கிரஸ் 352 இடங்களில் வெற்றி பெற்று தனிப் பெரும்பானமையோடு ஆட்சிநடத்தியது. இப்போதும் மத்தியில் பெரும்பான்மை பலத்தோடு பாஜக ஆட்சி நடத்துகிறது; எல்லா அதிகாரங்களும் பிரதமரின் கையில் குவிக்கப்படுகின்றன, நரேந்திர மோடி என்ற ஒருவரை மையப்படுத்தி துதிபாடும் வேலையில் ஊடகங்கள் யாவும் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. பாஜக அல்லாத மாநில அரசுகள் ஓரவஞ்சனைக்கும் அச்சுறுத்தலுக்கும் ஆளாகியிருக்கின்றன. இப்போது, அறிவிக்கப்படாத அவசரநிலையே நிலவுகிறது என்பதை அனைவருமே ஒப்புக் கொள்கிறார்கள்.

2024 இல் மீண்டும் பாஜக வெற்றி பெற்று ஆட்சிக்கு வந்துவிட்டால் அதன் பிறகு இந்தியாவில் தேர்தல் ஜனநாயகமுறையே இருக்காது என்றும் அச்சம் தெரிவிக்கிறார்கள்.

அத்தகைய நிலை ஏற்படாமல் தடுக்கவேண்டுமென்றால் அடுத்து மத்தியில் அமையும் ஆட்சி கூட்டணி ஆட்சியாக இருக்கவேண்டும் என்பதோடு அது கூட்டாட்சியாகவும் இருக்கவேண்டும். அதை உறுதி செய்யவேண்டியது மாநில உரிமைகள் குறித்து அக்கறை கொண்ட கட்சிகளின் பொறுப்பு. இன்று முதலமைச்சரின் ‘போட்காஸ்ட்’ உரை அந்தப் பொறுப்புணர்வின் வெளிப்பாடு. அவருக்குப் பாராட்டுகள்.

**நன்றி**
**மின்னம்பலம் இணையதளம்**
**நவம்பர் 2023**



முனைவர் து.ரவிக்குமார் எம்.பி.
எழுத்தாளர், மொழிபெயர்ப்பாளர்

## திருவண்ணாமலை தெற்கு மாவட்டத்தில்

# நீட்தேர்வை ரத்து செய்யக்கோரி டிஜிட்டல் கையெழுத்து இயக்கம்!

### பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு தொடங்கி வைக்கிறார்!

திருவண்ணாமலை, நவ.2- திருவண்ணாமலையில் தி.மு.க. இளைஞர் அணி, மாணவர் அணி, மருத்துவ அணி சார்பில் நீட் தேர்வு ரத்து செய்யக் கோரி மாணவர்களின் டிஜிட்டல் கையெழுத்து இயக்கம் நடைபெறவுள்ளது. டிஜிட்டல் கையெழுத்து இயக்கத்தை பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு தொடங்கி வைக்கிறார்.

நீட் தேர்வை ரத்து செய்யக் கோரி தி.மு.க. இளைஞர் அணி, மருத்துவ அணி, மாணவர் அணி மற்றும் பொறியாளர் அணி சார்பில் கையெழுத்து இயக்கம் நடத்தப்படுகிறது. அதனை தொடர்ந்து...

நாளை (03.11.2023 - வெள்ளிக்கிழமை) காலை 9.00 மணியளவில், தி.மு.க. இளைஞர் அணி, மாணவர் அணி, மருத்துவ அணி சார்பில், கம்பன் மகளிர் கலை அறிவியல் கல்லூரி கலையரங்கில் நீட் தேர்வு ரத்து செய்யக் கோரி மாணவர்களிடம் டிஜிட்டல் கையெழுத்து இயக்கம் நடைபெறவுள்ளது.

நிகழ்ச்சிக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் சி.என்.அண்ணாதுரை எம்.பி தலைமை வகிக்கிறார்.

கழக பொறியாளர் அணி செயலாளர் கு.கருணாநிதி, மாவட்ட மருத்துவ அணி அமைப்பாளர் பிரவின்ஸ்ரீதரன், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் எஸ்.கண்ணதாசன், கோ.ராஜசேகர், எம்.ரமேஷ், எஸ்.சதீஷ்குமார், டி.திலீப்குமார், மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர்கள் மு.க.கௌதமன், இரா. மின்னல்கமல், ஏ.வெங்கடாஜலபதி, ஆ.மாதேஸ்வரன், தேனிம்கேந்திரன், மாவட்ட மருத்துவ அணி நிர்வாகிகள் டாக்டர் சவிதாகிரவன், டி.எம்.கலையரசு, டாக்டர் முத்தையாசிவராஜ், சக்திவேல், டாக்டர் எஸ்.விக்னேஷ், டாக்டர் யோகேஸ்வரன், டாக்டர் வி.தமிழரசன், டாக்டர் சதீஷ்குமார், டாக்டர் ரவிக்குமார் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் காவேஜ் கு.ரவி அனைவரையும் வரவேற்றுப் பேசுகிறார்.

நிகழ்ச்சியில் கலந்து கொண்டு டிஜிட்டல் கையெழுத்து இயக்கத்தை, பொதுப் பணித்துறை அமைச்சரும், கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினருமான எ.வ.வேலு தொடங்கிவைத்து சிறப்புரையாற்றுகிறார்.

நிகழ்ச்சியில் சட்டப்பேரவை துணைத்தலைவர் கு.பிச்சாண்டி, மாவட்ட அவைத்தலைவர் த.வேணுகோபால், மாநில மருத்துவர் அணி துணைத்தலைவர் டாக்டர் எ.வ.வே.கம்பன், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் இரா.ஸ்ரீதரன், பொன்.முத்து, சட்டமன்ற உறுப்பினர்கள் மு.பெ.கிரி, பெ.சு.தி.சரவணன், மாவட்ட பொருளாளர் எஸ்.பன்னீர்செல்வம், மாவட்ட ஊராட்சி செயலாளர்கள் ப்ரியாவிஜயரங்கன், விஜயலட்சுமி ரமேஷ், மாநில தொ.மு.ச பேரவை செயலாளர் க.சௌந்தரராஜன், சிவ.ஜெயராஜ், நகர செயலாளர் ப.கார்த்தி வேல்மாறன், மாவட்ட அமைப்பாளர்கள் டி.வி.எம்.நேரு, ப.அண்ணாமலை, மங்கலம் பிரபாகரன், ஏ.ஏ.ஆறுமுகம், பொன்.தனுசு, எச்.சாதிக் பாட்சா, கு.கணேஷ், விஜி (எ) எஸ்.விஜயராஜ், சி.ராம்காந்த், பச்சையம்மன் எஸ். முத்து, ஜெ.மெய்க்கண்டன், இரா.கார்த்திகேயன், பாலமுரளிகிருஷ்ணா, ஏ.டபள்யு. சர்தார் காசீம், எஸ்.டி.ஆர். எஸ்.பாபு, பி.கே.ஏ.அருண், கற்பகம்சரவணன், உ.நித்யா அ.சிவக்குமார், மு.பன்னீர்செல்வம், வி.பி. அண்ணாமலை, ஆராஞ்சி. ஆறுமுகம், சி.சுந்தரபாண்டியன், மெய்யூர்.சந்திரன், த. ரமணன், பெ. கோவிந்தன், ப.கேசவன், கோ.ரமேஷ், சி.மாரிமுத்து, எஸ்.சிவசேமன், க.சுப்பிரமணி, இரா. ராஜேந்திரன், ஆர்.வி.சேகர், கி.ஆறுமுகம், பா.ராமஜெயம், த.செந்தில் குமார், அ. ஏழுமலை, த.மனோகரன், பொதுக்குழு உறுப்பினர்கள் நா.பழனி, சேர.கண்ணன், அ.தண்டபாணி, க.பிரபாகரன், டி.கென்னடி, கு.பாலசுப்பிரமணி, கா.சு.இளங்கோவன், அன்பரசிராஜசேகரன் பேரூர் செயலாளர்கள் சி.கே.அன்பு, ப.முருகையன், மு.அன்பழகன், எம். சீனுவாசன் நகரமன்ற தலைவர் நிர்மலா வேல்மாறன், ஒன்றியக்குழு தலைவர்கள் கலைவாணிகலைமணி, பரிமளாகலையரசு, பூ.அய்யாகண்ணு, தமயந்திஏழுமலை, சாந்திபெருமாள், பேரூராட்சி தலைவர்கள் கோ. சரவணன், கௌரிநடராஜ், செல்வபாரதிமனோஜ்குமார் உட்பட பலர் கலந்து கொள்கின்றனர்.

நிறைவாக மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் சு.ராஜாங்கம் நன்றி கூறுகிறார்.

# திருவாரூரில் நெசவாளர் அணி கிழக்கு மண்டல ஆலோசனைக் கூட்டம்!

### அமைச்சர் க.பொன்முடி - மாநில செயலாளர் நன்னியூர் ராஜேந்திரன் பங்கேற்பு!

திருவாரூர், நவ.2 - திருவாரூரில் தி.மு.கழக நெசவாளர் அணியின் கிழக்கு மண்டல நிர்வாகிகளின் ஆலோசனைக்கூட்டம் காட்டூர் கலைஞர் கோட்டத்தில் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் கழக துணைப்பொதுச் செயலாளர் அமைச்சர் முனைவர் க.பொன்முடி, கழக அமைப்புச்செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, மாநில நெசவாளர் அணி செயலாளர் நன்னியூர் ராஜேந்திரன், மாவட்டச் செயலாளர் பூண்டி.கே. கலைவாணன் எம்.எல்.ஏ., மாவட்ட ஊராட்சி தலைவர் தலையாமங்கலம் ஜி.பாலு உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

தி.மு.க. நெசவாளர் அணியின் கிழக்கு மண்டல ஆலோசனை கூட்டம், திருவாரூர் கலைஞர் கோட்டத்தில் நடைபெற்றது. கூட்டத்திற்கு மாநில நெசவாளர் அணி துணைத்தலைவர் ஒ.ஏ.நாகலிங்கம், மாநில செயலாளர் காஞ்சி தி.அன்பழகன், மாநில செயலாளர்கள் எஸ்.எல். டி.ப.சச்சிதானந்தம், க.பழனிச்சாமி, பரணி.கே.மணி, நெல்லை சே.பெருமாள், கே. எம்.நாகராஜன், சிந்து.ரவிச்சந்திரன்,துணை செயலாளர்கள் வசந்தம் ஜெயக்குமார், ஜி.வி. மணிமாறன், ஆ.ராமசாமி, கோவிந்தசாமி ஆகியோர் முன்னிலை ஏற்றனர்.

கூட்டத்தில் உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி, கழக அமைப்பு செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, மாவட்டச் செயலாளர் பூண்டி. கே.கலைவாணன் எம்.எல்.ஏ., மாநில நெசவாளர் அணி செயலாளர் நன்னியூர் ராஜேந்திரன் உள்ளிட்டோர் பங்கேற்று சிறப்புரையாற்றினர்.

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள், முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை சிறப்பிக்கும் வகையில் நெசவாளர் உற்பத்திப்பொருட்களின் சிறப்பு கண்காட்சியை கும்பகோணத்தில் நவம்பர் 7ம் தேதி நடத்துவது, அதில் கழக ஆட்சியில் நெசவாளர்கள் அடைந்த மேன்மைகளை எடுத்து கூறும்விதமாக காணொளி காட்சிகளை நடத்துவது ,

நெசவாளர்கள் அதிகம் வசிக்கும் பகுதிகளில் அவர்களின் வாழ்வு மேலும் மேம்படும வகையில் விழிப்புணர்வு முகாம்களை நடத்துவது, முதலில் இந்த முகாமை ஜெயங்கொண்டம் அல்லது கடலூர் பகுதிகளில் நடத்தி கழக சொற்பொழிவாளர்களை கொண்டு பிரச்சாரங்களை மேற்கொள்வது, தமிழ்நாடு மாணவர்களின் மேற்படிப்பு கனவுகளை மெய்ப்பிக்கும் வகையில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் இளைஞர்களின் எதிர்காலம் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் முன்னெடுப்பில் நடைபெறும் நீட் விலக்கு அதுவே நம் இலக்கு எனும் மாபெரும் கையெழுத்து இயக்கத்திற்கு நெசவாளர் அணி நன்றியையும் பாராட்டுக்களையும் தெரிவிப்பதோடு, நெசவாளர் அணி அந்தந்த பகுதிகளில் உள்ள இளைஞர் அணி, மாணவர் அணி மற்றும் மருத்துவர் அணியோடு இணைந்து கையெழுத்து இயக்கத்தை வெற்றிகரமாக நடத்துவது உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன.

திருவாரூர் மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் பி.சுதந்திரமணி, தஞ்சை மாவட்ட அமைப்பாளர் டி.ஆர்.அனந்தராமன் ஆகியோர் நன்றி கூறினர்.

## மண்டலக்குழுத் தலைவர் இ.ஜோசப் அண்ணாதுரை தலைமையில்

# தாம்பரம் 2 வது மண்டலத்தில் மழைநீர் வடிகால் குறித்த ஆயத்த பணிகள்!

### மாமன்ற உறுப்பினர்கள் - மாநகராட்சி அதிகாரிகள் பங்கேற்பு!

தாம்பரம்: நவ. 2 - மழை பாதிப்புகள் குறித்து எந்த நேரத்திலும் புகார் அளித்தால் உடனுக்குடன் நடவடிக்கை எடுக்கப்படும் என்று தாம்பரம் மாநகராட்சி மண்டல குழு தலைவர் இ. ஜோசப் அண்ணாதுரை தெரிவித்துள்ளார். தாம்பரம் மாநகராட்சி 2வது மண்டல குழு கூட்டம், மண்டல குழு தலைவர் இ.ஜோசப் அண்ணாதுரை தலைமையில், மாநகராட்சி உதவி ஆணையர் மாரி செல்வி முன்னிலையில் நேற்று நடைபெற்றது. இதில், அந்த மண்டலத்துக்கு உட்பட்ட மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில், மண்டலத்துக்கு உட்பட்ட பகுதிகளில் சேதமடைந்துள்ள பழைய கால்வாய்களை அகற்றி, புதிய கால்வாய்கள் அமைத்து தர வேண்டும், சேதமடைந்த சாலைகளில் பேட்ச் ஒர்க் செய்யாமல் முழு சாலையையும் புதியதாக அமைக்க வேண்டும், கால்வாய் தூர்வாரிய இடங்களில், அகற்றாமல் உள்ள கழிவுகளை அகற்ற வேண்டும் என பல்வேறு கோரிக்கைகளை மாமன்ற உறுப்பினர்கள் முன் வைத்தனர். அப்போது மாமன்ற உறுப்பினர்களின் கோரிக்கைகள் அனைத்தும் நிறைவேற்றப்படும் என மண்டல குழு தலைவர் இ.ஜோசப் அண்ணாதுரை உறுதியளித்தார். கூட்டத்தில் மண்டல குழு தலைவர் இ.ஜோசப் அண்ணாதுரை பேசியதாவது: மண்டலத்துக்குட்பட்ட பகுதிகளில் சேதமடைந்துள்ள பாதாள சாக்கடை குழாய்களை சீரமைக்க திட்ட மதிப்பீடு தயார் செய்து அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. 2 மாதத்திற்குள் அரசிடமிருந்து அனுமதி கிடைத்தால், ஜனவரி மாதம் ரூ.86 கோடி மதிப்பீட்டில் சீர் செய்யும் பணிகள் தொடங்கி நடைபெறும். அதன் பின்னர் சாலைகளில் கழிவுநீர் தேங்கி நிற்பது, அடைப்பு ஏற்பட்டது, உடைப்பு ஏற்பட்டது போன்ற பிரச்னைகள் இருக்காது.

தற்போது மழைக்காலம் தொடங்கியுள்ளது. எனவே அதிகளவில் மழை பெய்யும் போது 5 நாட்களுக்கு முன்பே அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள் தங்களுக்கு தேவையான துணிமணிகளை எடுத்துக்கொண்டு, மண்டல அலுவலகத்தில் வந்து தங்கி பணிகளில் ஈடுபட வேண்டும். மழை பாதிப்புகள் குறித்து 24 மணி நேரமும் என்னையும், சட்டமன்ற உறுப்பினரையும் தொடர்பு கொள்ளலாம், பொதுமக்கள் எந்த நேரத்தில் அழைத்தாலும் நாங்கள் சம்பவ இடத்திற்கு வர தயாராக உள்ளோம். அதிகாரிகளும் எப்போது வேண்டுமென்றாலும் எங்களை தொடர்பு கொள்ளலாம். அதேபோல அதிகாரிகளும் தயார் நிலையில் இருக்க வேண்டும். யாரும் வீட்டிற்கு சென்றுவிட்டு செல்போன்களை ஸ்விட்ச் ஆப் செய்து வைப்பது, வாக்கி டாக்கிகளை ஆப் செய்து வைப்பது போன்ற செயல்களில் ஈடுபடக்கூடாது. மழைக்காலத்தில் மழை பாதிப்புகளை உடனுக்குடன் சரிசெய்ய அனைத்து நேரங்களிலும் தயாராக இருக்க வேண்டும். மழை பாதிப்புகளை சரிசெய்ய சுமார் 100க்கும் மேற்பட்ட அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள் தயார் நிலையில் உள்ளனர்.

மரம் அறுக்கும் இயந்திரங்கள், தண்ணீர் இறைக்கும் மோட்டார்கள், மணல் மூட்டைகள், பொக்லைன் இயந்திரங்கள் என அனைத்தும் தயார் நிலையில் உள்ளது. ஆட்கள் தேவைப்பட்டால் மாநகராட்சி ஆணையரின் அனுமதி பெற்று, மேலும் சிலரை பணியில் அமர்த்த நடவடிக்கை எடுக்கப்படும். மழை பாதிப்புகள் குறித்து பொதுமக்கள் நேரடியாக சட்டமன்ற உறுப்பினர், மண்டல குழு தலைவர், மாமன்ற உறுப்பினர்கள், மாநகராட்சி அதிகாரிகள், மண்டல அலுவலகம் என தொடர்பு கொள்ளலாம். பாதிப்புகள் குறித்த புகார்கள் மீது உடனுக்குடன் நடவடிக்கை எடுக்கப்படும். மேலும் தனியார் மற்றும் பொது இடங்களில் தண்ணீர் தேங்கி நின்றால் அவற்றை உடனடியாக பொக்லைன் இயந்திரங்கள் மூலம் அப்புறப்படுத்தும் நடவடிக்கைகளில் யார் வேண்டுமென்றாலும் ஈடுபடலாம், தண்ணீர் அளவு நிரம்பும் வரை யாரும் வேடிக்கை பார்க்க வேண்டிய அவசியம் இல்லை. மழைக்காலத்தில் மாமன்ற உறுப்பினர்கள் தொடர்ந்து ஒரு, ஒரு வார்டுகளாக சென்று ஆய்வு பணிகள் மேற்கொண்டு, பாதிப்புகள் குறித்து உடனடியாக சட்டமன்ற உறுப்பினர், மண்டல குழு தலைவருக்கு தகவல் தெரிவிக்க வேண்டும். அப்போது தான் உடனடியாக அந்த பாதிப்புகளை நாங்கள் சரிசெய்து தருவோம். இவ்வாறு அவர் பேசினார். இதனை தொடர்ந்து கூட்டத்தில் கால்வாய் சீரமைப்பு, சாலை சீரமைப்பு, கல்வெட்டு அமைப்பது என ரூ.2 கோடி மதிப்பீட்டில் 36 தீர்மானங்களுக்கு அனுமதி பெறப்பட்டது.

# தீபாவளிக்கு பட்டாசு வெடிக்கும் நேரம் அறிவிப்பு!

சென்னை, நவ. 2- தீபாவளி பண்டிகை வருகிற 12ந்தேதி நாடு முழுவதும் கோலாகலமாக கொண்டாடப்பட இருக்கிறது. தீபாவளி பண்டிகை அன்று, பொதுமக்கள் புத்தாடை அணிந்து பட்டாசு வெடித்து மகிழ்ச்சியை வெளிப்படுத்துவார்கள். ஆனால், பட்டாசு வெடிப்பதால் காற்று மாசு அதிக அளவில் ஏற்படுவதாக, நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது.

இதுதொடர்பான வழக்குகளில் உச்சநீதிமன்றம் இரண்டு மணி நேரம் மட்டுமே பட்டாசு வெடிக்க அனுமதி அளித்தது. மேலும் பசுமை பட்டாசுகளை தயாரிக்கவும், வெடிக்கவும் உத்தரவிட்டது.

அதனடிப்படையில், தமிழகத்தில் இந்த ஆண்டு தீபாவளியன்று காலை 6 மணி முதல் 7 மணி வரையும் இரவு 7 மணி முதல் 8 மணி வரையும் பட்டாசு வெடிக்க அரசு அனுமதி அளித்துள்ளது. கடந்த ஆண்டும் இரண்டு மணி நேரம்தான் பட்டாசு வெடிக்க அனுமதி அளிக்கப்பட்டிருந்தது.

## திருப்பத்தூரில் நாளை

# சிவகங்கை மாவட்டக் கழக அவசர செயற்குழு கூட்டம்!

### அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் அறிவிப்பு!



சிவகங்கை, நவ. 2- திருப்பத்தூரில் சிவகங்கை மாவட்டச் செயற்குழு கூட்டம் நடைபெறுகிறது. சிவகங்கை மாவட்டக் கழக செயலாளரும், கூட்டுறவுத்துறை அமைச்சருமான கேஆர். பெரியகருப்பன் விடுத்துள்ள அறிக்கையில் கூறிஉள்ள தாவது.

நாளை (3ம் தேதி) சிவகங்கை மாவட்ட கழக அவசர செயற்குழு கூட்டம் திருப்பத்தூர் பிரபாசெல்வி திருமணமண்டபத்தில் காலை 10 மணி அளவில் நடைபெறுகிறது. இந்த கூட்டத்திற்கு மாவட்ட அவைத்தலைவர் வழக்கறிஞர் அ.கணேசன் தலைமை வகிக்கிறார்.. இக்கூட்டத்தில் கீழ்க்கண்ட பொருட்கள் கொடுத்து விவாதிக்கப் பட உள்ளது.

1. வாக்காளர் பட்டியல் நீக்கல் சேர்த்தல் தொடர்பான பணிகள்.

2. கழக வளர்ச்சி பணிகள்.

எனவே இந்த கூட்டத்தில் மாவட்டகழக நிர்வாகிகள், செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய,நகர, பேரூர் கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், சார்புஅணி நிர்வாகிகள் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு மாவட்ட செயலாளரும் அமைச்சருமான கேஆர்.பெரிய கருப்பன் விடுத்துள்ள அறிக்கையில் கூறிஉள்ளார்.

## நெல்லை மத்திய மாவட்டத்தில்

# வாக்காளர் சரிபார்ப்புப் பணியில் தீவிரமாக ஈடுபடுவீர்!

### மாவட்டப் பொறுப்பாளர் டி.பி.எம். மைதீன்கான் வேண்டுகோள்!



நெல்லை, நவ.2 - முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின்படி நெல்லை மத்திய மாவட்டத்தில் வாக்காளர் சரிபார்ப்புப் பணியில் தீவிரமாக ஈடுபடுவீர்.என நெல்லை மத்திய மாவட்டப் பொறுப்பாளர் டி.பி.எம். மைதீன்கான் கழக நிர்வாகிகளுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிவிப்பில் தெரிவித்திருப்பதாவது:

01.01.2024 தேதியை தகுதி ஏற்படுத்தும் நாளாக கொண்டு தமிழகத்தில் உள்ள வாக்காளர் பட்டியல்கள் திருத்தம் செய்திட வரைவு வாக்காளர் பட்டியலை கடந்த 27.10.2023 அன்று தமிழக தேர்தல் ஆணையம் வெளியிட்டுள்ளது.அதனைத் தொடர்ந்து 27.10.2023 முதல் 09.12.2023 வரை புதிய வாக்காளர்களை சேர்க்கவும் மற்றும் பெயர்கள் நீக்கம் செய்யவும், மனு செய்ய தேர்தல் ஆணையத்தால் கால அவகாசம் கொடுக்கப் பட்டுள்ளது.

இது தவிர 04.11.2023 சனி 05.11.2023 ஞாயிறு, 18.11.2023 சனி மற்றும் 19.11.2023 ஞாயிறு ஆகிய 4 நாட்களில் நிர்ணயிக்கப் பட்ட வாக்குச்சாவடி மையங்களில் சிறப்பு முகாம்கள் நடத்தப்பட உள்ளது.இந்த நாட்களில் விடுபட்ட வாக்காளர்களும் இடம் மாறிய வாக்காளர்களும் 01.01.2024 அன்று 18 வயது நிரம்பக் கூடிய புதிய வாக்காளர்களும் தங்களது பெயர்களை சேர்க்க, நீக்க, திருத்தங்கள் மேற்கொள்வதற்கான படிவங்களை பூர்த்தி செய்து, பூர்த்தி செய்த படிவங்களை அந்தந்த முகாம்களில் கொடுக்க வேண்டும்.

இதன் அடிப்படையில் 01.01.2024 அன்று 18 வயது நிறைந்தவர்களின் பெயர்களையும்,வாக்காளர் பட்டியலில் இதுவரை இடம் பெறாத பெயர்களையும், புதிதாக குடிபெயர்ந்துள்ள வாக்காளர்களின் பெயர்களையும் வாக்காளர் பட்டியலில் சேர்க்கவும்,

தொகுதியிலிருந்து இடம் பெயர்ந்தவர்கள் மற்றும் இறந்தவர்கள் பெயர்களை தற்போதுள்ள பட்டியலில் இருந்து நீக்கவும் தீவிர நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

நெல்லை மத்திய மாவட்டத்திற்கு உட்பட்ட மாநகர, ஒன்றிய, பகுதி, பேரூர், வட்டக் கழகச் செயலாளர்கள் வாக்குச்சாவடி முகவர்கள் (BLA 2) ஆகியோர் தங்களை இப்பணியில் முழுமையாக ஈடுபடுத்தி தாங்கள் ஆற்றிய பணியின் விவரத்தை மாவட்டக் கழகத்திற்கு அவ்வப்போது தெரியப்படுத்திட கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## சென்னையில் - முருகன் திருக்கோயில்கள்

# ஒரு நாள் சுற்றுலா பயணத் திட்டம் - 2!

### தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சி கழகம் அறிவிப்பு!

சென்னை, நவ. 2 - சென்னையில் முருகன் திருக்கோவில்கள் ஒரு நாள் சுற்றுலா பயணத்திட்டம் 1 ன் படி, சென்னை வாலாஜா சாலை சுற்றுலா வளாகத்தில் இருந்து காலை 7 மணிக்கு புறப்படும் பேருந்து கந்தகோட்டம் முருகன் திருக்கோவில், தங்கசாலை - ஏகாம்ப ரேஸ்வரர் திருக்கோவில், சிறுவாபுரி பாலமுருகன் திருக்கோவில், வடபழனி - தண்டாயுதபாணி திருக் கோவில், தேனாம்பேட்டை பாலசுப்பிரமணிய சுவாமி திருக்கோவில் ஆகிய கோவில் களுக்கு சென்று மாலை வாலாஜா சாலை சுற்றுலா வளாகத்தை வந்தடையும்.

சென்னையில் முருகன் திருக்கோவில்கள் ஒரு நாள் சுற்றுலா பயணத்திட்டம் 2 ன் படி, சென்னை வாலாஜா சாலை சுற்றுலா வளாகத்தில் இருந்து காலை 7.00 மணிக்கு புறப்படும் பேருந்து வல்லக்கோட்டை சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில், குன்றத்தூர் சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில், திருப்போரூர் கந்தசுவாமி திருக்கோயில், திருவான்மியூர் அறுபடை வீடு திருக்கோவில், மருந்தீஸ்வரர் திருக்கோவில் ஆகிய கோவில்களுக்கு சென்று மாலை வாலாஜா சாலை சுற்றுலா வளாகத்தை வந்தடையும்.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் முருகன் திருக்கோயில்கள் ஒரு நாள் சுற்றுலாவிற்கு முன்பதிவு நடைபெற்று வருகின்றது. முருகன் திருக்கோயில்கள் ஒரு நாள் சுற்றுலா குறித்த மேலும் விவரங்களுக்கு தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக கட்டணமில்லா தொலைபேசி எண் 180042 531111 மற்றும் 04425333333, 044 25333444 ஆகிய தொலைபேசி எண்களை தொடர்பு கொண்டும், வலைதள முகவரி www.ttdconline.com மூலமாகவும் விவரங்களை பெறலாம்.

## சென்னை கிழக்கு மாவட்டம் அம்பத்தூர் வடக்கு பகுதி சார்பில்

# வார்டு 79, 79அ, 80, 81, 85, 86 பாகநிலை முகவர்கள் (BLA2) ஆலோசனைக் கூட்டம்!

### ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ. - பி.டி.சி. ஜி. செல்வராஜ் அலோசனை!

சென்னை, நவ.2- கழக தலைவர் முதலமைச்சர் தளபதி அவர்களின் ஆணைக்கினங்க, இந்து சமய அறநிலையத் துறை, சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் அமைச்சர் மற்றும் சென்னை கிழக்கு மாவட்ட செயலாளர் பி.கே.சேகர்பாபு ஆலோசனைபடி அம்பத்தூர் வடக்கு பகுதியில் பாகநிலை முகவர்களின் (BLA2) ஆலோசனைக் கூட்டம் இன்று (02.11.2023 - வியாழக்கிழமை) மாலை 5.00 மணி அளவில் வார்டு 80 எம்.டி.எச். ரோடு புதூரில் அமைந்துள்ள இ.ஜெ.பி. மஹாலில் அம்பத்தூர் சட்டமன்ற உறுப்பினரும், வடக்கு பகுதி செயலாளருமான ஜோசப்சாமுவேல் தலைமையில் நடைபெறுகிறது. இக் கூட்டத்தில் தொகுதி பொறுப்பாளர் பிடிசி. ஜி.செல்வராஜ் கலந்துகொண்டு (BLA2) பாகநிலை முகவர்களுக்கு ஆலோசனைகளை வழங்கிறார்.

எனவே இக்கூட்டத்தில் தலைமை கழக நிர்வாகிகள் மாநில, மாவட்ட பகுதி கழக நிர்வாகிகள், வட்ட கழக செயலாளர்கள், பாக முகவர்கள், மாவட்ட பிரதிநிதிகள், அனைவரும் தவறாமல் கலந்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன் என்று வடக்குப் பகுதிச் செயலாளர் ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு மாவட்டச் செயலாளரும் அமைச்சருமா மா. சுப்பிரமணியன் ஆலோசனையின்படி, மாவட்ட கலை இலக்கியப் பகுத்தறிவுப் பேரவை மாவட்ட துணை அமைப்பாளர் ஆ.மாகதேவன் தலைமையில், மாவட்ட அமைப்பாளர் எம்.எஸ்.ஹரிபாபு, மாவட்ட தலைவர் ஆர்.ஜாரு_ஆனந்த், துணை தலைவர் வெ.புருஷோத்தமன், மாவட்ட துணை அமைப்பாளர்கள் ஆர்.சுரேஷ், எஸ்.மாரிமுத்து ஆகியோர் முன்னிலையில் நடைபெற்ற பேச்சு போட்டியில் வெற்றி பெற்ற மாணவியர்களுக்கு சென்னை தெற்கு மாவட்ட பொருளாளர் வேளச்சேரி எஸ்.பாஸ்கரன் எம்.சி,. சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு பரிசுகளை வழங்கினார். இந்நிகழ்வில், 178 வது வட்ட கழக செயலாளர்.த.பார்த்திபன், 178(அ) வட்ட கழக செயலாளர். தே.கோபி, மற்றும் தலைமை ஆசிரியர் அவர்களும், ஆசிரியர் பெருமக்களும் ,கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



திருவள்ளூர் மேற்கு மாவட்ட இளைஞர் அணி மாணவர் அணி மருத்துவ அணி சார்பில் நீட் தேர்விணை ரத்து செய்திட ஒன்றிய அரசினை வலியுறுத்தி மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ம.கிரண் ஏற்பாட்டில் திருவள்ளூரில் மாவட்டக் கழகச் செயலாளருமான திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ தலைமையில் திருவள்ளூர் சட்ட உறுப்பினர் வி.ஜி.ராஜேந்திரன் முன்னிலையில் மாணவ மாணவிகள் மற்றும் பொதுமக்களிடம் நீட் தேர்வை எதிர்த்து கையெழுத்து பெறப்பட்டது அருகில் மாநில மாவட்ட நிர்வாகிகள் ஆர். டி.இ.ஆதிசேசன், கே.திராவிட பக்தன், டாக்டர் வி.சி.ஆர்.குமரன், உதயமலர் பாண்டியன், சி.ஜெயபாரதி, ப.சிட்டிபாபு, எஸ்.கே.ஆதாம், வி.கிஷோர், நகரச் செயலாளர் சி.சு.ரவிச்சந்திரன், மாணவர் அணி அமைப்பாளர் முரளிசேனா, இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் டி.மோதிலால், டி.எம்.சுகுமாரன், டி.கே.பாபு, புவனேஷ்குமார், ஆர்.திலீபன், ஒன்றிய நகர பேரூர் கழகச் செயலாளர்கள் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்கள்.




குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், நேற்று (01.11.2023) சென்னை, அண்ணா பல்கலைக்கழகத்தில், தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனத்தின் சார்பில் (EDII) நடைபெற்ற விழாவில், பள்ளி மற்றும் உயர்கல்வி மாணவர்களின் 55 புதிய கண்டுபிடிப்புகளின் கண்காட்சியினை திறந்து வைத்து பார்வையிட்டார். இந்நிகழ்ச்சியில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியம், நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி தமிழச்சி தங்கப்பாண்டியன், EDII இயக்குநர் செ.உமாசங்கர், சிட்கோ மேலாண்மை இயக்குநர் திருமதி எஸ்.மதுமதி, தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி ஜெ.இன்னசன்ட் திவ்யா, தொழில் ஆணையர் இல.நிர்மல்ராஜ், அண்ணா பல்கலைக்கழக துணை வேந்தர் டாக்டர் ஆர் வேல்ராஜ், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ப்பு திட்ட இயக்குநர் முனைவர் ஜெ.யு.சந்திரகலா ஆகியோர் கலந்துகொண்டனர்.




சென்னையில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ் தலைமையில் பழங்குடியின தொழில் முனைவோர் கலந்துரையாடல் கூட்டம் நடைபெற்றது. இந்நிகழ்வின் போது தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் (தாட்கோ) மேலாண்மை இயக்குனர் க.சு.கந்தசாமி, பழங்குடியினர் நல இயக்குனர் எஸ்.அண்ணாதுரை, தமிழ்நாடு நரிக்குறவர் கூட்டமைப்பு நிறுவனர் தலைவர் ஆர்.சுப்பிரமணியன், தமிழ்நாடு பட்டியல் பழங்குடியினர் (மலையாளி) பேரவை பொதுச் செயலாளர் என்.மோகன், தென்னிந்திய பட்டியல் பழங்குடியினர் நலசங்க காரைத் தலைவர் ஆர்.ஞானசுந்தரி, பழங்குடியின உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# ‘இந்தியா’ கூட்டணி வேட்பாளரை வெற்றிபெற வைக்க அயராது பாடுபடுவோம்!

## தாம்பரம் மாநகர கழகப் பிரதிநிதிகள் கூட்டத்தில் தீர்மானம்! எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ. அறிவிப்பு!

தாம்பரம், நவ. 2 -

தாம்பரம் மாநகர தி.மு.க சார்பில் நேற்று (1.11.2023 புதன்கிழமை) மாலை 4.00 மணியளவில் மேற்கு தாம்பரம் கோன்கிருஷ்ணா திருமண மண்டபத்தில் மாநகர கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை அமைப்பாளர் இ.மனோகரன் தலைமையில் மாநகர பிரதிநிதிகள் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாநகர கழக செயலாளர் எஸ்.ஆர். ராஜா எம்.எல்.ஏ. பேசுகையில் மாநகரத்திற்கு உட்பட்ட தாம்பரம் மற்றும் பல்லாவரம் தொகுதிகளில் அடங்கிய பாக முகவர்கள் குறித்த தேதியில் தலைமை கழகத்தின் சார்பில் வழங்கப்பட்ட அடையாள அட்டைகளுடன் கலந்து சிறப்பித்திடுமாறு தேர்தல் ஆணையத்தால் அறிவிக்கப்பட்டு தலைமை கழகத்தின் அறிவுரைத்தலின் படி 04.11.2023, 05.11.2023, 18.11.2023, 19.19.2020 ஆகிய தேதிகளில் 28.11.2023, 19.11.2011 வரை நடைபெறும்.

பூர்த்தி செய்யப்பட்ட புதிய வாக்காளர்களை கண்டறிந்து இடம் மாறிய வாக்காளர்களை நீக்கம் செய்திடும் பணிகளில் பாகமுகவர்கள் மற்றும் கழக நிர்வாகிகள் முழுமையாக ஈடுபடுமாறு கேட்டுக்கொண்டார். நிகழ்ச்சியின் தொடக்கத்தில் மாநில, மாவட்ட, மாநகர, வட்டங்களில் அண்மையில் மறைந்த கழக தோழர்கள் இரங்கல் தெரிவிக்கப்பட்டது.

இதில் முன்னாள் மாவட்ட செயலாளரும் கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினருமான கும்மிடிப்பூண்டி கி.வேணு அவர்களுக்கும் இரயில்வே தொழிற்சங்க நிர்வாகி மறைந்த என்.கலிவரதன் மறைந்த மாநில சிறுபான்மை அணியின் துணை அமைப்பாளர் எல்.எஸ்.எஸ்.மோகன், தாம்பரம் பகுதியில் அரிமா சங்கத்தில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு மேற்கு தாம்பரம் ராமகிருஷ்ண மேல்நிலைப் பள்ளியில் ஏழை பயில்வதற்க்கு உதவியவரும் சமூக ஆர்வலர் மறைந்த வெங்கடேஷ்வர ராவ் மேலும் தனது இல்லத்தின் குடும்ப உதவியாளரும் தனது குடும்பத்தில் ஒருவராக வாழ்ந்து மறைந்த கழக குடும்பத்தின் முன்னால் நகர பொருளாளரும் தாம்பரம் பஞ்சாயத்தின் போதும் திமுகவின் 25வது உறுப்பினராக தன்னை கழகத்தில் இணைத்து செயலற்ற நினைவில் வாழும் விஷ்வநாதனின் புதல்வரான மறைந்த வி.வெங்கடேசன் (எ) ராஜீயின் செயல்பாட்டினை மேலும் மறைந்த கழக நிர்வாகிகள் அனைவருக்கும் இரங்கல் வாசித்து அதில் தனது இல்ல உதவியாளரும் உடன்பிறவா சகோதரர் வி.வெங்கடேசன் (எ) ராஜீ ஆகியோருக்கு இரங்கல் தெரிவிக்கப்பட்டது.

மேலும் வரவிருக்கும் நாடாளுமன்ற தேர்தலில் மதவாதம் சாதிய வாதத்திற்கு முடிவு கட்டும் வகையில் கழக தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் நல்லாட்சிக்கு அத்தாட்சியாய் தொகுதியில் போடப்படும் “இந்தியா” கூட்டணி வேட்பாளரை அதிக வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற பாடுபடுவோம் என்ற தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இக்கூட்டத்தில் மண்டல குழு தலைவர்கள் டி.காமராஜ், எஸ்.இந்திரன் டி.ஆர்.கோபி எம்.சி. ரமணி ஆதிமுலம் ,, டைகர் எஸ்.சிவா, இரா.விஜயகுமார், தி.ச.நடராஜன், மலர் மு.கருணாநிதி, பி.ஜோதிகுமார், எம்.சி.வி. கார்த்திக், சா.இராஜேஷ், எஸ்.கார்த்திக், கிரிஜா, சந்திரன், எம்.சி.சி.சுரேஷ், எம்.சி.லிங்கேஸ்வரி, பாபு, கொடி, ஆர்.தாமோதரன், பி.புகேழ்ந்தி,. எல்.பெரியநாயகம், மதுமிதா, மதன் ஹேமாவதி, சேகர், டி.டி. கே.கோட்டி, கி.முத்துமாறன், ஜா.ரவிக்குமார், ஆர். செல்வகுமார், எம்.ரவிக்குமார், மா.கன்னியப்பன், எஸ்.சரவணன், எம். வினோத், வி.முனுசாமி, எம்.சீனிவாசக்குமார், கி.வேல்மணி, எல்.பேகம், ஏ.லோகேஷ்குமார், ஏ.நசீர், விஜி, சிவகுமார், எம்.வினோத், வி.ஆனால், ஸ்ரீதர், குமார், எம்.விஜயன், ஏ.ஐசக், ஆர்.சஞ்சீவி, கு.பிரபாகரன், வ.லோகநாதன், கே.ரமேஷ்பாபு, மாடம்பாக்கம், தேனுபுரி, முருகன், யோகநாதன், சி.செழியன், மங்களபுரம், எம் பாபு, ஆர் சினா, எம் ரமேஷ், டி ஆர் முரளி, அபி ஹாரிஸ், குணசேகர், நவீனராஜா, பல்லவாரம் வழக்கறிஞர் பி.ஜி.பிரபு,, சே.முகுந்தன், எல் செல்வ பிரகாஷ், லதா, கண்ணன், ரேவதி, நாகராஜ் ,கழக தோழர்கள் பெருமளவு கலந்து கொண்டு சிறப்பித்தனர்.




சென்னை வடக்கு மாவட்டம் இராயபுரம் கிழக்கு பகுதி சார்பில் நீட் விலக்கு நம் இலக்கு எனும் கையெழுத்து இயக்கம் பகுதிச் செயலாளர் இரா.செந்தில்குமார் ஏற்பாட்டில் 51வது வட்டத்தில் நடைபெற்றது.மாவட்டச் செயலாளர் தா.இளையஅருணா, ஐட்ரீம்ஸ் இரா.மூர்த்தி எம்.எல்.ஏ, ஆகியோர் முன்னிலை வகித்து நிகழ்ச்சியை துவக்கி வைத்தனர். இதில் தா.ஜெயபாலன், பி.சேகர்,கு.சுந்தர், லோ.மோகன்,வட்ட செயலாளர் காட்டன் ஜி.சதீஸ்குமார், எஸ்.குமார்,எஸ்.சுரேஷ், அத்தோ பி.முனுசாமி, ஐ.சி.எப்.பழனி, வி.குமார்,என்.பாரி, கே.நாட்டாமை, யு.அனிபா, கே.எஸ்.குமார், கே.மணிகண்டன், தா.ரவி மற்றும் பலர் கலந்து கொண்டனர். வட்டச் செயலாளர் க.கோவிந்தராஜ் நன்றி கூறினார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### டி.என். பாபு (எ) இளவழகன்

**நவம்பர் 2 (2003)**



நீதிக்கட்சியைத் தொடர்ந்து கழகத்தில் பணியாற்றிய தனது தந்தையின் வழியொட்டி, கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு பணியாற்றியவர்.

1979 முதல் 2003 வரை திருவண்ணாமலை நகரக் கழகச் செயலாளராக தொடர்ந்து 24 ஆண்டுகள் பொறுப்பு வகித்தவர்.

1986 முதல் 1990 வரை நகர்மன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.

கற்பகம் கூட்டுறவு மொத்த பண்டக சாலை தலைவராகவும், திருவண்ணாமலை நகர கூட்டுறவு வங்கித் தலைவராகவும் பொறுப்பு வகித்தவர்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர். குறிப்பாக மிசா கைதியாக 48 நாட்களும்; 1986ல் நடைபெற்ற மொழிப் போராட்டத்தில் பங்கேற்று 45 நாட்கள் சிறையில் இருந்தவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலை! ஐ.சி.எப்.வ.முரளிதரன் தலைமையில்

# கொளத்தூர் கிழக்குப் பகுதியில் கலைஞர் நூற்றாண்டு விழா!

## கே.பாலகிருஷ்ணன் - எம்.எச்.ஜவாஹிருல்லா - சபாபதி மோகன் சிறப்புரை!

சென்னை, நவ. 2 -

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு துவக்க விழா சென்னை கிழக்கு மாவட்டம் 54 “கலைஞர் என்றால்! காலம் தந்த தமிழமுது!” எனும் நிகழ்ச்சி நாளை (3.11.2023 - .வெள்ளிக்கிழமை) மாலை 6 மணி அளவில் பெரம்பூர், செம்பியம், ராகவன் தெருவில் கொளத்தூர் கிழக்குப் பகுதிச் செயலாளர் ஐ.சி. எப். வ. முரளிதரன் தலைமையில் நடைபெறுகிறது.

இதில் சென்னை கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும் இந்து சமய அறநிலையத்துறை (ம) சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் துறை அமைச்சருமான பி.கே. சேகர்பாபு முன்னிலை வகித்து சிறப்புரையாற்றுகிறார். மேலும் மேற்குப் பகுதிச் செயாளர் எ.நாகராசன் எம்.சி., மாநில சட்ட துறை துணை செயலாளர் கே. சந்துரு, சி. மகேஷ்குமார், மண்டல குழு தலைவர் சரிதா மகேஷ்குமார் , மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் எஸ்.தனசேகர் ஆகியோரும் முன்னிலை வகிக்கின்றனர்.

பகுதி கழக நிர்வாகிகள் பி.பழனி, இலா.இளங்கோவன், எஸ்.கே.ரமேஷ், எம்.தாவூத்பீ, எல்.டி. தாமஸ், வட்டசெயலாளர்கள் டி.சந்திரசேகர், என்.பொன்முடி, பிடிசி. ரவி, பி.ஊமைதுரை, கே.ஜார்ஜ்குமார், கே.பி. ஆதவன்மணி, மாமன்ற உறுப்பினர்கள் ச.ஸ்ரீதணி, யோக பிரியா தனசேகர், பி.அமுதா, கே.சாரதா, மாவட்ட பிரதிநிதிகள் எஸ்.டி.பாஸ்கர், க.விஜயரங்கம், எஸ்.முரளி, கே.சந்தானம், பொன்னிவளவன், சி.சந்திரசேகர், எம். துளசி, எஸ்.பி.சதீஷ்பாபு, வெங்கடேசன், ஜி.செல்வம், பொன்புகழேந்தி, புரசை.ஜி.ராமகிருஷ்ணன் ஆகியோர் வரவேற்கின்றனர்.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் கே.பாலகிருஷ்ணன், மனிதய நேய மக்கள் கட்சித் தலைவர் எம்.எச்.ஜவாஹிருல்லா எம்.எல்.ஏ., கழக கொள்கை பரப்பு செயலாளர் சபாபதி மோகன், மேயர் பிரியாராஜன், கழக அயலக அணி தலைவர் கலாநிதி வீராசாமி எம்.பி., கழக சட்டதிட்ட திருத்தக் குழுச் செயலாளர் இரா.கிரிராஜன் எம்.பி., முன்னாள் எம்.எல்.ஏ. ப.ரங்கநாதன், கொளத்தூர் தொகுதி பொறுப்பாளர் இரா.விடுதலை, தேவஜவஹர், எஸ்.பன்னீர் செல்வம், துரைகண்ணன், ஆர்.எஸ்.சித்திக், எஸ். அசோக்குமார் மற்றும் பலர் கலந்து கொள்கின்றனர். 70-வது வட்டச் செயலாளர் பா.அன்பரசு நன்றி கூறுகிறார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட, பகுதிக் கழக இந்நாள், முன்னாள் நிர்வாகிகள், கழக அணிகளின் நிர்வாகிகள், வட்டக் கழகச் செயலாளர்கள், மாவட்டப் பிரதிநிதிகள், கழகச்செயல்வீரர்கள் கலந்து கொள்ளுமாறு பகுதிச் செயலாளர் ஐ.சி. எவ்.வ. முரளிதரன் கேட்டுக் கொண்டுள்ளார்

ஊதிய உயர்வு நிலுவைத் தொகை - போனஸ் - அகவிலைப்படி உயர்வு வழங்கிய

# முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு மின் கழக தொ.மு.ச. நன்றி!

## சங்கப் பொதுச் செயலாளர் பா.மணிமாறன் அறிக்கை!

சென்னை, நவ. 2-

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா பரிசாக ஊதிய உயர்வு நிலுவைத் தொகை, போனஸ், அகவிலைப்படி உயர்வு தமிழ்நாடு மின்வாரியத் தொழிலாளர்களுக்கு வழங்கிய தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து தமிழ்நாடு மின் கழகத் தொமுச பொதுச் செயலாளர் பா.மணிமாறன் அறிக்கை வெளியிட்டுள்ளார்.



அவரது அறிக்கை வருமாறு:-

தமிழ்நாடு மின்சார வாரியத்தில் பணிபுரியும் தொழிலாளர்கள், பொறியாளர்கள் மற்றும் அலுவலர்களுக்கு ஏராளமான சலுகைகள் வழங்கி அவர்களின் வாழ்வாதாரம் உயர்த்திய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை போற்றும் விதமாக, 01.12.2019 முதல் புதிய ஊதிய உயர்வு, கருணைத் தொகையுடன் கூடிய 20 சதவிகிதம் போனஸ், 4 சதவிகிதம் அகவிலைப்படி உயர்வு வழங்கிய தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்.

**ஊதிய உயர்வின் சிறப்புகள்**

6 சதவிகிதம் ஊதிய உயர்வு, 12/2019 முதல் 03/2022 வரை 28 மாதங்களுக்கு ரூ.500/-, ஊதிய உயர்வு நிலுவைத்தொகை 01.04.2022 முதல் 31.05.2023 வரை, பத்து வருடங்கள் பணி முடித்தவர்களுக்கு சர்வீஸ் வெயிட்டேஜ் 3 சதவிகிதம் என அனைவரும் மனம் மகிழும் வண்ணம் ஜூன் மாதம் வழங்கினார்.

தற்போது முதல் தவணையாக ஊதிய உயர்வு நிலுவைத் தொகையும், மின்வாரியத் தொழிலாளர்கள், பொறியாளர்கள் மற்றும் அலுவலர்களுக்கு வழங்கிய தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியினை தெரிவித்துக் கொள்கின்றோம்.

கருணைத்தொகையுடன்போனஸ் மின்வாரியத் தொழிலாளர்களுக்கு கருணைத் தொகையுடன் போனஸ் 20 சதவிகிதம் என அதிகபட்சமாக ரூ. 16,800/ வழங்கியவர், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். பிறகு வந்த அ.தி.மு.க. ஆட்சியில் இது 10 சதவிகிதமாக குறைத்து வழங்கினார்கள். அதை மீண்டும் 20 சதவிகிதமாக உயர்த்தி, தொழிலாளர்கள் மனம் மகிழும் வண்ணம் உத்தரவு வழங்கியுள்ள முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியினை தெரிவித்துக் கொள்கின்றோம்.

**அகவிலைப்படி உயர்வு**

முதலமைச்சர் அவர்கள் பொறுப்பு ஏற்றவுடன் மின்வாரியத்தில் பணிபுரிகிறவர்களுக்கு அகவிலைப்படி உயர்வை உடனுக்குடன் வழங்கி வருகிறார்கள். 01.07.2023 முதல் 4 சதவிகிதம் முன்தேதியிட்டு அகவிலைப்படி உயர்வை 42 சதவிகிதத்திலிருந்து 46 சதவிகிதமாக உயர்த்தி வழங்கியுள்ளார்கள்.


இதனால் மின்வாரி யத்தில் பணிபுரியும் தொழிலாளர்கள், பொறியாளர்கள் மற்றும் அலுவலர்கள் என சுமார் 85,000 பணியாளர்களும், மின்வாரியத்தில் பணிபுரிந்து ஓய்வு பெற்றவர்களும் என சுமார் 1,00,000க்கு மேற்பட்டவர்களும் பயன் பெறுவார்கள்.

தமிழ்நாடு மின்சார வாரியத்தின் கடும் நிதி சுமையிலும், தமிழ்நாடு மின்சார வாரியத்தில் பணிபுரியும் தொழிலாளர்கள், பொறியாளர்கள் மற்றும் அலுவலர்களுக்கு ஊதிய உயர்வு நிலுவைத்தொகை, கருணைத் தொகையுடன் போனஸ் 20 சதவிகிதம் மற்றும் 4 சதவிகிதம் அகவிலைப்படி உயர்வை, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா பரிசாக வழங்கிய தொழிலாளர்களின் நலன் பாதுகாக்கும், மக்கள் நலன் பாதுகாக்கும், திராவிட மாடல் அரசின் முதலமைச்சர் அவர்களுக்கு எங்களது வாழ்நாள் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இவ்வாறு பா.மணிமாறன் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



பம்மல் தெற்கு பகுதி வாக்குசாவடி நிலை முகவர்கள் ஆலோசனைக் கூட்டம் மாவட்ட செயலாளர், அமைச்சர் தா.மோ.அன்பரசன் அறிவுறுத்தலின்படி பம்மல் தெற்கு பகுதி செயலாளர் மண்டலக் குழுத் தலைவர் வே.கருணாநிதி வரவேற்புரையில் அவைத் தலைவர் ப.காளீஸ்வரன் தலைமையில், பகுதி பொருளாளர் ஆர்.உமாசங்கர், பன்னீர்செல்வம், பா.கவிதா,துரை இளங்கோவன், பா.டில்லி, பி.ஜே.வேந்தன், என்.கே.ரவிச்சந்தின், இரா.கந்தவேலு, ரா.கோகுல் ஆகியோர் முன்னிலையில் 88 பாகங்களுக்கான வாக்குச்சாவடி நிலை முகவர்கள் ஆலோ சனை கூட்டம் பம்மல்லில் நடைபெற்றது. கூட்டதில் பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் காஞ்சி வடக்கு மாவட்ட துணை செயலாளர் இ.கருணாநிதி, பல்லாவரம் தொகுதி பார்வையாளர் மாநில மருத்துவரணி துணை செயலாளர் ச.ரமேஷ், மாவட்ட கழகத்தினால் நியமிக்கப்பட்ட பார்வையாளர்கள் துணை மேயர் தாம்பரம் மாநகர அவைத் தலைவர் கோ.காமராஜ், சி.பார்த்தசாரதி, அ.ராமச்சந்திர ராஜா ஆகியோர் ஆலோசனை வழங்கினர். கூட்டத்தில் கலந்து கொண்ட அனைவருக்கும் பகுதிச் செயலாளர் – மண்டலக் குழுத் தலைவர் வே.கருணாநிதி ஏற்பாட்டில் அறுசுவை உணவு வழங்கப்பட்டது. வட்ட செயலாளர் வி.எஸ்.ஜெகநாதன் நன்றி கூறினார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (1.11.2023) தலைமைச் செயலகத்தில், இந்து சமய அறநிலையத்துறை மூலம் செயல்படுத்தப்படும் ஒருகால பூஜை திட்டத்தினை விரிவுப்படுத்தும் வகையில், நிதி வசதி குறைவாக உள்ள 2,000 திருக்கோயில்களில் ஒருகால பூஜை மேற்கொள்வதற்கு ஏதுவாக ஒவ்வொரு திருக்கோயிலுக்கும் தலா 2 இலட்சம் ரூபாய் வீதம் மொத்தம் 40 கோடி ரூபாய்க்கான காசோலையினை தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்தில் வைப்பு நிதியாக முதலீடு செய்யும் விதமாக அந்நிறுவனத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் ஆர்.அம்பலவாணனிடம் வழங்கினார். இந்நிகழ்ச்சியில், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா, இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் க.வீ.முரளீதரன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (1.11.2023) தலைமைச் செயலகத்தில், அசோக் லேலண்ட் நிறுவனத்தின் 75-வது ஆண்டு நிறைவடைந்ததையொட்டி, அந்நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர் ஷேணு அகர்வால், அமைப்புத் தலைவர் என்.வி. பாலசந்தர், துணைத் தலைவர் டி. சசிகுமார் ஆகியோர் சந்தித்தனர். உடன் தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா உள்ளார்.

### இந்து சமய அறநிலையத்துறை சார்பில் - மேலும்

# 2,000 கோயில்களுக்கு ஒருகால பூஜை திட்டம் விரிவாக்கம்!

## ரூ.40 கோடி வைப்பு நிதிக்கான காசோலை - முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

சென்னை, நவ. 2 -

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (1.11.2023) தலைமைச் செயலகத்தில், இந்து சமய அறநிலையத்துறை மூலம் செயல்படுத்தப்படும் ஒருகால பூஜை திட்டத்தினை விரிவுப்படுத்தும் வகையில் நிதி வசதி குறைவாக உள்ள 2,000 திருக்கோயில்களில் ஒருகால பூஜை மேற்கொள்வதற்கு ஏதுவாக ஒவ்வொரு திருக்கோயிலுக்கும் தலா 2 இலட்சம் ரூபாய் வீதம் மொத்தம் 40 கோடி ரூபாய்க்கான காசோலையினை தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்தில் வைப்பு நிதியாக முதலீடு செய்யும் விதமாக தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவ னத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் ஆர்.அம்பல வாணனிடம் வழங்கினார்.

இந்து சமய அறநிலையத்துறையின் நிர்வாக கட்டுப்பாட்டிலுள்ள நிதி வசதி குறைவாக உள்ள ஒரு கால பூஜை கூட செய்திட இயலாத திருக்கோயில்களுக்கு உதவும் வகையில் ஒரு கால பூஜைத் திட்டம் தற்போது செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ், ஒவ்வொரு திருக்கோயிலின் பெயரிலும் ஒரு இலட்சம் ரூபாய் முதலீடு செய்யப்பட்டு அதிலிருந்து கிடைக் கப்பெறும் வட்டித் தொகையிலிருந்து பூஜை செலவினங்கள் மேற்கொள்ளப்பட்டு வந்தன.

இந்நிலையில் விலைவாசி உயர்வின் காரணமாக பூஜை செலவினத்திற்கு பற்றாக்குறை ஏற்பட்ட நிலையை ஈடுகட்டும் வகையில் 2021-2022 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில், "12,959 திருக்கோயில்களுக்கு ஒரு கால பூஜைத் திட்டத்தை செயல்படுத்த ரூ.130 கோடி நிலை நிதி ஏற்படுத்தப்படும்" என அறிவிக் கப்பட்டது. அதன்படி, ஒருகால பூஜை நடைபெறும் 12,959 திருக்கோயில்களுக்கு ஏற்கனவே வைப்பு நிதியாக ஒவ்வொரு கோயிலுக்கும் வழங்கப்பட்டிருந்த ஒரு இலட்சம் ரூபாயை 2 இலட்சம் ரூபாயாக உயர்த்தி அரசு மானியமாக ரூ.130 கோடிக்கான காசோலையினை தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்தில் வைப்பு நிதியாக முதலீடு செய்யப்பட்டது.

மேலும், 2022-2023ஆம் ஆண்டில் கூடுதலாக 2,000 திருக்கோயில்களுக்கு இத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டு அரசு மானியமாக 40 கோடி ரூபாய்க்கான காசோலை தமிழ்நாடு போக்கு வரத்து வளர்ச்சி நிதி நிறுவனத்தில் வைப்பு நிதியாக முதலீடு செய்யப்பட்டது.

2023-2024 ஆம் ஆண்டிற்கான இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் துறை மானியக் கோரிக்கையில் "ஒரு கால பூஜைத் திட்டத்தின் கீழ் நிதிவசதியற்ற 15,000 திருக்கோயில்கள் பயன்பெற்று வருகின்றன. இத்திட்டம், கூடுதலாக 2,000 நிதி வசதியற்ற திருக்கோயில்களுக்கு இவ்வாண்டு விரிவுப் படுத்தப்படும். இதற்கான அரசு மானியமாக ரூ.30 கோடியும் பொதுநல நிதியாக ரூ.10 கோடியும் வழங்கப்படும். இத்திட்டத்தில் சேர்க்கப்படும் 2,000 திருக்கோயில்களில் பணிபுரியும் அர்ச்சகர்களுக்கு மாத உதவித் தொகை ரூ.1,000 வழங்கப்படும்" என்று அறிவிக்கப்பட்டது.

அதன்படி, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், ஒருகால பூஜை திட்டத்தினை மேலும் 2,000 திருக்கோயில்களுக்கு விரிவுப்படுத்தும் வகையில் ஒவ்வொரு திருக்கோயிலுக்கும் தலா 2 இலட்சம் ரூபாய் வீதம் மொத்தம் 40 கோடி ரூபாய்க்கான காசோலையினை தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்தில் வைப்பு நிதியாக முதலீடு செய்யும் விதமாக தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநரிடம் நேற்று வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர் பாபு, தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா, ஆணையர் க.வீ. முரளீதரன், கூடுதல் ஆணையர் அ.சங்கர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.







பல்வேறு துறைகளில் தொலைநோக்குப் பார்வையுடன், முத்தமிழறிஞர் கலைஞர் செயல்படுத்திய திட்டங்கள், உருவாக்கிய கட்டமைப்புகள் குறித்து இந்தப் பகுதியில் பார்த்து வருகிறோம். இந்த வாரம் **தமிழ் இணையக் கல்விக் கழகம்!**



42

# இடம் பொருள் கலைஞர்






# தமிழ் இணையக் கல்விக் கழகம்

## உலகத் தமிழர்களை இணைக்கும் பல்கலை!

*1999*-ஆம் ஆண்டு பிப்ரவரி. உலகம் தமிழ்நாட்டைத் திரும்பிப் பார்த்த முக்கிய நிகழ்வு நடைபெற்றது. **'தமிழ்நெட்-99'** என்ற தலைப்பில், இரண்டு நாள் தமிழ் இணையம் தொடர்பான மாநாடு சென்னையில் நடைபெற்றது.

உலகம் முழுவதிலும் இருந்து தமிழறிஞர்கள், மென்பொறியாளர்கள், தகவல்தொழில்நுட்ப வல்லுநர்கள் எனப் பலர் கலந்துகொண்ட இந்த நிகழ்வில் கணினியில் தமிழ் விசைப்பலகையைத் தரப்படுத்துதல், பல்லூடக பயன்பாடுகளில் தமிழைச் செயல்படுத்துதல் உள்ளிட்ட பல முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டன. அப்போது பேசிய சாம் பிட்ரோடா போன்ற அறிஞர்கள், 'தமிழைப் பொருளாதார மொழி ஆக்குவதற்கு உலக அங்கீகாரம் வேண்டும். அதனைப் பெற தமிழ், பரவலாகப் பயன்படுத்தக் கூடிய மொழியாக வேண்டும். தமிழ் இணையம் ஆக்கப்பூர்வமாகச் செயல்பட்டால், தமிழ் நிச்சயமாக உலக உபயோக மொழியாக உருவாகும்' என்று குறிப்பிட்டார்கள்.

அதைத் தொடர்ந்து, 'வருங்காலத்தில் கணிப்பொறியிலும் இணையத்திலும் ஏற்படும் புரட்சிகரமான பலவித வளர்ச்சிகளுக்கு இணையாக, தமிழ் மொழியைச் செயல்படுத்த உள்ள வாய்ப்புகளை நிறைவேற்ற, தீவிர ஆய்வுகளை உடனடியாக உலகளவில் மேற்கொள்ள வேண்டும். இதற்காக தமிழ்நாட்டில் ஒரு குறிப்பிட்ட தமிழ் இணைய நிறுவனத்தையும், உலகளவில் ஒரு தமிழ் இணைய வகைத் தொடர்பு அமைப்பையும் உருவாக்க வேண்டும்' என்று முடிவெடுக்கப்பட்டது.


### பரவும் தமிழ், அறிவியல் தமிழ்

அந்தத் திட்டத்துக்குச் செயல்வடிவம் கொடுக்கும்விதமாக, அந்த மாநாட்டிலேயே, 'வெளிநாட்டில் இருப்பவர்களும் தமிழ் பயில்வதற்காக ஒரு 'விர்ச்சுவல் யூனிவர்சிட்டி'யை (மெய்நிகர் பல்கலைக்கழகம்) இணையத்தின் மூலம் துவக்கலாம் என்று முடிவு செய்திருக்கிறோம். **'உலகத் தமிழ் இணையப் பல்கலைக்கழகம்'** என்று அதற்கு உங்கள் அனுமதியோடு பெயர் சூட்டுகிறேன்' என்று அறிவித்தார் முத்தமிழறிஞர் கலைஞர்.

அறிவிப்பு வந்தவுடனேயே ஆக்கப்பணிகள் தொடங்கப்பட்டன. இதன் தோற்றத்துக்கு ஆலோசனைகள் வழங்கிட, அன்றைய தமிழ்நாடு மாநில உயர்கல்விக் குழுத் துணைத் தலைவராக இருந்த முனைவர் மு.அனந்தகிருஷ்ணன் தலைமையில், 1999-ஆம் ஆண்டு மார்ச் 5 அன்று ஓர் ஆலோசனைக் குழு அமைக்கப்பட்டது. அதற்குப் பிறகு அதே ஆண்டு ஆகஸ்ட் 19 அன்று, தமிழ் இணையப் பல்கலைக்கழகத்துக்காக WWW. tamilvirtualuniv.org என்ற இணைய தளப் பெயர் பதிவு செய்யப்பட்டது.



அதைத் தொடர்ந்து, உலகத் தமிழ் இணையப் பல்கலைக்கழகம் அமைப்பது குறித்து ஆராய்ந்து, அரசுக்கு அறிக்கை வழங்கிட வேண்டுமென்று கேட்டுக் கொள்ளப்பட்டு, அந்தப் பணியை அண்ணா பல்கலைக் கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் முனைவர் வ.செ.குழந்தைசாமி அவர்கள் தலைமையில், செப்டம்பர் 6 அன்று ஓர் உயர்மட்டக் குழுவை அமைத்தது, கழக அரசு.




ஒன்றிய அரசில் அமைச்சராக இருந்த முரசொலி மாறன் அவர்களும் மேற்கண்ட குழுக்களுடன் தன் சிந்தனைகளைப் பகிர்ந்துகொண்டு 'தமிழ் பரவுவது மாத்திரமல்ல, அது அறிவியல் தமிழாகவும் இருக்க வேண்டும்' என்று வலியுறுத்தினார்.

### தமிழர்களை இணைக்கும் பல்கலைக்கழகம்

தொடர்ந்து 2001-ஆம் ஆண்டு பிப்ரவரி 17 அன்று, தமிழ் இணையப் பல்கலைக்கழகம் தொடங்கப்பட்டது. அப்போது பேசிய கலைஞர், "சொன்னதைச் செய்வோம், செய்வதைச் சொல்வோம்" என்ற இந்த வாசகத்தை நாங்கள் எங்கள் கட்சியின் தேர்தல் அறிக்கையிலே குறிப்பிடுவது வழக்கம். ஆனால், இதிலே ஒரு வேறுபாடு, சொன்னதைச் செய்வோம் என்பது மாத்திரமல்ல. சொல்லாததையும் செய்திருக்கிறோம். தேர்தல் அறிக்கையிலே சொல்லப்படாததையும் செய்திருக்கிறோம். அதுதான் இந்தப் பல்கலைக் கழகம்" என்றார்.

அந்த சமயத்தில், தமிழ்நாட்டில் மட்டும் ஏறத்தாழ 6 கோடிக்கும் மேற்பட்ட தமிழர்கள் இருந்தனர். இலங்கை, மலேசியா, ரீயூனியன், இங்கிலாந்து, ஆப்பிரிக்கா, பர்மா, சிங்கப்பூர், கனடா, ஃபிரான்ஸ், மொரீசியஸ், ஆஸ்திரேலியா, வளைகுடா நாடுகள், கயானா, ஃபிஜி தீவு, செஷல்ஸ் உள்ளிட்ட இதர நாடுகளில் இருந்த தமிழர்களின் எண்ணிக்கை சுமார் 1 கோடிக்கும் அதிகமாக இருந்தது. எனவே இது, **'உலகத் தமிழ் இணையப் பல்கலைக்கழகம்'** என்று பெயர் பெற்றிருப்பதைவிட, அதற்குள்ள பொருள் என்னவென்றால், உலகத் தமிழர்களை இணைக்கும் பல்கலைக்கழகம்' என்றார் கலைஞர்.

### எச்சமாக நின்று வாழும்!

கலைஞர் மேலும் தன் உரையில், "இன்று விஞ்ஞான உலகத்திலே இந்த சாஃப்ட்வேருக்கு, கம்ப்யூட்டருக்கு, இந்த இணையத்திற்கு ஒரு தலையாய இடம் ஏற்பட்டுவிட்டது. அந்தத் தலையாய இடத்தை இந்தியாவைப் பொறுத்தவரையில் இப்போது தமிழகம்தான் பெற்றிருக்கிறது என்பதை நான் பெருமையோடு சொல்லிக் கொள்வேன். வேறு எந்த மாநிலத்திலும் தமிழகத்திலே வளர்ந்துள்ள அளவிற்கு இந்தத் தொழில்நுட்பம் வளரவில்லை.

எனக்குப் பெருமகிழ்ச்சி என்னவென்றால், இந்தத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு தொழிலை மாத்திரம் வளர்க்கவில்லை, தமிழையும் வளர்க்கிறோமே என்பதுதான். **வீழ்வது நாமாக இருப்பினும், வாழ்வது தமிழாக இருக்கட்டும்** என்பது நான் அடிக்கடி சொல்லி வருகின்ற சூளுரை. அந்த சூளுரைக்கேற்ப, தமிழ் இணையப் பல்கலைக்கழகம் நமக்கெல்லாம் எச்சமாக நின்று வாழ்க!" என்று வாழ்த்தினார்.

சென்னை, கோட்டூர்புரம் காந்தி மண்டப சாலையில் அண்ணா நூற்றாண்டு நூலகம், மெட்ராஸ் ஸ்கூல் ஆஃப் எகனாமிக்ஸ் ஆகியவற்றுக்கு அருகில் அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் தற்போது 'தமிழ் இணையக் கல்விக் கழகம்' என்ற பெயரில் இந்தப் பல்கலைக்கழகம் செயல்பட்டு வருகிறது. உலகம் முழுவதும் உள்ள தமிழர்களுக்கும், தமிழ் மொழியைக் கற்க விரும்பும் இதர மொழியினருக்கும் மழலைக் கல்வி, சான்றிதழ், பட்டயம், மேற்பட்டயம், பட்டம் எனப் பல கட்டமாகத் தமிழ் மொழி இணையம் மூலம் கற்பிக்கப்பட்டு வருகிறது.

**கலைஞர் வாழ்கிறார்... தமிழ் வளர்கிறது..!**

**...வலம் வருவோம்**

தற்போது இந்தத் தமிழ் இணையக் கல்விக் கழகம் www.tamilvu.org என்ற இணையதளப் பெயரில் இயங்கி வருகிறது. இதில் தமிழின் செவ்விலக்கியங்கள், தமிழ் இலக்கண விதிகள், தமிழ் இணைச்சொல் அகராதி, பிழை திருத்தும் வசதி, மின் அஞ்சல், கையெழுத்து உணர்தல், ஒலி உணர்தல், எழுத்துரு உணர்தல், ஓலைச்சுவடிகளை அறிதல் போன்ற பல வசதிகள் உள்ளன.

மேலும், tamildigitallibrary.in என்ற தளத்தில் அற்புதமான மின்னூலகம் ஒன்றையும் தமிழ் இணையக் கல்விக் கழகம் நடத்தி வருகிறது. இங்கு அரிய தமிழ், ஆங்கில நூல்கள், பருவ இதழ்கள், கீழடி உள்ளிட்ட தொல்லியல் அகழாய்வு தொடர்பான தகவல்கள் போன்ற பல தகவல்கள் கொட்டிக் கிடக்கின்றன. இவற்றை எந்தக் கட்டணமும் இல்லாமல் பயன்படுத்த முடியும் என்பது கூடுதல் சிறப்பு.

## வாசிப்புப் பழக்கம் உருவாக்குவோம்!

**மா**ணவர்களிடம் நாளுக்கு நாள் குறைந்துகொண்டே வருகிறது வாசிப்புப் பழக்கம். மீண்டும் அதற்குப் புத்துயிர் அளிக்க வேண்டியது காலத்தின் கட்டாயம். அதை எப்படியெல்லாம் செய்யலாம், மக்களிடம் எப்படிப் பேரியக்கமாகக் கொண்டுச் செல்லலாம் என்பதற்கு வழிகாட்டி நூலாக வெளிவந்துள்ளது **'வாசிப்புப் பேரியக்கம்'** என்கிற இந்தச் சிறுநூல்.




குழந்தைகளுக்கான சிறார் படைப்புகளைத் தொடர்ந்து எழுதிவரும் விழியன் மற்றும் விஷ்ணுபுரம் சரவணன் ஆகியோர் கூட்டாக எழுதியுள்ள இந்நூலினை 'புக்ஸ் ஃபார் சில்ட்ரன்ஸ்' வெளியிட்டுள்ளது.

செய்தித்தாள் வாசிப்பது, நூலகம் பயன்படுத்துவது என பாடநூல்களைத் தாண்டி அவர்களைப் பண்படுத்துவதற்கான முன்வரைவாக இந்த நூலினைப் பார்க்க முடிகிறது. மாணவர்களைக் கையாளும் ஆசிரியர்களும், வாசிப்புப் பழக்கத்தை ஏற்படுத்த வேண்டும் என முயலும் சமூக ஆர்வலர்களும் அவசியம் வாசிக்க வேண்டிய நூல். அனைவரிடமும் சென்று சேர வேண்டும்.

## ஃப்ளாஷ்பேக்



## பெரியாரின் காதுகுத்து!



வீரமணி

**எ**ன் தந்தை திராவிடர் கழகத்தில் மாவட்ட அளவிலான பொறுப்பிலிருந்தவர். அதனாலேயே எங்கள் குடும்பத்தில் நடக்கும் அனைத்து விழாக்களுக்கும் பெரியாரை அழைப்பது வழக்கமாக இருந்தது. என் சகோதரிகளுக்கும் எனக்கும் தமிழரசி, பெண்ணரசி, மங்கையற்கரசி, கலையரசி, வீரமணி என்று தந்தை பெரியார்தான் பெயர் வைத்தார். 1960-ஆம் ஆண்டு நவம்பர் 19 அன்று உசிலம்பட்டியில் நடைபெற்ற காதணி விழாவில், என் அக்காக்கள் தமிழரசி, பெண்ணரசி இருவருக்கும் தந்தை பெரியார் மடியில் வைத்து, காது குத்தினார்கள். அப்போது பெரியார் என் தந்தை திருமால் அவர்களிடம், 'நிறைய செலவு செய்து விழா எடுக்கிறாய், நான் வந்து சென்றதுக்கு, நீ அவசியம் நன்கொடை வழங்க வேண்டும்' என்று சொன்னாராம்.

**-தி.வீரமணி, கிளைக் கழகப் பிரதிநிதி, மணப்பாறை, திருச்சி மாவட்டம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறு குறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600 018. வாட்ஸ்அப் எண்:90033-24473, மின்னஞ்சல் youthwing@dmk.in


## கருவூலம்

### தேர்தல் பிரச்சார உத்திகள்!

**1957-ஆம் ஆண்டு தேர்தலின்போது கழகத்தின் பிரச்சார முறையும், சுவரொட்டிகளும் மக்களை ஈர்த்தன. கழகத்தின் 'போஸ்டர்' பிரச்சாரத்துக்கு முன்னால் வேறு கட்சிகளால் ஈடு கொடுக்க முடியவில்லை. இந்தப் பிரச்சார முறைகள், அப்போது இருந்த மற்ற கட்சிகளைக் காட்டிலும், கழகத்தின் மீதும், பேரறிஞர் அண்ணாவின் மீதும் மக்களுக்கு நம்பிக்கைக் கீற்று ஏற்பட வழி செய்தன. அப்போது 15 இடங்களில் வெற்றிபெற்று இருந்தாலும், 30 இடங்களில் மிகக் குறைந்த வாக்குகள் வித்தியாசத்தில்தான் கழகம் தோல்வி கண்டிருந்தது.**

## திராவிடத்தால் வாழ்கிறோம்

288




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/21 - 23 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/21-23. Phone : 28179191, 28179131